NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
WE OFFER SERVICES IN:
Real Estate
Corporate Law
Litigation
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

February 2018
# எகுருவி
ekuruvi.com

Bring your parents & Grandparents worry free!
SuperVisa. Today
416 321 6000
support@supervisa.today



# இலங்கையில் கல்வி, இயற்கை வேளாண்மை பயணம்

புதிய
## வெளிச்சம்

MORTGAGE ALLIANCE THE GUARDIAN
GET A TEAM OF EXPERIENCED PROFESSIONALS WORKING FOR YOU.
WE HAVE THE Right Mortgage for you!
Cell : (416) 830-3241
Tel : (416) 556-7002
Fax : (416) 556-5115
info@mortgageguardian.ca
Gini Annarasa
Mortgage Broker
Cell : (416) 830-3241
80 Nashdene Rd, Unit D221-222, Toronto, ON M1V5K4
www.mortgageguardian.ca

DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON. M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services
Oil Change
$24.99 + tax
Conditions apply.
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21
Regal Realty Inc., Brokerage*
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com

GT Brokers
Protect You & Your Family
"JOIN OUR TEAM"
Get your industry licence at no cost...
Comprehensive skills training and mentoring by over 30 yrs.Experienced industry legend
Free in class teaching
Guna Thuraisingham
416 528 1407

வீடு விற்க... வாங்க...
Ram Krishnamurthy
SALES REPRESENTATIVE
Direct 416-526-4996
ROYAL LEPAGE
IGNITE REALTY- BROKERAGE 795 Milner Ave. Toronto. ON M1B 3C3 | Off: 416-282-3333

ARE YOU FEELING PAIN? WE CAN HELP!
PRO-LIFE WELLNESS CENTRE
OPEN 7 DAYS
PHYSIO
ORTHOTICS
CHIRO
WSIB
MASSAGE
CAR ACCIDENTS
AJAY THAVAM 416.704.8074
Call 416 357 2808
1-1221 Markham Rd Toronto
prolifewellnesscentre.com

We Make Your Water Clean & Clear
Thermo Care Heating & Cooling Inc.
416 825 9373 416 640 1174

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com

www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com

## நம்பிக்கை தந்த சூத்தக் கத்தரிக்காய் சிறுமி

மாற்றம் ஒன்று தான் மாறாதது என்பார்கள். அதனால்தானோ என்னவோ மாற்றங்களைத்தான் எமது சமூகம் எதிர்பார்த்து நிற்கின்றது.

மூன்று தசாப்தகால யுத்தம் மனிதப் பேரழிவுகளோடு முடிவிற்கு கொண்டு வரப்பட்ட எமது மண்ணில் பல்வேறு விதமான மாற்றங்களுக்காக எமது சமூகம் காத்திருக்கின்றது.

கொடிய யுத்தம் ஏற்படுத்தி விட்டுள்ள அழிவுகளை தாண்டி தொடரும் வாழ்வாதாரத்தின் மீதான இரகசியமான யுத்தத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் எமது சமூகம் நிற்கவைக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தில் தன்னிறைவு, வளமான கல்வி மற்றும் சுகாதாரமான வாழ்கை முறை என்பவை பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் எமது மண்ணில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை கடந்த வருடம் புதிய வெளிச்சத்தின் மூலமாக நாம் கண்டடைந்திருந்தோம்.

கடந்த வருடத்தின் அவதானிப்புகளின் அடிப்படையில் இம்முறை கல்வி மற்றும் விவசாயம் ஆகிய இரு பெரும் விடயங்களில் நாம் கவனம் செலுத்தினோம்.

இயற்கை விவசாய நடவடிக்கைகள் மூலமாக எமது மக்களின் வாழ்வாதாரங்களை வளப்படுத்த முடியும் என்று நாம் நம்பினோம்.

அத்துடன் ஆரோக்கியமான உற்பத்திகளின் அவசியத்தையும் எமது எதிர்கால இருப்பிற்கான சவால்களையும் எமது மக்களோடு பகிர்ந்து கொள்ளவும் அவற்றை நோக்கிய ஈடுபாட்டை அதிகரிக்கவும் இந்த ஆண்டு பதிய வெளிச்சம் பயணப்பட்டிருந்தது.

அதில் கணிசமான வெற்றியினையும் நாம் பெற்றிருக்கின்றோம்.

புதிய வெளிச்சம் செயலமர்வுகள் நிறைவடைந்த பின்னர் அங்குள்ள மக்கள் மத்தியில் இயற்கை விவாயத்தின் அவசியம், தொடர்ச்சியான ஆசிரியர்களது களப்பயிற்சி, இளைஞர்களுக்கான ஊக்குவித்தல் குறித்த சிந்தனைகள் பல்வேறு மட்டங்களிலும் தோன்றியதை எம்மால் அவதானிக் முடிகின்றது.

அண்மையில் ஒரு பாடசாலையில் நடைபெற்ற விநோத உடைப் போட்டியில் ஒரு மாணவி பாதிக்கப்பட்ட ஒரு கத்தரிக்காய் (சூத்தக் கத்தரிக்காய்) போன்று வேடமிட்டு வந்திருந்தார்.

நான் மெலிந்து பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதால் என்னை எல்லோரும் வெறுக்கின்றார்கள் ஆனால் என்னை விட பருமனாக வளவளப்பாக இருக்கும் கத்தரிக்காயை பலரும் நேசிக்கின்றார்கள். ஆனால் அது நஞ்சூட்டப்பட்ட கத்தரிக்காய் என்பதை அவர்கள் உணர மறுக்கின்றார்கள் என்று அந்த மாணவி கூறிய காணொளியை காண நேர்ந்தது.

அந்த காணொளியை பதிவு செய்த குறித்த பாடசாலை ஆசிரியர் 'புதிய வெளிச்சம்' ஏற்படுத்திய மாற்றம் இது என்று தனது கருத்தை பதிவு செய்திருந்தமை எமது அயராத உழைப்பிற்கும் கடுமையான முயற்சிக்கும் கிடைத்த அங்கீகாரமாக நாம் கருதுகின்றோம்.

சிறு துளி பெருவெள்ளமாக மாறும் என்பதை இந்த சிறுமி எமக்கு உணர்த்தியுள்ளார்.

இதைவிடவும் இயற்கை விவசாயத்தை முன்னிலைப்படுத்தும் நோக்கில் வெளிவர ஆரம்பித்துள்ள சஞ்சிகைகள், வர்த்தக கண்காட்சியில் இயற்கை விவசாய உள்பத்திகளின் காட்சி படுத்துகைகள், பல பாடசாலைகளில் இயற்கை விவசாய வாரம் கடைப்பிடிக்கப்பட்டமை, புதிதாக ஆரம்பிக்கும் இயற்கை மரக்கறி விற்பனை நிலையங்கள், இயற்கை விவசாயம் தொடர்பாக தோன்றியுள்ள இயக்கங்கள், மற்றும் சமூக வெளிகள் மற்றும் இணையதளங்களில் ஆரம்பித்துள்ள உரையாடல்கள் என்பன பெரும் நம்பிக்கைகளை தருகின்றன.

அதேநேரம் ஆசிரியர்களுக்கான பயிற்சியும், இளைஞர்களுக்கான பயிற்சியும் மூலம் அவர்களுக்கான தொடர்ச்சியான தொடர்ப்பக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம்.

கனடாவிலிருந்து 'புதிய வெளிச்சம்' பல்வேறு தளங்களிலும் ஏற்படுத்திய அதிர்வுகள் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்.

நம்பிக்கை தானே வாழ்கை... தொடர்ந்து அர்த்தமுள்ள மானிட விடுதலை நோக்கி நாம் பயணப்படுவோம்.

## உள்ளே....

புதிய வெளிச்சம் ... தொடர்ந்தும் பயணிப்போம் - நவஜீவன் அனந்தராஜ்

இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை. (இலங்கையில் ஓர் இயற்கை வேளாண்மை பயணம்)
- பாமயன்

இயற்கையோடு இணைக்கவென இரு வாரங்கள் தாய் மண்ணில்!]
-நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா, தகைநிலைப் பேராசிரியர் சுவீடன் விவசாயப் பல்கலைக் கழகம் உப்சாலா

வடக்குக் கிழக்கு பயிற்சிப் பட்டறைகளுக்குக் கனடா தமிழர்களின் பங்களிப்பு
- குரு அரவிந்தன்

பற்றிக் பிரவுண் தமிழர்களின் நண்பனா? எதிரியா? - ரதன்

அன்னை தந்த இல்லம் புதிய கட்டட திறப்பு விழா

புதியவெளிச்ச செயற்பாடும் சமூகவலைத்தள பிரதிபலிப்புக்களும்

முக்காடுகளுக்குள் மறையும் முகங்களும்...வெளில் தெரியும் வால்களும் !
- ரமணன் சந்திரசேகரமூர்த்தி

ஐ.பி.சி தமிழ் தாயக திறப்புவிழா ! கனேடிய கலைஞனுக்கு கௌரவம்

செந்தூரா செந்தூராசேர்ந்தே செல்வோம் என்று பாடியே வந்த குருவியார்
- குருவியார் @ Tim Hortons

மனிதயினம் உலகப் போரின் விளிம்பை நோக்கி தள்ளாடிச் செல்கின்றது
- James Cogan

அமெரிக்க பதுங்கியிருந்து வட கொரியா மீது ஓர் அணுஆயுத தாக்குதல் நடத்தவிருக்கிறதா? - By Bill Van Auken

புதிய வெளிச்சம் 2018 கல்வி, விவசாய பட்டறைகள் படங்களும் பதிவுகளும்
- வசீகரன் குலசிங்கம் - படம் இகுருவி ஐயா

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை அரசியல் தீர்வுடன் தொடர்புபடுத்தலாமா?
- யதீந்திரா

இந்த நாடு பிளவுபடுவதை விரும்பாத சகலரும்
தேர்தலில் எம்முடன் கைகோருங்கள்! மகிந்தா அறைகூவல்! - நக்கீரன்

அரசியல் பொங்கல் - ரமணன் சந்திரசேகரமூர்த்தி

பாதிப்பு ஏற்படுத்துமா தியான்குங்!
பூமியை நோக்கி விரையும் 8.5 டன் விண்வெளி நிலையம்...

இலங்கை 'பைலா' இசையை இந்தியத் திரைத்துறைக்கு
எடுத்துச்சென்ற ஏ.ஈ.மனோகரன் - கானா பிரபா


ஒரு பெண்ணின் கதை

நித்தியானந்தாவின் வீட்டிலிருந்து வைரமுத்துவுக்கு வசைபாடும் கும்பல்!

இந்திய அரசியலில் தவிர்க்க முடியாத சினிமாக் கவர்ச்சி

சமூகப் போராளி செழியன் காலமாகிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை அரசியல் தீர்வுடன் தொடர்புபடுத்தலாமா?

இந்தக் கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் போது ஒவ்வொரு கட்சிகளும் தங்களின் இறுதிகட்ட பிரச்சாரங்களில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. இங்கு நான் மூன்று கட்சிகளை மட்டுமே கட்சிகள் என்று குறிப்பிடுகின்றேன் அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னும் பெயரில் இயங்கிவரும் இலங்கை தமிழரசு கட்சி, உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு மற்றும் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவை. இந்த மூன்று அணியினரும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் ஒருவரை விடவும் மற்றவர்களே சரியானவர்கள் என்பதை மக்கள் மத்தியில் நிரூபிக்கும் பிரச்சாரங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதில் தமிழரசு கட்சி, இதுவரை தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் சரியென்பதை உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் நிரூபிக்கும் என்று கூறிவருகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் வார்த்தையில் கூறுவதானால் அமைதியான பெரும்பாண்மை ( Silence majority ) அமைதியாக முடிவெடுக்கும். அது தங்களின் பக்கமே நிற்கும். ஏனைய இரண்டு அணியினரும் தங்களுக்குள் தனித்து நின்றாலும் கூட தமிழரசு கட்சியின் முக்கியமாக, சம்பந்தன்—சுமந்திரன் தரப்பின் நடவடிக்கைகள் பிழையானவை என்பதை நிரூபிக்கும் வகையிலேயே தங்களின் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். சம்பந்தன் — சுமந்திரன் தரப்பை பொறுத்தவரையில் உள்ளூராட்சித் தேர்தலில் கிடைக்கும் ஆதரவின் அடிப்படையில் தங்களுடன்தான் மக்கள் நிற்கின்றனர் என்று கூறக் கூடும். ஒரு வேளை ஏனைய தரப்பினரின் கை ஓங்கினால் அவர்கள் தங்களின் கொள்கை நிலைப்பாட்டுடன்தான் மக்கள் நிற்பதாகச் சொல்வர்.






கள நிலைமைகளின்படி பார்த்தால், மக்கள் மத்தியில் தமிழரசு கட்சிக்கு எதிரான போக்கு இருப்பது உண்மைதான் ஆனால் அந்த எதிர்ப்பை வாக்குகளாக திரட்டியெடுக்கும் ஆற்றல் ஏனைய தரப்புக்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு வேளை கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சுரேஸ் பிரேமச்சந்திரனும் ஓரணியில் நின்றிருந்தால் இந்த நிலைமைகளில் சற்று மாறுபாடான சூழலை அவதானித்திருக்கலாம் ஆனால் அது நிகழவில்லை. ஆரம்பத்தில் ஒரு மாற்று அணிக்கு தலைமை தாங்கும் ஆற்றல் கொண்டதாக நோக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையால் கட்சிகளை ஓரணிப்படுத்த முடியவில்லை. பேரவையால் முடியவில்லை என்பதன் பொருள் பேரவை தேர்தல் அரசியலுக்கு தயராக இருக்கவில்லை என்பதாகும். இதன் காரணமாக பேரவையின் தீர்வாலோசனையில் பங்குகொண்ட மூன்று கட்சிகளும் இன்று ஒவ்வொரு அணியில் அடைக்கலம் தேடியிருக்கின்றன. இந்த நிலைமை தமிழரசு கட்சிக்கு மீண்டும் சாதகமான நிலைமையை தோற்றுவித்திருக்கிறது. இந்த பின்புலத்தில் நோக்கினால் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் தமிழரசு கட்சிக்கே சாதகமாக அமையப் போகிறது. இதனை பிறிதொரு வகையில் நோக்கினால் சுமந்திரனின் கை ஓங்கப் போகிறது.

இந்தக் கட்டுரையின் கேள்வி தேர்தல் முடிவுகள் தொடர்பானதல்ல மாறாக அந்த முடிவை இடைக்கால அறிக்கையுடன் தொடர்புபடுத்த முடியுமா என்பதே! ஆரம்பத்திலிருந்தே சில தமிழ்த் தேசிய ஆய்வாளர்கள் உள்ளூராட்சித் தேர்தலை இடைக்கால அறிக்கையுடன் தொடர்படுத்தியே விவாதித்தனர். உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை இடைக்கால அறிக்கையிலிருந்து பிரிக்க முடியாது என்பதே அவ்வாறானவர்களது வாதமாக இருந்தது — இருக்கிறது. சுமந்திரனின் நிலைப்பாடும் அவ்வாறான ஒன்றாகவே தெரிகிறது. ஆனால் இந்தக் கட்டுரையாளர் அவ்வாறானவர்களின் பார்வையிலிருந்து மாறுபடுகின்றார்.

உதாரணமாக ஒரு வேளை உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தமிழரசு கட்சிக்கு சாதகமாக அமையுமாயின் அதனை இடைக்கால அறிக்கைக்கான ஆதரவாகக் கொள்ள முடியுமா? சமஸ்டிக் கோரிக்கையை கைவிடுவதற்கான மக்கள் ஆணையாகக் கொள்ள முடியுமா? வடக்கு கிழக்கு இணைப்பை கைவிடுவதற்கான ஆணையாகக் கொள்ள முடியுமா? தமிழரசு கட்சியின் அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டதாகக் கொள்ள முடியுமா?

இல்லை என்பதே இந்தக் கட்டுரையாளரின் வலுவான வாதம். ஏனெனில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முடிவுகளை தேசிய அரசியல் விவகாரங்களோடு தொடர்புபடுத்துவது அடிப்படையிலேயே தவறானது. இந்தத் தவறை இலங்கை தமிழரசு கட்சி மட்டுமல்ல, ஏனைய தரப்பினரும் செய்கின்றனர். ஆனால் உண்மை நிலைமை வேறானது. உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்கும் மக்கள் அரசியல் காரணங்களை விடவும் அபிவிருத்தி சார்ந்த காரணங்களுக்கே முதன்மையளிக்க வாய்ப்புண்டு. எனினும் தங்களுக்கு பழக்கப்பட்ட சின்னம் ஒன்றிற்கு வாக்களித்தாலும் கூட, இடைக்கால அறிக்கையை கருத்தில் கொண்டு வாக்களிக்கப் போவதில்லை. மேலும் இடைக்கால அறிக்கை தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் பெரிதாக இல்லை. அவ்வாறானதொரு விழிப்புணர்வை ஏற்படுத்தவல்ல அரசியல் இயக்கங்களும் மக்கள் மத்தியில் இல்லை. இவ்வாறானதொரு சூழலில் தமிழரசு கட்சிக்கு கிடைக்கும் மக்கள் ஆதரவை கட்சிப் பாரம்பரிய அரசியல் ஒன்றின் ஊடாகவே புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறில்லாது நடைமுறை அரசியல் சார்ந்து புரிந்துகொள்வதானது, சரியானதொரு பார்வையாக அமையாது.



உதாரணமாக தெற்கின் அரசியலை எடுத்து நோக்கலாம். சிங்கள வாங்காளர்கள் பல நிற கட்சிகளாக பிரிந்திருக்கின்றனர். அதில் பல கட்சிகள் மகிந்த ராஜபக்சவை எதிர்க்கும் கட்சிகள். சிங்கள வாக்காளர்கள் மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக வாக்களிக்கின்றனர் என்பதற்காக அவர்கள் மகிந்தவின் யுத்த வெற்றியை நிராகரிக்கின்றனர் என்று பொருள் கொள்ளலாமா? விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த வெற்றியை ஒவ்வொரு சிங்களக் குடிமகனும் தனது வெற்றியாகவே கொண்டாடினான். எனவே மகிந்த ஆதரவு எதிர்ப்பு என்பதை அடிப்படையான சிங்கள தேசியவாதத்திலிருந்து பிரித்து நோக்கினால் அது தவறானதாகும். ஏனெனில் கட்சிப் பாரம்பரியம் என்பது ஜனநாயக அரசியலில் பிரிக்க முடியாத ஒரு அம்சம். தமிழரசு கட்சியின் வீட்டுச் சின்னத்திற்கான ஆதரவும் அவ்வாறானதொரு கட்சிப் பாரம்பரிய அரசியலின் விளைவுதான். அதே போன்று இன்றும் வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு எதிரான கட்சிகளுக்கு வாக்களிக்கும் தமிழ் மக்களும் இருக்கின்றனர். வறுமை, சாதி, மதம் என பல விடயங்கள் அவ்வாறான மக்களின் வாக்களிப்பை தீர்மானிக்கின்றன. அதனால் அவ்வாறான மக்கள் தமிழ் அடையாளத்தை துறக்க விரும்புகின்றனர் என்று பொருள் அல்ல.

கட்சிப் பாரம்பரிய அரசியலானது பலமான தேசிய எழுச்சிகளால் சிதைவதுண்டு. உதாரணமாக தமிழ்த் தேசிய அரசியல் ஆயுத விடுதலைப் போராட்டமாக பரிணமித்த போது மிதவாத அரசியல் வீழ்சியடைந்தது. மிதவாதிகள் மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்தனர். இன்று எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற இரா.சம்பந்தனும் ஒரு காலத்தில் செல்வாக்கின்றி முடங்கிக்கிடந்த ஒருவர்தான். இன்று பலரும் மறந்து போய்விட்டனர். திரு.சம்பந்தன் தனது சொந்த மாவட்டமான திருகோணமலையில் தொடர்ச்சியாக மூன்று முறை தோற்கடிக்கப்பட்டவர். 2001இல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னதான் மீண்டும் சம்பந்தனால் தேர்தலில் வெற்றிபெற முடிந்தது.

2009இல் ஏற்பட்ட விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து மீளவும் கட்சிப் பாரம்பரிய அரசியல் மேலெழுந்தது. இந்த நிலைமையைக் தமிழரசு கட்சியின் தலைமை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறது. இந்தக் கட்சிப் பாரம்பரிய அரசியல்தான் தமிழரசு கட்சியின் மக்கள் ஆதரவுத் தளமாகவும் இருக்கிறது. ஆனால் இந்த அதரவுத் தளம் கூட விடுதலைப் புலிகளின் ஆசிர்வாதத்தால் கிடைத்த ஒன்றுதான். இதனை இன்றைய புலம்பெயர் இளைய தலைமுறை அறிந்திருக்க வாய்ப்பில்லை. புலம்பெயர் நாடுகளிலுள்ள மூத்தவர்களும் இந்த உண்மையை சொல்வதில்லை. இது தனியாக எழுதப்பட வேண்டிய ஒரு விடயம்.

தேர்தல் முடிவுகள் எவ்வாறும் அமையலாம். தமிழரசு கட்சி வெற்றிபெறலாம். அதனால் தமிழ் மக்கள் தங்களின் அடிப்படையான அரசியல் அபிலாவீஷகளை கைவிடுவதற்கு இணங்கிவிட்டனர் என்று பொருளல்ல. ஒரு வேளை தமிழரசு கட்சியின் தலைமை அவ்வாறானதொரு முடிவுக்கு வர விரும்பினால் எதிர்வரும் 2020 இல் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அவ்வாறனதொரு நிலைப்பாட்டை முன்வைத்து மக்கள் ஆணையை கோரலாம். இதுவரை தமிழ்த் தேசிய அரசியல் நிலைப்பாடாக இருந்த வடக்கு கிழக்கு இணைப்பு, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய — சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு அனைத்தையும் கைவிடுகின்றோம். ஒற்றையாட்சிக்குட்பட்ட அதிகாரப்பகிர்வே எமது அரசியல் நிலைப்பாடு. இதனை ஒரு தேர்தல் விஞ்ஞாபனமாக முன்வைத்து மக்கள் ஆணையை கோரலாம். அதன் பின்னரும் தமிழரசு கட்சி வெற்றிபெறுமாக இருந்தால் அப்போது மக்கள் தமிழரசு கட்சியின் நிலைப்பாட்டுடன் மட்டும்தான் நிற்கின்றனர் என்னும் முடிவுக்கு வரமுடியும். எனவே நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை முன்னிறுத்தி அரசியல் விவாதங்கள் செய்வது எந்த வகையிலும் பொருத்தமான ஒன்றல்ல.

யதீந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை!

## [இலங்கையில் ஓர் இயற்கை வேளாண்மை பயணம்]



கடந்த டிசம்பர் மாதத்தில் நள்ளிரவில் ஒரு தொலைபேசி அழைப்பு. வழக்கமாக இரவுத் தொலைபேசி என்றாலே சற்று அச்சமாக இருக்கும். அந்த எண் வெளிநாட்டு எண் போல இருந்தது. உண்மைதான். கனடாவில் இருந்து அழைப்பு. 'வணக்கமையா! நான் நவஜீவன், உங்களோடு கொஞ்சம் கதைக்கலாமோ!' ஈழத் தமிழர் ஒருவரின் குரல்போல எனக்குத் தென்பட்டது. இரண்டு நாட்களுக்கு முன்பு ஓசை காளிதாசன் 'உங்களை வேளாண்மைப் பயிற்சிக்காக கனடாவில் இருந்து ஒருவர் அழைப்பார்' என்று குறிப்பிட்டிருந்தார். அந்த நினைவு வந்ததும் சற்று சுதாரித்துக் கொண்டு ' சொல்லுங்கள் அய்யா!' என்றேன். அவர் விளக்கத் தொடங்கினார்.

இப்படித்தான் எனது அல்ல எங்களது இலங்கைப் பயணத் திட்டம் தொடங்கியது. கடந்த திசம்பர் மாதம் கருவான இந்தத் திட்டம், மெல்ல மெல்ல உருவாகி 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் மூன்றாம் நாள் விமானத்தில் ஏறுவதாக அமைந்தது. எங்களுடைய குழுவில் மூத்த இயற்கை வேளாண்மை வல்லுநர் சுந்தரராமன், மண்புழு வித்தகர் ரவி, ஒருங்கிணைத் பண்ணையாளர் சதுரகிரி, இளம் இயற்கை வேளாண்மையாளர் கஜேந்திர மூர்த்தி இவர்களுடன் நானும் புறப்பட்டேன். எங்களுக்கு உறுதுணையாக இளம் வழக்கறிஞர் சீனிவாசன், ஒருங்கிணைப்பாளர் புவனேஸ்குமார் ஆகிய ஏழு பேர்களுடன், மதுரை விமான நிலையத்தில் இருந்து பயணப்பட்டோம். வழக்கமாக பலவிதமான கேள்விகள் கால நீட்டிப்புகள் ஆகிய சிக்கல்களை முதலிலேயே சந்தித்தோம். கஜேந்திரன் கடவுச் சீட்டில் சிறு குழப்பம், அதைச் சரி செய்து ஒரு வழியாக ஏர் லங்கா வானூர்தியில் அமர்ந்தோம். சற்று நேரத்தில் இடுப்புப் பட்டையைக் கட்டியவுடன், தின்க ஏதோ ரொட்டியும், செயற்கைப் பழச்சாறும் கொடுத்தார்கள். தின்று முடிப்பதற்குள் கொழும்பு பண்டார நாயகா விமான நிலையம் வந்துவிட்டது...! 'ஏறினேன், இறங்கினேன்' என்று சொன்னதுபோல மிகச் சடுதியாக இலங்கை வந்துவிட்டது. கடல் சூழ்ந்த பச்சைத் தீவு. ஆனால் காலத்தின் கோலத்தால் ரத்தம் சிந்திய சிவப்பான தீவு.

விமான நிலையத்தில் சிறிது நேரம் காத்திருக்க வைக்கப்பட்டோம். பின்னர் அனுமதி கிடைத்தது. கொழும்பில் இருந்து இரவுப் பயணமாக யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டோம். மிக நீண்ட பயணம். ஒரு மூடுந்தில் (வேன்) எங்கள் பயணம் தொடர்த்து. வழி எங்கும் காவல்துறை கண்காணிப்பு கடுமையாகவே இருந்தது. ஒரு வழியாக இரவு இரண்டு மணியளவில் யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் என்ற இடத்தில் உள்ள மர்கோசா என்ற தங்கும் இல்லத்தை சேர்த்தோம். அந்த இல்லம் பெரியதொடு நாலுகட்டு வீடு. இதை நாச்சியார் வீடு என்று இங்குள்ள மக்கள் அழைக்கின்றனர். தமிழ்நாட்டு செட்டிநாடு வீடுகளைப் போன்ற அமைப்புக் கொண்டது.

காலையில் விரைவாகவே அனைவரும் குளித்தெழுந்து தயாரானோம். புட்டும் அப்பமும் நல்ல உணவாக அங்கிருந்த சமையல்காரத் தம்பிகள் தயாரித்து வைத்தனர். சிறப்பான உணவு. காலை உணவு முடித்து அனைவரும் குழுப் படம் எடுத்துக்கொண்டோம். இ—குருவி அய்யா நிறையப் படங்களை எடுத்துத் தள்ளிக் கொண்டே இருந்தார். மிகவும் ஆர்வமான திறமையான புகைப்படக் கலைஞர் அவர். அவரது காமிராக் கோணம் வியப்பாக இருக்கும். ஒன்றையும் விட்டுப் போகாமல் ஆவணப்படுத்தி வந்தார்.

தெள்ளிப்பளை என்ற இடம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு இடம். அங்கு மானுடம் என்ற அமைப்பு சமூகப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் பொறுப்பாளர் DR நந்த குமார் என்ற ஒரு மருத்துவர். அவர் இயற்கை வேளாண்மையின் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். புதிய வெளிச்சத்துடன் அவர் ஏற்பாடு செய்திருந்த கூட்டம். இதில் சுவீடன் நாட்டில் இருந்து வருகை புரிந்திருந்த பேராசிரியர் ஸ்ரீஸ்கந்த ராசா அவரது துணைவியார் பேராசிரியர் ஸ்ரீதேவி ஆகியோரும் இணைந்து கொண்டனர். பேராசிரியர்கள் இருவரும் வேளாண்மையில் ஆராய்ச்சி செய்தவர்கள். இதற்கிடையில் இருக்கின்ற வளவர்களை வைத்துக் கொண்டு இரண்டு கூட்டங்களை குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க வேண்டும் என்று நவஜீவன் திட்டமிட்டார். அதன்படி ஒருவர் முதல் இடத்தில் பேசி முடித்தவுடன் அவர் புறப்பட்டு இரண்டாம் இடத்திற்குச் செல்ல வேண்டும். அங்கு பேசி முடித்தவர் இவர் சென்ற வண்டியில் திரும்பி முதலாம் இடத்திற்கு வந்து பேச வேண்டும் என்று ஏற்பாடு செய்து இரண்டு கூட்டங்களை ஒரே நேரத்தில் முடித்தோம். நான், பேராசிரியர் தெள்ளிப்பளையில் பேசிவிட்டு, கந்தர் மடம் என்ற இடத்திற்குச் சென்றோம். அங்கு பேசிய சுந்தரராமன் தெள்ளிப்பளை வந்தார். பின்னர் நான் களப்பயிற்சிக்கு தெள்ளிப்பளை வந்தேன். இதேபோல ரவியும், சதுரகிரியும், கஜேந்திர மூர்த்தியும் மாறிக்கொண்டார்கள்.

தெள்ளிப்பளையில் ஏறத்தாழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

150 பேர்கள் கலந்து கொண்டார்கள். ஆர்வமுடன் பெண்கள் பங்கெடுத்தார்கள். படித்த பெரியவர்கள், விவசாயிகள் என்று நல்லதொரு தொடக்கமாக அந்த நிகழ்வு இருந்தது. மாலை செய்முறைப் பயிற்சியில் பெண் ஆசிரியர் ஒருவரும் ஒரு இளைஞரும் ஆர்வமுடன் சாணத்தைக் கரைத்து இயற்கை இடுபொருள் கரைசல்களைத் தயாரித்தனர்.

நல்லூர் கந்தர் மடத்தில் உள்ள பண்பாட்டு மையத்தில் உள்ள அரங்கில் முகாம். அவர்களது வளாகமே பெண்களால் உருவாக்கப்பட்டிருந்தது. கூரை வேய்ந்த அரங்குகளே இருந்தன. சாணம் மெழுகி, கோலமிட்டு பண்பாட்டு அடையாளங்களைப் பறைசாற்றும் முகமாக அந்த இடம் அமைந்திருந்தது. பலர் கேள்விகள் கேட்டு விளக்கம் பெற்றனர். பத்திரிகைகள் வந்து செய்தி எடுத்துக் கொண்டன.

அடுத்த நாள் அதாவது சனவரி ஐந்து. இன்று எந்தக் கூட்டமும் திட்டமிடப்படவில்லை. எனவே அனைவரும் யாப்பாண மாவட்டத்தின் முக்கிய இடங்களைப் பார்வையிடலாம் என்று திட்டமிட்டுப் புறப்பட்டோம். முதலில் நல்லூர் முருகன் கோயில் சென்றோம். மிகவும் பழைமையான கோயில். மிகவும் நேர்த்தியாகப் பராமரித்து வருகின்றனர். தமிழகத்துக் பெருங்கோயில்களை ஒப்பிடும் அளவு சிற்பங்கள் இல்லை என்றாலும் அந்தக் கோயிலின் வனப்பு நெஞ்சை அள்ளுவதாகவே இருந்தது. சட்டையைக் கழற்றிச் செல்லும் முறை அங்கேயும் உள்ளது. கோயில் தூய்மையாகப் பேணப்படுகிறது. அதற்கு வெளியே திலீபன் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த இடத்தைப் பார்த்தோம். அவரது நினைவுத் தூண் உடைத்துப் போடப்பட்டிருந்தது. அதன் எச்சங்கள் ஆங்காங்கே கிடந்தன. அதன் பின்னர் தொண்டமனாறு என்ற கடற்கரைக் ஊரில் அமைந்துள்ள வேல் கோயில் பார்த்தோம். அங்கு முருகன் சிலை இல்லை. வேல் மட்டுமே உள்ளது. மிகப் பழமையான கோயில் என்று கூறினார்கள். இந்தக் கோயிலில் ஆண்டு முழுவதும் இருபத்து நான்கு மணி நேரமும் அன்னதானம் செய்யப்படுவதாகவும் மக்கள் கூறினார்கள். அங்கு ஆசியக் கண்டத்திலேயே பெரிய தேர் ஒன்றைச் செய்துள்ளார்கள், இந்தியாவில் இருந்து சிற்பிகள் பலர் சென்று அந்தத் தேரை உருவாக்கியிருந்தார்கள். ஆனால் அந்த அழகிய தேர் சிங்கள ராணுவத்தால் தீ வைத்து எரிக்கப்பட்டுவிட்டது. மறுபடியும் தேர் செய்வதற்கான முயற்சிகளை அங்குள்ள மக்கள் எடுத்து வருகின்றனர். கூட்ட நெரிசல் மிக்க, பக்தர்கள் நிரம்பி வழியும் கோயிலாக அக்கோயில் திகழ்கிறது. யாப்பாணத்தில் பத்தடிக்கு ஒரு கோயில் என்ற முறையில் எங்கும் கோயில்களைக் காண முடிகிறது.

பின்னர் வல்வட்டித்துறை என்ற ஊருக்கு வந்தோம். கடல் தாலாட்டும் ஒரு சிறூர். தமிழீழ விடுதலைப்போரில் மிக முக்கிய பாத்திரம் வகித்த ஊர்களில் இது முதன்மையானது. மிகச் சிறிய ஊர் என்றாலும் நேரான தெருக்கள். பெரிய வீடுகள். உள்ளேயே கிணறுகள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்ட ஊர்கள் எப்படிக் காணப்பட்டனவோ அப்படி அந்த ஊர் அமைந்திருந்தது. போரின் அழிவுகள் மிக மோசமாகக் காணப்பட்டன.

**பிரபாகரனின் வீடு முற்றிலும் சிதைக்கப்பட்டுள்ளது. தமிழ்மக்கள் மட்டுமல்லாது சிங்கள மக்களும் அந்த இடத்தில் இருந்து வீரத்தின் அடையாளமாக மண்ணை எடுத்துக் கொண்டு போவார்களாம். அதனால் சினமுற்ற சிங்கள அரசு அரைகுறையாக உடைக்கப்பட்ட வீட்டை முற்றிலும் தோண்டிப் போட்டுவிட்டார்கள்.**

போர் முடிந்த பின்னரும் அந்த ஊர் அடித்து நொறுக்கப்பட்டதாக மக்கள் கூறினார்கள்.காரணம் அந்த ஊரில்தான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறந்து வளர்ந்துள்ளார். அவர் தவிர கிட்டு, மாத்தையா போன்ற முக்கியமான தளபதிகளை அந்த ஊர்தான் கொடுத்துள்ளது. பத்து வீடுகளுக்கு ஒரு வீடு என்ற முறையில் உயிர்பெற்று வருகின்றன. பல வீடுகள் நொறுக்கப்பட்டு இடிந்து கிடக்கின்றன. முட்புதர்களும், மரங்களும் வளர்ந்து கிடக்கின்றன. வீட்டுக்குச் சொந்தக்காரர் எந்த நாட்டில் இருக்கிறார் என்று யாருக்கும் தெரியாது. இனம் புரியாத சோகம் மனதைக் கவ்வியது. பிரபாகரன் படித்த சிதம்பரம் கல்லூரியின் அருகே ராணுவ முகாம் உள்ளது. பெரியதொரு முகாம் அது. அந்தச் சின்ன ஊரில் ஏன் அவ்வளவு பெரிய முகாம் என்று நினைக்கத் தோன்றும். ஆனால் அவர்களது அச்சம் அவ்வாறு உள்ளதென்று அறிய முடிகிறது. நாங்கள் அனைவரும் புகைப்படம் எடுத்துக்கொண்டோம். மிக அருகே ராணுவ முகாமிலிருந்து ராணுவத்தினர் வியப்பாகப் பார்த்து கொண்டே இருந்தனர். பிரபாகரனின் வீடு முற்றிலும் சிதைக்கப்பட்டுள்ளது. தமிழ்மக்கள் மட்டுமல்லாது சிங்கள மக்களும் அந்த இடத்தில் இருந்து வீரத்தின் அடையாளமாக மண்ணை எடுத்துக் கொண்டு போவார்களாம். அதனால் சினமுற்ற சிங்கள அரசு அரைகுறையாக உடைக்கப்பட்ட வீட்டை முற்றிலும் தோண்டிப் போட்டுவிட்டார்கள்.

அக்கிராமம் முற்றுமுழுதாக விமான, செல் தாக்கங்களுக்கு உள்ளாகியிருந்தன, அனைத்து வீடுகளிலும் பதுங்கு குழிகள் இருந்துள்ளன. இப்போது அவை தடை செய்யப்பட்டுவிட்டன. அந்தச் சுவடுகளை சில வீடுகளில் பார்க்க முடிந்தது. எஞ்சிய ஒவ்வொரு வீட்டிலும் ஒரு வீட்டுத் தோட்டம் உள்ளது. வல்லாரைக் கீரை கூட இங்கு மிகப் பெரியதாக இருந்தது. கிணறுகளின் நீர் மட்டம் மிக அருகில் இருந்தது. பிரபாகரன் குடும்பக் கோயில் ஒன்று உள்ளது. அது மாரியம்மன் கோயில், மற்றது அவரது முன்னோர்களால் கட்டப்பட்ட சிவன் கோயில். அந்தக் கோயில் கிணற்றில் இருந்து நீர் இறைத்து முகம் கழுவிக் கொண்டோம். அந்த ஊரில் பெரும்பாலும் உறவினர்களாகவே உள்ளனர்.

அடுத்த நாள் சனவரி ஆறாம் நாள், மன்னார் மாவட்டத்தில் உள்ள கிராஞ்சி என்ற ஊர் சென்றோம். அதுவும் ஒரு கடற்கரை ஊர்தான். யாழ்ப்பாணம் மாவட்டம் முழுமையும் கடல் நீர் ஊடறுத்துச் சென்றுள்ளது. எனவே பல ஊர்களில் கடற்கரை மிக இயல்பாக அமைந்துள்ளது. கிராஞ்சியில் தம்பிபிள்ளை என்ற காந்திய ஊழியர் ஒருவர் ஒரு மையம் நடத்தி வருகிறார். அதன் பெயர் பிருந்தாவனம். நிறையத் தென்னை மரங்களும், பனை மரங்களும் நிறைந்த 40 ஏக்கர் பண்ணை அது. ஆனால் பராமரிப்பு இன்றிக் காணப்படுகிறது. அவருக்கு வயது 90க்கு மேல் ஆகிவிட்டது. அவரது துணைவியார் சரஸ்வதி அம்மையார். அந்தத் தள்ளாத வயதிலும் அவரது கையாலேயே எங்களுக்கு சிவப்பரிச் சோறும் வேறு சில பலகாரங்களும் செய்து விருந்தோம்பினார். அவர் அந்த ஊரில் உள்ள சில விவசாயிகளை வரவழைத்திருந்தார். நிறையப் பள்ளிப் பிள்ளைகள் வந்திருந்தார்கள். அவர்களுடன் இயற்கை வேளாண்மை குறித்து விரிவாகப் பேசினோம். அந்தப் பண்ணையை எப்படி வளர்த்து ஒரு பயிற்சிமையமாக அமைக்கலாம் என்பது பற்றி விவாதித்தோம். பின்னர் வருகை தந்தமைக்கு என்று தென்னங்கன்று ஒன்றை நட்டேன். கிணற்றில் நீர் மிக அருகில் இருந்தது. அங்கு உரையாடலை முடித்துக்கொண்டு திரும்பினோம். வழியில் ஒரு பழைய கோட்டை ஒன்றைப் பார்வையிட்டோம். போர்ச்சுக்கீசியர் கோட்டை என்றார்கள். அதை முதலில் விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருந்தார்கள். இப்போது அது ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அதற்குள்ளே ஒரு அருமையான தாமரைக் குளம் இருக்கிறது. அங்கு வெண்தாமரை மலர்கள் நிறைந்திருந்தன. புதிதாக புத்தர் கோயில் ஒன்றை நிறுவியுள்ளார்கள். ஆனால் அதை மக்கள் யாரும் வழிபடுவதாகத் தெரியவில்லை.

அன்று இரவு 'டேன்' என்ற தொலைக்காட்சியில் என்னை நேர்காணல் செய்தார்கள். ஒரு மணி நேரமாக நேரலையில் மக்கள் கேள்வி கேட்டும் வகையில் ஏற்பாடு செய்திருந்தார்கள். பலர் கேள்விகள் கேட்டார்கள்.

அடுத்த நாள் முழுவதும் பல நிலங்களைப் பார்த்து மண் அமைப்பு, நீர் வளம் போன்றவற்றைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு நாங்கள் அனைவரும் புறப்பட்டோம். எங்களுக்கு உதவ அரசு வேளாண் திணைக்களத்தில் இருந்து குகநாதன் என்ற அன்பர் வந்திருந்தார். மிக அருமையான, அன்பான மனிதர். எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அவர் எங்களுடன் தொடர்ந்து அனைத்துக் கூட்டங்களுக்கும் வந்திருந்தார். பல உதவிகளைச் செய்து கொடுத்தார். செம்மண் அதிகம் காணப்பட்டது, சில இடங்களில் மணற் பாங்கான மண்ணமைப்பு இருந்தது. சுந்தரராமன் பல பூச்சிகளின் தன்மைகளை விளக்கினார். அரசின் ஆராய்ச்சி மையங்களுக்குச் சென்றோம். ஞாயிற்றுக் கிழமையாதலால் ஊழியர்கள் பெரிதும் இல்லை என்றாலும் குகநாதன் உதவியால் அனைத்தையும் காண முடிந்தது. பிற்பகல் நிலாவரைக் கிணறு என்ற இடத்தைப் பார்வையிட்டோம். இயற்கையாக அமைந்த வற்றாத கிணறு. நன்னீரும் உப்புநீரும் இருக்கும் அதிசயக் கிணறு. 150 அடி ஆழத்திற்கு மேல் உள்ளதாக எழுதி இருந்தது.

மாலை திருநாவுக்கரசர் மாதிரிப் பண்ணை என்ற ஒரு இயற்கை வேளாண்மைப் பண்ணையைப் பார்த்தோம். அந்தப் பண்ணையின் உரிமையாளர் தமிழகத்தோடு நல் தொடர்பில் உள்ளவர். ஆடுகள், கோழிகள் என்று ஒருங்கிணைந்த பண்ணை ஒன்றை உருவாக்கியுள்ளார். அவருக்கு கரைசல் செய்வது பற்றிக் கூறினோம். மாமரத்தில் அருமையான ஒட்டு முறையைக் கடைப்பிடித்து வருகிறார். அவரது கவாத்து முறை மிகச் சிறப்பாக இருந்தது. இரவு நேரமாகிவிட்டதால் திரும்பினோம். ஆனாலும் வழியில் காங்கேசன்துறை சென்று கலங்கரை விளக்கத்தைப் பார்த்த பின்னர் திரும்பினோம்.

முறையான பயிற்சிகள் எட்டாம் தேதியில் இருந்துதான் தொடங்கின. முதலில் தென்னிந்திய திருச்சபையின் கீழ் அமைந்திருந்த வேளாண்மை பயிற்சி நிலையம் ஒன்றில் பயிற்சி முகாம் நடைபெற்றது. 150 பேர்களுக்கு மேல் கலந்து கொண்டார்கள். வேளாண்மை பயிலும் மாணவர்கள் கலந்து கொண்டார்கள். பல இடங்கள் சிதிலமடைந்து காணப்பட்டன. போரினால் பல இடங்கள் உடைந்து விட்டது என்றும் பல நூல்கள் எரிந்து போய்விட்டதாகவும் கூறினார்கள், அப்படி எரிந்தபோதும் அவர்கள் வேளாண்மை குறித்து வெளியிட்ட நூல்களில் நான்கை எனக்குக் கொடுத்தார்கள். அந்த நூல்களின் ஓரங்கள் சிதைந்து காணப்பட்டன. எனக்கு கண்களில் நீர் பனித்தது.

ஒன்பதாம் தேதி யாழ்ப்பாண மாவட்டம் முடித்து கிளிநொச்சி மாவட்டம் நோக்கிச் சென்றோம். கிளிநொச்சி வேளாண்மைப் பல்கலைக் கழகம் சென்றோம். ரணமடுவு என்ற இடம். அறிவியல் நகரம் என்று பெயர் வைத்திருந்தார்கள். அந்த அறிவியல் நகரை விடுதலைப்புலிகள் உருவாக்கியுள்ளார்கள். கட்டிட அமைப்பு யாவும் தமிழர் கட்டிடக் கலை வடிவத்தில் இருந்தது. கோயில்களில் உள்ள தூண்கள் போல உருவாக்கியிருந்தார்கள். மாணவர்கள், ஆசிரியர்கள் என்று பலரும் கலந்து கொண்டனர். சரியான மழை கொட்டியது. பிற்பகல் வரை அனைவரும் ஆர்வமாகக் கேட்டனர். குறிப்புகள் எடுத்துக் கொண்டனர். ரஞ்சிதன் என்ற அன்பர் இந்த முயற்சிகளை முன்னெடுத்துச் செய்திருந்தார்.

பத்தாம் நாள் மன்னார் மாவட்டம் தட்சின மருத மடு மகாவித்தியாலயம், பலம்பிட்டி என்ற ஊரில் பயிற்சி முகாம். மிகவும் எளிமையான அமைதியான கிராமம். ஏராளமான பெண் விவசாயிகள் கலந்து கொண்டனர். அரங்கு நிரம்பி வழிந்த கூட்டம். மாணவர்கள் எங்களுக்கு மாலை அணிவித்து, திலகமிட்டு வரவேற்றார்கள். பெண் குழந்தைகள் நடனமாடினர். மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது. பெண்கள் குழு ஒன்று இயற்கை வேளாண்மையை கூட்டாகச் செய்து வருவதைத் தெரிவித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையரசி அமிர்தலிங்கம் என்ற பெண் எவ்வாறு கரைசல் செய்வது என்பதை விளக்கிக் கூறினார். அவர்களது பண்ணையைப் பார்த்தோம். அரசு குறிப்பிட்ட இடத்தை அவர்களுக்கு ஒதுக்கி இருக்கிறது. மேலும் எவ்வாறு எளிதாக இடுபொருள்களை தயாரிப்பது என்பதை விளக்கிக் கூறினோம். பல இடங்களில் புதர் மண்டிக் கிடக்கின்றன. இந்தப் பகுதியில் ஆண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு என்றும், விதவைகள் அதிகம் என்றும் கூறினார்கள். போரில் நிறைய ஆண்கள் இறந்துவிட்டதால் இந்த நிலை என்று கூறினார்கள். இவ்வளவு நெருக்கடியிலும் பல குழந்தைகள் மாவட்ட அளவில் படிப்பிலும், விளையாட்டிலும் முதல் இடம் பிடித்துள்ளதை ஆசிரியர் அருள்ராஜ் விளக்கினார்.



**அனைத்து வீடுகளிலும் பதுங்கு குழிகள் இருந்துள்ளன. அந்தச் சுவடுகளை சில வீடுகளில் பார்க்க முடிந்தது. எஞ்சிய ஒவ்வொரு வீட்டிலும் ஒரு வீட்டுத் தோட்டம் உள்ளது. வல்லாரைக் கீரை கூட இங்கு மிகப் பெரியதாக இருந்தது**

புன்னாலைக்கட்டுவான் வரும் வழியில் புகழ்பெற்ற மாதா கோயில் ஒன்றைப் பார்த்தோம். அங்கிருந்த பாதிரியார் தமிழ் மக்களுக்கு போர்க்காலங்களில் மிகவும் உதவி செய்ததை நினைவு கூர்ந்தார்கள். அடுத்தாக தேவாரத்தில் பாடல் பெற்ற ஒரு சிவன் கோயிலைப் பார்த்துவந்தோம். திருக்கேத்தீச்சுவரம் என்று அழைக்கப்படும் கோயில். புரனமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அடுத்த நாள் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அக்கரையான் குளம் என்ற ஊரில் உள்ள பள்ளியில் பயிற்சி முகாம் நடைபெற்றது. மற்றொரு குழு மல்லாவி என்ற இடத்தில் பயிற்சி கொடுத்தார்கள். அதன் பின்னர் முல்லைத் தீவு சென்றோம். முள்ளி வாய்க்கால் அழிவுகளைக் கண்டு மனங்கலங்கினோம். இரவு வெகு நேரம் கழித்து வந்து சேர்ந்தோம்.

பன்னிரண்டாம் தேதி வவுனியா மாவட்டத்தில் உள்ள அரசு வேளாண்மை நிலையத்தில் பயிற்சி முகாம் நடைபெற்றது. இங்கும் ஒரே நேரத்தில் இரண்டு முகாம்களை நடத்தினோம். தமிழ்ப்பகுதியில் தெற்குப் பகுதி இது.

அம்மாச்சி உணவகம் என்ற ஒன்றை தமிழ் மாகாண அரசு உருவாக்கி சிறப்பாக செய்கிறது. பெண்கள் நேடியாக உணவகம் நடத்துகிறார்கள். அரசு இடத்தை ஏற்பாடு செய்து தருகிறது. இந்த முயற்சிக்கு நல்ல வரவேற்பு உள்ளது. அதில் நாங்கள் உணவருந்தினோம். வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் அம்மாச்சி உணவகம் சென்றோம்.

பதிமூன்றாம் தேதி அடுத்தது என்ன? என்ற புதிய வெளிச்சத்தின் முயற்சியான கருத்துருவுக்கு வலுசேர்க்கும் முகமாக யாழ் நூலகத்தில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்ட கூட்டம். கல்வி, வேளாண்மை என்ற இரண்டு தலைப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டன. பேராசிரியர் ஸ்ரீஸ்கந்தராசா ஒருங்கிணைத்து நடத்தினார். பலர் ஆர்வமுடன் பேசினார்கள். பலர் விமர்சனமும் செய்தார்கள். தொடர்ச்சியான செயல்பாடுகள் இருப்பதில்லை என்றும் இனியாவது தொடர் செயல்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இதன் தொடர்ச்சியாக ஒரு வேளாண்மை இயக்கம் தொடங்குவது என்றும், இதழ் ஒன்று தொடங்குவது என்றும் தெரிவித்தார்கள்.

அன்று மாலை எங்களுக்கெல்லாம் நன்றி செலுத்தும் முகமாக யாழ்ப்பாணம் வீரசிங்கம் அரங்கில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த அரங்கு வீரசிங்கம் என்ற கூட்டுறவு இயக்கத்தின் தலைவராக விளங்கிய விரசிங்கத்தின் நினைவாக உருவாக்கப்பட்டிருந்தது. ஒரு காலத்தில் யாழ்ப்பாண மாணவர் இயக்கம் இங்குதான் வலுவாக இயங்கியதாகக் கூறினார்கள். குழந்தைகள் நடனம், பறையாட்டம், நாடகம் என்று விரிவாக நடந்தது. கல்வித்துறைக்குப் பொறுப்பேற்ற ஜெயந்தஸ்ரீபாலகிருணன், நான், சுந்தரராமன் ஆகியோர் பேசினோம். அனைவருக்கும் நினைவுக் பரிசு வழங்கப்பட்டது.

பதினான்காம் தேதி பொங்கல் நாள். கிளிநொச்சியில் உள்ள கூட்டுறவு அரங்கத்தில் பொங்கல்விழா நடைபெற்றது. நாங்கள் அனைவரும் உற்சாகமாக கலந்துகொண்டோம். குழந்தைகள், பெண்கள் என்று அனைவரும் கலந்து கொண்டனர். அன்று அனைவரும் வீடுகளில் பொங்கல் கொண்டாடினாலும், அதைத் தாண்டி இந்த நிகழ்விலும் கலந்து கொண்டனர். பேராசியர்கள் அனைத்து வேலைகளையும் செய்தார்கள். சுந்தரராமனும் நானும் கரும்புகளை தூண்களில் கட்டினோம். எல்லோரும் குழந்தைகளாக மாறினோம் என்றால் அது மிகையாகாது. காலையில் உணவருந்தாமலேயே இந்தக் கொண்டாட்டம் தொடந்தது. ஒரு மாபெரும் அழிவிற்குப் பிறகு கண்களில் காணப்படும் மகிழ்ச்சி அந்த மக்களிடம் தென்பட்டது. வசீகரன், ரஞ்சிதன் போன்ற இளைஞர்கள் ஆர்வமாக ஒருங்கிணைத்தார்கள்.

நிறைவாக கிளிநொச்சி மக்களிடம் விடைபெறும் நேரம். மிகவும் நெகிழ்ச்சியாக அமைந்தது. வழியனுப்ப வந்தவர்கள் அனைவரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களாகவே இருந்தார் கள், அனைவரும் அழுதே விட்டார்கள். நவஜீவன் ஒரு குழந்தைபோல தேம்பித் தேம்பி அழுதுவிட்டார். எனது கண்களில் நீர் துளிர்ப்பதைத் தடுக்க முடியவில்லை. கடந்த பன்னிரண்டு நாட்கள் ஒரு குடும்பமாக பழகிய என்று சொல்வதைவிட வாழ்ந்த நாட்களை மறக்க முடியாமல் திகைத்துத்தான் போனார்கள். இனி இந்த நாட்கள் வருமா? என்ற ஏக்கம் அனைவர் மனத்திலும் நிறைந்தது.

ஒரு வழியாக பிரியாவிடை பெற்று கொழும்பு நோக்கிக் கிளம்பினோம். எங்களுடன் நவஜீவன் வந்து நீர்கொழும்பில் உள்ள ஒரு விடுதியில் தங்க வைத்துவிட்டு மறுநாள் காலையில்தான் சென்றார். நாங்கள் மறுநாள் நீர்கொழும்பு கடற்கரையைப் பார்த்தோம். நவ நாகரிக மேற்கத்திய அனைத்து அடையாளங்களும் தென்பட்டன. பெண்களும் ஆண்களும் முக்கால் நிர்வாண உடைகளில் காலைவேளையிலேயே திரிந்தனர். நல்லவேளையாக யாழ்ப்பாணம் இப்படியான பண்பாட்டுச் சீரழிவிற்கு இன்னும் செல்லவில்லை என்ற ஆறுதல் ஏற்பட்டது.

பிற்பகல் ஒன்றரை மணியவில் விமானம் பண்டாரநாயகா நிலையத்தில் இருந்து மதுரை நோக்கிப் புறப்பட்டது. இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை.

**-பாமயன்**
**இயற்கை விவசாயி, தமிழ்நாடு**


சமூகக் கலந்துரையாடல்
COMMUNITY FORUM

**3PM TO 6PM**
**SATURDAY, FEBRUARY 10**
**1377 LAWRENCE AVE EAST**

அறிந்து கொள்ளுங்கள்:
- தொழிலாளர்களைப் பாதுகாக்கும் புதிய ஒன்ராறியோ சட்டங்கள்
- குறைந்தளவு ஊதிய உயர்வு மற்றும் புதிய பணிக் காப்புறுதித்திட்டங்கள்
- உங்களுக்கு நீதியான ஊதியம் வழங்கப்படுகின்றதா? உரிய நேரத்துக்கு கொடுக்கப்படுகின்றதா?
- தொழிலாளர் உரிமை தொடர்பாக உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் கற்பிக்க வேண்டியவை என்ன?
- பணியிடங்களில் நீங்கள் தவறாக நடாத்தப்படுவதை நீங்கள் எப்படி அடையாளம் காண்பது மற்றும் அது தொடர்பாக என்ன செய்யலாம்

LEARN ABOUT :
- New ONTARIO LAWS to PROTECT WORKERS
- Minimum Wage increase & new benefits
- Are you being paid fairly? On time?
- What to teach your children about their worker rights
- How to identify worker abuse & what to do about it

மேலதிக தொடர்புகளுக்கு www.tamilworkers.org என்னும் இணையத்தளத்திலோ அல்லது எமது முகநூல் பக்கம் ஊடாகவோ அல்லது 416 230 9566 என்ற இலக்கத்திலோ எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

For information visit www.tamilworkers.org and follow on Facebook or call 416 230 9566.

TAMIL WORKERS NETWORK
தமிழ் தொழிலாளர்கள் வலைப்பின்னல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கையோடு இணைக்கவென இரு வாரங்கள் தாய் மண்ணில்!

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்று சொல்லிப் போனான் வள்ளுவன். உழவுத் தொழிலின் மகிமையைக் குறிப்பிட மட்டும் அவன் அதைச் சொல்லவில்லை. அவனது காலத்தில் உழவின் மூலம் பெறுவதையே அனைவரும் உணவாகப் பகிர்ந்து உண்டு வாழ்ந்தார்கள். உழவரை நம்பி வாழ்ந்த உழவர் அல்லாதோரைத் தான் 'தொழுதுண்டு பின் செல்பவர்'என வள்ளுவன் சொல்லி இருக்கக் கூடும்;. உழுதே உண்ணும் சமூகமானது எளிமையானதாக தேவைகள் அதிகம் கொண்டிராத ஒருவகைத் தன்னிறைவுள்ள ளரடிளளைவநஸீஉந என ஆங்கிலத்தில் சொல்லக் கூடிய சீவனம் உறுதிப்படுத்தப் பட்ட சமூகமாக இருந்திருக்கும். கபடம் தெரியாத அவ்வகை சமூகத்தினூடாகத் தான் நாமும் பயணித்து வந்திருக்கிறோம். உலகின் சில பாகங்களில் அவ்வகை அடிப்படைக் கட்டமைப்புக் கொண்ட அபூர்வமான சமூகங்கள் இன்னும் சில இருக்கத்தான் செய்கின்றன.

### வந்த பாதை


காலப்போக்கில் எல்லா விவசாய சமூகங்களையும்; போலவே எம்மவரும் செழிப்பு என்ற செல்வ நிலையில் இல்லாவிட்டாலும் சிக்கனம், சேமிப்பு, கூட்டு முயற்சி, உழைப்பின் மூலம் உண்ணுதல், அதையும் அளவாக உண்ணுதல், நில வளம் பேணுதல், நீர் வளம் பாதுகாத்தல், கழிவுகளைத் தவிர்த்தல், கால்நடைக்குக் கொடுத்தல், அனைத்தையும் மண்ணுக்குள் சேர்த்தல் என இயற்கையின் சுழற்சி வட்டங்களைத் தெரிந்தவர்களாக, அவற்றுக்கமைய இயற்கையுடன் இசைவாக வாழ்ந்திருக்கிறர்கள். விவசாயத்தைப் புதுப்பித்து வளர்த்தெடுத்து வந்திருக்கிறார்கள். அண்மைக்காலத்தில் இலாபம் தரும் பயிர்வகைகளைத் தேர்ந்தெடுத்து தெற்குக்கு ஏற்றுமதியும் செய்தார்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வரையிலும் கூட பண்பாட்டு விழுமியங்களும் பயிற்செய்கை மரபுகளும் பின்னிப்பிணைந்து இருந்தது போல உண்போருக்கும் உழுவோருக்கும் இடையே நெருக்கமும் இருந்தது. உணவின் தரம் உறுதிப்படுத்தப் பட்டிருந்தது. உணவை மருந்தாகவும் உண்பதைப் பண்பாட்டு அம்சமாகவும் கொள்ளும் பக்குவம் இருந்தது.

### இன்றைய கேள்விகள்

இவையெல்லாம் உண்மை என்றால் எமக்கும் எமது வழக்கங்களுக்கும் நடந்தது என்ன? இன்று 'நஞ்சற்ற உணவு விற்பனை செய்யும் நிலையம்' எனப் பெயரிட்டுக் காய்கறி விற்கும் அளவுக்கு எமது விளைச்சலில் நச்சுப் பொருட்கள் எப்போது வந்து சேர்ந்தன? யார் கொண்டு வந்தார்கள்? அவற்றின் பாதிப்பு என்ன? அதற்கு சமூகம் கொடுக்கும் விலையென்ன? பயிர் மட்டும் தான் நச்சுடையதா? அல்லது நாம் பண்படுத்திய நிலமும் நிலத்தடி நீரும் மாசு பட்டுள்ளனவா? இவற்றைத் தடுப்பது எப்படி? மாற்றீட்டு வழிகள் எவை?

அத்தனையும் பெரிய கேள்விகள். அவை எமக்கு மட்டும் உரிய கேள்விகளும் கூட அல்ல. நாம் இவ்வகை வளர்ச்சிக்கு விதி விலக்கானவர்களும் அல்ல. முழு உலகும் நவீன, தொழில்நுட்ப அறிவு தந்த, உற்பத்திமயப் படுத்தப்பட்ட விவசாயத்தின் வளர்ச்சியுடன் சேர்த்து இரசாயனப் பொருட்களின் பாவனையுடனும் அதன் பின்விளைவுகள் தரும் சிக்கலிலும் மாட்டித் தத்தளிக்கிறது. ஆனால் பெரும்பாலான மக்களுக்கு இதன் பாரதூரம் தெரியாது. விலையை மட்டும் இலக்காகக்;



கொண்டு மலிவென்றால் எதையும் வாங்கும் நிலையில் தான் நுகர்வோர் இன்றுள்ளனர். நாம் புலம் பெயர்ந்து குடியேறி வாழும் வளம் மிக்க நாடுகள்; பலவற்றிலும் இதே நிலைதான்;.

ஆனால் தமிழ் மண்ணைப் பொறுத்த வரையில் ஒரு முக்கிய வேறுபாடு எம்மை மற்றவர்களிடம் இருந்து பிரிக்கிறது. அதே காரணத்துக்காக அங்கே ஒரு அவசரமும் இன்று தேவைப்படுகிறது. காரணம் இது தான். முப்பது ஆண்டு கால யுத்த சூழலில் எமது வளர்ச்சியில் ஏற்பட்ட தடங்கலும் கிடைக்காமல் போன இரசாயனப் பொருட்களும் எமது மண்ணையும் பயிர்களையும் உணவையும் எவ்வாறு ஓரளவேனும் பாதுகாத்தன என்பது எவ்வளவு உண்மையோ அது போலவே இன்று யுத்தத்தின் பின்னான குறுகிய காலத்தில் அவை எல்லாவற்றுக்கும் ஈடுசெயும் வகையில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் நவீன மயமாக்கல், உற்பத்திப் பெருக்கம், வந்து சேரும் இரசாயன உள்ளீடுகள், புது வகை உணவுகள் எல்லாமே அச்சுறுத்தல்களாக உள்ளன என்பதும் உண்மையே. இன்று பொதுமக்கள் ஒரு பகுதியினரிடையேயும் அதுபோல மருத்துவர்கள் உட்பட துறைசார் வல்லுனர்கள், சமூக ஆர்வலர்கள்; போன்றோர் மட்டத்திலும் இவற்றின் விளைவுகள் பற்றிய உணர்வும் அக்கறையும் ஏற்பட்டுள்ளது. மாற்று வழிகளுக்கான தேடலும் அங்கே தொடங்கியுள்ளது. இது நல்ல செய்தி.

### புதிய வெளிச்சம்

இந்தப் பின்னணியில்தான் மேற்கூறிய கேள்விகளை ஒட்டிய கல்வியும் ஆய்வு அனுபவமும் கொண்ட நானும் என் துணைவியும், இதே தலைப்பினை ஒரு பேசுபொருளாகத் தாய் மண்ணில் முன்னெடுக்க வேண்டும் எனப் பேரார்வம் கொண்ட புதிய வெளிச்சத்தினரும் ஒன்றிணைந்து செயற்படும் வாய்ப்பும், அத்துடன் இதே சிக்கலிலிருந்து தமிழ்நாட்டு விவசாயத்தினை மீட்டெடுக்கும் முயற்சியில் முன்னின்றுழைக்கும் திரு பாமையன் அவர்களை உள்ளடக்கிய ஐந்துபேர் கொண்ட ஒரு அணியுடன்; சேர்ந்தியங்கும் ஓர் அரிய வாய்ப்பும் அண்மையில் கிட்டின.

'புதிய வெளிச்சம்' ஏற்படுத்திய செயல்திட்டத்தின் படி 'இயற்கை வழி விவசாய வாரம்' என அறிமுகம் செய்யப்பட்ட ஜனவரி 8—14 வரையிலான ஒரு வாரமும், அதற்கு முன்னும் பின்னருமாக மேலுமொரு வாரமும் பல்வேறு மக்கள் சந்திப்புகள், பயிற்சிப் பட்டறைகள், செயலமர்வுகள், களப் பயணங்கள், பொங்கல் விழாக்கள் என நான் பெற்றுக்கொண்ட நேரடி அனுபவங்களில் ஒரு பகுதியையேனும் இவ்விடத்தில் பகிர்ந்து கொள்ளவும் முக்கிய செய்திகள் சிலவற்றை எடுத்துச் சொல்லவும் விழைகிறேன்.

இன்றைய காலகட்டத்தில் விவசாய முயற்சிகளில் நச்சுத்தன்மை கொண்ட இரசாயனப் பொருட்களின் பாவனையையும் அவற்றால் மண், மக்கள், சூழலினது நலம் பாதிக்கப் படுவதையும் அகற்றவென சேதன விவசாயம், உயிர் விவசாயம், அல்லது Organic Farming என்ற பெயர்களில் வளர்ந்துகொண்டுவரும் விவசாய முறையினை ஒருமாற்றீடான முறையாக எமது விவசாயிகளிடையே புகுத்துவதை நோக்கமாகக் கொண்டே நாம் களமிறங்கினோம். இயற்கை வழி விவசாயம் அல்லது ஆங்கிலத்தில் Ecological Farming என்ற சொற்பதத்தை இச் செயற் திட்டத்துக்குரிய பெயராகவும் சேர்த்துக் கொண்டோம்.

எமது இன்றைய விவசாயிகளின் மூதாதையர் பாரம்பரிய விவசாய முறையாக மேற்கூறிய இயற்கை வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விவசாயத்தையே பின்பற்றிவந்தனர். அப்படியாயின் இது முற்றிலும் புதியதல்லவே, ஏன் இம்முறையை நாம் இன்று அறிமுகம் செய்ய வேண்டியுள்ளது என்ற கேள்வி எழுகின்றது. இவ்விடத்தில்தான் ஓரிரு வரலாற்றுக் குறிப்புக்கள் தேவைப்படுகின்றன.

**உலகளாவிய இயக்கம்**

நூற்றுப் பத்து ஆண்டுகட்கு முன்னர் ஜெர்மனியின் போர்த் தேவைகட்கெனத் கண்டுபிடித்து உற்பத்தி செய்யப்பட்டதே யூரியா எனும் இரசாயனப் பொருள். அதுவே விவசாய உரமாக ஊர்வலம் வரத் தொடங்கியதோடு கிளம்பிய நவீன விவசாயப் பாதைதான் பின்னர் அறிவியல் தந்த வேறுபல தொழில்நுட்ப வளர்ச்சிகளையும் உள்வாங்கி 1950களில் பசுமைப் புரட்சியாக மலர்ந்தது. உரத்தோடு சேர்த்து களை, கிருமி, பூச்சி கொல்லிகளும்; உயர் ரக விதைகள், உளவு யந்திரம், நீர்ப்பாசனம் என்பவை நவீனத்துவத்தின் பரிசுப் பொதியாக வறிய நாடுகளின் பசி தீர்க்கும் நெற்பயிர் செய்கைக்கென இலங்கையையும் 1960களில் வந்தடைந்தது என்பது ஒரு வரலாறு. அந்த வளர்ச்சியும் விளைச்சலும் தந்த இலாபங்களோடு கூடவந்த நச்சூட்டலைத்தான் இங்கே பேசுகிறோம்.

அவ் வளர்ச்சியின் மறுபக்கமாக இரசாயன உரங்கள் அறிமுகமாகி 30 வருடங்களுக்குள்ளேயே தமது பண்ணை நிலங்கள் தமது உயிர்ப்பையும் வளத்தையும் இழந்து மலடாகியதைக் கண்டு ஏங்கிய ஐரோப்பிய நாட்டு சிந்தனையாளர்கள், செயற்பாட்டாளர்கள் சிலர் அந்நேரத்தில் பெயரெதுவும் இல்லாமல் இயல்பாக இயங்கிவந்த பாரம்பரிய நிலவளம் பேணும் முறைகளை இந்திய மண்ணிலும் சீன, ஜப்பான் போன்ற ஆசிய நாடுகளிலும் கண்டு எடுத்துப் போய் அவற்றின் அடிப்படையில் 1940 களில் Organic Farming எனப் பெயரிட்டு ஒரு மாற்று வழியை முன்னெடுத்தனர் என்பது இன்னொரு வரலாறு.

அந்த முயற்சியின் பெறுபேறாக இரசாயன வழிக்கு மாற்றுவழி தேடிக்கிளம்பிய ஐந்து விவசாயிகளது குழுக்கள் 1972 இல் பிரான்ஸ் நாட்டில் உருவாக்கிய IFOAM எனப்படும் மக்கள் இயக்கமே இன்று உலக மட்டத்தில் 179 நாடுகளின் இயற்கைவழி வேளாண்மைக்கான கட்டுப்பாடுகள், உத்தரவாதம், சந்தைப் படுத்தல் போன்ற அம்சங்களின் பெரும் வளர்ச்சிக்கும் கண்காணிப்புக்கும் பொறுப்பாக உள்ளது.

ஒவ்வொரு பண்ணையும் ஒரு உயிர்வாழும் தொகுதி, அது இயல்பாகவே ஒரு உயிரியின் organism தன்மை கொண்டது என்பதால் அதை இயல்பாக முழுமையாக ஒரு 'organic whole' ஆகப் பண்படுத்துவதும் பராமரிப்பதுமே விவசாயம் என்றார்கள். எதையும் கூறு போடாமல் தொகுத்துப் பார்க்கும் கீழைத் தேய சிந்தனையோடு மண்ணையும் அதனூடு வாழும் கண்ணுக்குத் தெரிந்த தெரியாத பல்லுயிரினங்களையும் மதிக்கவல்ல ஒரு ஆன்மீகத் தன்மையையும் உள்வாங்கி மேற்கில் வளர்ந்த மனிதாபிமானம் நிறைந்த இவ் விவசாய முறையை இன்று நாம் மீளக் கொண்டுவந்து பேரிட்டுக் கூறி நமது சமூகத்தினிடையே அறிமுகம் செய்து நம்ப வைக்க வேண்டிய நிலை காலத்தின் தேவையாகவும் ஒருவகையில் வியப்புத் தருவதாகவும் உள்ளதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

ஆங்கில மொழியில் வழங்கும் organic என்ற சொல்லைவிட ஐரோப்பிய மொழிகள் பலவற்றில் காணப்படும் ecologic farming என்ற பதம்; செழுமையாகவும் முழுமையாகவும் உள்ளது போல இயற்கைவழி விவசாயம் என்பதும் தமிழில் மயக்கம் தவிர்க்க வல்ல பரந்தவொரு கோட்பாடாக எமக்குத் தென்படுகிறது.

**இனியென்ன தேவை?**

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் ஒழுங்கு செய்யப் பட்டிருந்த பத்து அரங்கங்களில் எமது அணி ஏறத்தாழ ஆயிரம் மக்களைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றோம். பெரும்பாலானோர் விவசாயிகளாகவும், மற்றையோரிடையே பெற்றோர், விவசாயக் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள்;, அரச ஊழியர்கள், இயற்கை பேணும் செயற்பாட்டாளர்கள் என பல்வேறு ஆர்வமும் அனுபவமும் கொண்டோர் கலந்து கொண்டனர். பெண்களின் பங்கு மேலோங்கியிருந்தது உற்சாகமளித்தது.

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் ஒழுங்கு செய்யப் பட்டிருந்த பத்து அரங்கங்களில் எமது அணி ஏறத்தாழ ஆயிரம் மக்களைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றோம்.

இலங்கையிலும் தமிழகத்திலும் உலக நாடுகளிலும் இவ் வேளாண் துறையின் தேவை, வளர்ச்சி, சவால்களை ஒட்டிப் பேசியதைத் தொடந்து இன்றைய தமிழ்நாட்டு விவசாயிகளது நடைமுறை அனுபவங்களும், இரசாயனக் கலவைகட்குப் பதிலாக அவர்கள் வளர்த்தெடுத்துள்ள இயற்கைவழி மாற்றீட்டு தயாரிப்புகள,; அவற்றைத் தயாரிக்கும் முறைகள் என்பன செயற்பாட்டின் மூலம் விளக்கப் பட்டிருந்தன. யுத்த காலத்திலும் பின்னரும் தமிழ் நாட்டில் வேளாண் துறைசார் அறிவினை வானொலி மூலம் கேட்டுப் பெற்ற அனுபவம் கொண்டிருந்த விவசாயிகளுக்கு தமிழ் நாட்டில் முன்னோடிகளாக விளங்கும் மூத்த விவசாயிகளுடன் நேரடியாகக் கண்டு பேசும் வாய்ப்பு சிறப்பானதாக அமைந்தது.

கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கு சென்றுவந்ததன் மூலம் அம்மண்ணில் விவசாயிகள் எதிர்நோக்கும் கேள்விகள் பற்றிய அறிவு பெறவும் இம் முயற்சியில் பல்கலைக் கழகங்களின் பங்கு பற்றியும் உரையாட முடிந்தது. இலங்கையின் விவசாயத்தில் பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, தெங்குப் பொருட்கள,; மற்றும் கறுவா, கராம்பு போன்றஏற்றுமதி உணவுப்பொருட்களை இரசாயனப் பொருட்கலப்பின்றி ஏற்றுமதிக்காக வளர்க்கும் முயற்சியே முன்னிலை பெறுவதாகத் தெரி;கிறது. அடிப்படை உணவுப் பொருட்கள் சார்ந்த விவசாயத்தில் அரசின் அக்கறை பெரிய அளவில் இல்லாத நிலையே அண்மைவரை நிலவி வந்தது. புதிய சில சட்டங்கள் இயற்றப்பட்டதன் மூலம் மக்கள் அன்றாடம் உட்கொள்ளும் உணவு பற்றிய புதிய அக்கறை ஏற்பட்டுள்ளது கவனத்துக்குரியது.

பொதுவாகவே சுனாமியின் பின் வந்த பல பிறநாட்டு உதவி நிறுவனங்கள் இயற்கைவழி வேளாண்மையை அறிமுகம் செய்து சில இடங்களில் மானியம் கொடுத்தும் விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளார்கள். இருந்த போதும் அவ்வகை நிறுவனங்களது செயற்பாடு தொடர்ச்சியானது இல்லை என்பதும், ஒதுக்கப்பட்ட நிதி முடிய அவர்களது செயற்திட்டம் தடைப்படுவது தவிர்க்கப்படவேண்டுமாயின் தொலைநோக்குடனான கொள்கை வகுப்பும் அரச ஆதரவும் எவ்வகை மாற்றத்துக்கும் அவசியமானவை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

தமிழ் விவசாயிகளைப் பொறுத்த வரையில் நெற்பயிர் செய்வோர் மாற்று வழிகளில் பூச்சிகளை கட்டுப்படுத்துவது, இயற்கை உரம் தயாரிப்பது போன்ற பயிற்சிகளைப் பெற்றவர்களாகவும் இயற்கை உரங்களை முடிந்த அளவு பயன்படுத்தி மேலதிக தேவைகளுக்கு இரசாயனப் பசளைகளைப் பெறும் தன்மை கொண்டவர்களாகவும் உள்ளனர். அவர்களிடையே அனுபவம் பெற்ற விவசாயிகள் தத்தமது பொருட்களுக்கு சரியான விலைகொடுத்தும், உரிய இடத்தில் மேலதிக விலைகொடுத்தும,; நச்சற்ற உணவுப்பொருள்களென்ற உறுதியோடு நுகர்வோர் வாங்கத் தயாரென்றால் தாம் விளைவிக்க ஆயத்தம்; என்கிறார்கள்.

சந்தைப் படுத்தும் வாய்ப்பும் விளைச்சலில் ஏற்படக்கூடிய வீழ்ச்சியை ஈடு செய்யக் கூடிய விலை குறித்தலும் உறுதிப்படுத்தப் பட்டதன் மூலம் தான் மேற்கு நாடுகளில் இயற்கைவழி வேளாண்மை ஆரம்ப கட்டத்திலாவது வளரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அதுபோலவே தமது உணவின் தரம், பாதுகாப்பு பற்றிய அக்கறையும் அதற்கான உத்தரவாதம் தரக்கூடிய விவசாயிகளுடைய உற்பத்திக்கு மதிப்பளித்து மேலதிக விலை கொடுத்து வாங்கத் தயாராக உள்ள நுகர்வோரும் இந்த வளர்ச்சிக்கு அவசியமானவர்கள்.

உழுவோரும் உண்போரும் என ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட இவ்விரு பகுதியினருக்கும்இடையே நம்பிக்கையும் நல்லுறவும் அவசியமானது. இது தானாக வளராது. நம்பிக்கை, உத்தரவாதம் என்பவற்றை உறுதிப்படுத்தக் கூடிய கட்டுப்பாடுகளையும், சந்தைப்படுத்தலையும் ஒழுங்கு செய்யும் பொறுப்பை முடிந்த அளவு அரசு கையில் எடுப்பதும், இவை அனைத்தையும் இயக்கிச் செல்லவும் அழுத்தம் கொடுக்கவும் வல்ல சமூக அமைப்புகளும் வளர்ச்சிக்கு அவசியமானவை என்பது மற்றைய நாடுகளிலிருந்து பெற்ற அனுபவமாகும.

எங்களது பார்வையில் இவ் வெவ்வேறு கூறுகள் ஒரு புள்ளியில் சந்திப்பது சாத்தியமானது. ஆனால் அச் சந்திப்பு இலகுவாகவோ தானாக நிகழப் போவதோ அல்ல. ஆனால் சமூக மட்டத்தில் முக்கியமான இடங்களில் இன்று காணப்படும் விழிப்புணர்வும், மாதிரிப் பண்ணைகள், சந்தைப்படுத்தும் மையங்கள், மாற்றீடான உரம் மற்றும் பயிர்ப் பாதுகாப்புக்குமான தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் முயற்சி என்பன வெளிப்பட்டிருப்பதும் உற்சாகம் தரும் குறிகளாக உள்ளன. மாகாண அரசின் மட்டத்தில் நாம் கண்டுகொண்ட ஆதரவான நிலையும் இவ் வளர்;ச்சிக்குத் தேவையான உயர்கல்வியையும் ஆய்வுகளையும் வழங்கக் கூடிய விவசாயக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் பங்குபற்றலும் நிகழும்போது முயற்சிகள் மேலும் வலுப்பெறும்.

**நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா,**
**தகைநிலைப் பேராசிரியர்,**
**சுவீடன் விவசாயப் பல்கலைக் கழகம்,**
**உப்சாலா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# #1 Outstanding Agent *for* Outstanding Results. FOR SALE



Bedrooms:2/ Washrooms:1
Toronto



Bedrooms:1+1 / Washrooms:1
Toronto



Bedrooms:3 / Washrooms:2
Whitby



Bedrooms:3/ Washrooms:3
Toronto



Bedrooms:1+1/ Washrooms:1
Toronto



Bedrooms:2/ Washrooms:2
Markham



Bedrooms:2/ Washrooms:2
Toronto



Bedrooms:3+1/ Washrooms:4
Stouffville



Bedrooms:4+1/ Washrooms:6
Toronto



Bedrooms:4+1/ Washrooms:4
Markham



Bedrooms:4+3/ Washrooms:4
Richmond Hil




**RE/MAX Excel Realty Ltd., Brokerage***

Bus: 905.475.4750 Fax: 905.475.4770
50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
*Independenlty Owned And Operated

*Not intended to solicit Sellers or Buyers currently under written contract with another Realtor.*

**Raj Nadarajah**
Sales Representative
**Dir: 416.333.6115**
nanohomes@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வெளிச்சம் 2018

# தாயக கல்வி, விவசாய பட்டறை நிகழ்வுகள்



கலாநிதி பேராசிரியர் ஜெயந்தஶ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களுக்கு இலங்கையின் வடக்கு முதல்வர் திரு சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் சிறப்பு கௌரவத்தை வழங்கியிருந்தார்.



கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஹரி ஆனந்தசங்கரி நேரில் வந்து முல்லைத்தீவு இளைஞர்களுக்கான பயிற்சியில் கலந்துகொண்டபோது



வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கௌரவ சிவநேசன் நேரில் வந்து வாழ்த்துக்கள் தெரிவித்த போது.



வடக்கு மாகாணத்தின் கௌரவ கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்கள் நேரில் வந்து தமது வாழ்த்துக்களை தெரிவித்தபோது...

போரின் பேரழிவிற்குப் பின்னர் எங்களில் பலர் மனதிலும் எழுந்த அடுத்தது என்ன என்ற கேள்வியின் பதிலாக "புதிய வெளிச்சம்" கடந்த 2016 ஆம் ஆண்டு போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளவியல் ஆற்றுப்படுத்துகை மற்றும் நெறிப்படுத்துகையினை வடக்கு, கிழக்கு தாயகம் எங்கும் சுமார் 10,000 மாணவர்கள், கணவனை இழந்தவர்கள், போரில் அங்கவீனமானவர்களை நேரில் சென்று பேராசிரியர் ஜெயந்தஶ்ரீ பாலகிருஷ்ணனின் உதவியுடன் மேற்கொண்டிருந்தது

இந்த வருடம் புதிய வெளிச்சம் வடக்கின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் 31 முழு நாள் பயிற்சி கருத்தரங்குகள் மற்றும் 6 க்கு மேற்பட்ட பாதி நாள் பயிற்சிகளையும் செவ்வனே செய்து கடந்த கிழமை கனடா திருப்பியுள்ளார்கள்.

1. ஐந்து நாள் பாடசாலைக் கல்வியை பூர்த்திசெய்த மாணவ மாணவியருக்கான வழிகாட்டல் பட்டறை.
2. ஐந்து நாள் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் வழிகாட்டல் பட்டறை.
3. ஒரு நாள் அதிபர்களுக்கான பட்டறை
4. விவசாயிகளுக்கான இயற்கைவிவசாய செயல்முறை பட்டறை.

கல்வியியல் பேராசிரியர்கள், அனுபவம் வாய்ந்த விவசாயிகள், இந்தியா, கனடா, சுவீடன் ஆகிய நாடுகளில் இருந்து சுமார் 15 க்கு மேற்பட்ட வளவாளர்கள் கொண்டு இம்முறை நடைபெற்றிருந்த பயிற்சிப்பட்டறைகள் மூலமும், இயற்கை விவசாய வாரமாக ஜனவரி 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டதன் மூலமும், இயற்கை விவசாயம் தொடர்பில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மிகப்பெரிய அளவில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த விழிப்புணர்ச்சி மேலும்வளர்ச்சியடைய தேவையான முயற்சிகளையும் புதிய வெளிச்சம் மேற்கொண்டது .

இந்நிகழ்வுகளில் இறுதியில் எம்மிடம் அழிந்துபோன 24 வகை மரபு நெல் இனங்கள், மற்றும் கனடா, அமெரிக்கா, தமிழ்நாடு போன்ற இடங்களிலிருந்து 50 வகையான மரக்கறி தானியங்கள் அறிமுகப்படுத்தப்பட்டும், 2500 டொலர் பெறுமதியான இலகு விவசாய கருவிகளும் வழங்கபட்டன.

இதன் மூலம் இயற்கை விவசாய தேடலை மக்களுக்கு வித்துட்டது மட்டுமல்லாது புலம்பெயர் தமிழர்கள் தாயகத்தின் விவசாய நிலங்களை பாதுகாக்க வேண்டிய குறியீட்டு நிகழ்வாகவும் புதியவெளிச்சம் 2018 வெளிச்சம்காட்டுகின்றது

====

மொத்தம் முப்பத்தியொரு முழுநாள் பயிற்சிப் பட்டறைகள், இரண்டு பாதி நாள் பட்டறைகள், ஆறு கலந்துரையாடல்கள், மூன்று நிகழ்வுகள், "அடுத்தது என்ன?" என்ற தலைப்பில் இரண்டு கலந்துரையாடல்கள், உள்ளூர் ஆர்வலர்கள், அறிஞர்கள் உடனான சந்திப்புக்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வியியலாளர்கள், இளைஞர் யுவதிகள், விவசாயிகள், சமூக தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் பங்களிப்புடன் புதிய வெளிச்சம் 2018 தனது சேவையை வழங்கியிருந்தது.

ஜனவரி 1ஆம் திகதி முதல் 18 ம் திகதி வரை யாழ்ப்பாணம் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களை சேர்ந்த பயனாளிகளுக்கு மூன்று பிரிவுகளில் இலவச பயிற்சிப் பயிற்சிப்பட்டறைகள், புதிய வெளிச்சம் என்ற கருப்பொருளில் ஒழுங்குசெய்யப்பட்டு சிறப்புற நடைபெற்றிருந்தன.. இந்த பயிற்சிப் பட்டறைகளை நடத்த இந்தியாவில் இருந்து பேராசிரியர் ஜெயந்தஶ்ரீ பாலகிருஷ்ணன் தலைமையிலான வளவாளர்களுடன் சுவீடன் பேராசிரியர் நடராஜ ஶ்ரீஸ்கந்தராஜா மற்றும் கனடாவில் இருந்தும் வளவாளர்கள் வருகை தந்திருந்தார்கள். இவர்களுடன் யாழ்ப்பாணத்ததை சேர்ந்த துறைசார் வல்லுனர்களையும் இணைத்தே இந்த பயிற்சிப்பட்டறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயற்கை விவசாயி பாமயன் கிளிநொச்சி விவசாய பல்கலைக்கழகத்தில்...

அரசு கலைக் கல்லூரி, அவினாசி, தமிழ் நாட்டில் ஆங்கிலத்துறைத் தலைவராக பணிபுரிந்து வருகிறார்.

யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த, தற்போது சுவீடனில் வாழ்ந்துவரும், சுவீடன் பல்கலைக்கழகத்தில் இயற்கை விவசாயத்தில் பல ஆய்வுகளை மேற்கொண்டிருந்த, வெவ்வேறு பல்கலைக் கழகங்களில் பணிபுரிந்திருந்த பேராசிரியர் நடராஜ ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் இயற்கை விவசாய பயிற்சிப்பட்டறைகளுக்கு தலைமைதாங்கி நடத்தியிருந்தார். இதன் மூலம் ஜனவரி 8 ஆம் திகதி முதல் ஜனவரி 14ஆம் திகதி வரையான ஒருவார காலத்தை "இயற்கை விவசாய விழிப்புணர்வு வாரம்" ஆக பிரகடனப்படுத்தி வடக்கு கிழக்கு முழுவதும் தொடர் பயிற்சிப்பட்டறைகளும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடைபெற்றிருந்தன.



இயற்கை விவசாய பட்டறைக்கு சென்ற போது அவ்வூர்மக்களால் கொடுக்கப்பட்ட வரவேற்பின்போது



யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இறுதிநாள் பொதுநிகழ்வாக புதியவெளிச்ச நிகழ்வில் பண்பாட்டு மலர்ச்சி கூடத்தின் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரின் தெருவெளி அரங்க ஆற்றுகையின் நிகழ்வு



புதிய வெளிச்ச நிகழ்வின் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நவஜீவன் அனந்தராஜ் உரையாற்றிய போது



புதியவெளிச்சம் நிகழ்வில் ஊள்ளூர் வளவாளர்கள் பெரிதும் பங்காற்றி சிறப்பித்திருந்தார்கள். இதில் முக்கியமானவர்களில் திரு லலீசன் ஆசிரியர் அவர்கள் கோப்பாய் ஆசிரிய பயிற்சி உதவி அதிபர்

ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் ஒழுங்கு செய்யப்பட்ட புதியவெளிச்சம் என்ற கருப்பொருளிலான இந்த பயிற்சிப்பட்டறைகள், சரியான வழியில், பயன்பெற வேண்டியவர்களை சென்றடைவதில் மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், வடமாகாண கல்வி அமைச்சு, கல்வித் திணைக்களங்கள், பாடசாலைகள், வடமாகாண விவசாய அமைச்சு, விவசாய திணைக்களம், விவசாய கல்லூரிகள், யாழ்ப்பல்கலைக்கழக விவசாய பீடம் என்பவற்றின் ஒத்துழைப்பு பெறப்பட்டிருந்தது.

கல்வியியல் சார் பயிற்சிப் பட்டறைகளை நடத்தவென தமிழகத்திலிருந்து வருகைதந்திருந்த வளவாளர் குழு,

1. கலாநிதி பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்கள் ஆங்கிலம், தமிழ் என இரு மொழிகளிலும் கலாநிதிப் பட்டம் பெற்றவர், கல்வியாளர், சிறந்த பேச்சாளர், தனது சொல் வான்மையால் இளைஞர்கள் மத்தியில் உன்னத பெயர் கொண்டவர், வாழ்வியல் தத்துவங்கள் மற்றும் நமது கலாச்சாரம், பண்பாடு, கல்வி மேம்பாடு குறித்த கருத்துக்களை வழங்கி வருபவர்.

2. கலாநிதி பேராசிரியர் கி. பாலகிருஷ்ணன், இவர் ஆங்கிலத்துறை பேராசிரியர், நாற்பது ஆண்டு காலம் தலைமை ஆசிரியராக இருந்தவர்.

3. கலாநிதி பேராசிரியர் ஹனி. பெனட், இவர் மிகவும் எளிய முறையில் ஆங்கிலம் பேச மற்றும் எழுத வழிமுறைகளை கற்பிக்கக்கூடியவர், ஆசிரியர் துறையில் நீண்ட கால அனுபவம் ஆங்கிலத்துறை பேராசிரியர்.

4. பேராசிரியர் ஷாரன் பெனட், இவர் மனோதத்துவத்துறைப் பேராசிரியர், மாணவர்களிடையே உள்ள அச்சம், ஞாபகசக்திக் குறைபாடு என்பவற்றைப் போக்கி அவர்களிடம் தன்னம்பிக்கையை வளர்க்க வல்லவர்.

5. பேராசிரியர் தாரணி ஆங்கில இலக்கியத்தில் கலாநிதி பட்டம் பெற்று

விவசாய பயிற்சி பயிற்சிப் பட்டறைகளை நடத்தவென திரு பாமயன் தலைமயிலான தமிழகத்தியிலிருந்து வருகைதந்திருந்த அனுபவம் வாய்ந்த விவசாயிகள் குழு,

1. திரு பாமயன், இருபது ஆண்டு கால இயற்கை விவசாய அனுபவம், இயற்கை விவசாயம் சார்ந்த இருபத்தைந்து நூல்களை எழுதியுள்ளார். இயற்கை விவசாய பயிற்றுனராக உள்ளார்.

2. திரு சுந்தரராமன், இருபத்தைந்து ஆண்டு கால இயற்கை விவசாய அனுபவம், இயற்கை விவசாய பயிற்றுனராக உள்ளார். தமிழகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சியில் நடந்த பொது பொங்கல் நிகழ்வில் கிளிநொச்சி ஆசிரியர், இளைஞர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட வரவேற்பு நடனம்



கிளிநொச்சி பொங்கல் நிகழ்வு



கிளிநொச்சியில் பொங்கல் விழா இறுதிநாள் நிகழ்வில் விவசாயத்துறை பட்டதாரி திரு ரஞ்சித்தன் மகேஸ்வரன் தொகுத்து வழங்க சான்றிதழ் கொடுக்கும் நிகழ்வு



கிளிநொச்சி அக்கராயன் குளம் விவசாயம் செய்யும் பெண்கள் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதி



கிளிநொச்சி அக்கராயன் குளம் விவசாயம் கற்கும் மாணவர்களின் ஒரு பகுதி



மன்னாரில் இயற்கை விவசாயிகள் கருத்தரங்கின் போது விவசாய மாணவிகளின் அணிவகுப்பு



புதிய வெளிச்ச நிகழ்வுகளை செயல்பட நடத்திய குலசிங்கம் வசீகரனுடன் இயற்கை விவசாயி பாமையன்



முதலாவது இயற்கை விவசாய பண்ணையை அமைத்தவர்.

3. திரு ரவி, இருபத்தைந்து ஆண்டு கால இயற்கை விவசாய அனுபவம், மண்புழு வளர்ப்பில் வல்லுநர். பயிற்றுனராக உள்ளார். மிகப்பெரிய அளவில் மண்புழு உற்பத்தியில் ஈடுபடுபவர்.

4. திரு சதுரகிரி, பத்து ஆண்டு கால இயற்கை விவசாய அனுபவம். இயற்கை விவசாய பயிற்றுனராக உள்ளார்.

5. திரு கஜேந்திரமூர்த்தி,



அக்கராயன் குளம் நிகழ்வில் பங்குகொண்ட மாணவர்களுடன் நவஜீவன் அனந்தராஜ்

இயற்கை விவசாயத்தில் ஈடுபாடுள்ளவர், பெரிய அளவில் இயற்கை விவசாயத்தில் ஈடுபடுபவர். பொறியியல் துறை வல்லுனராகவும், இயற்கை விவசாயத்தை இணைய தொழிநுற்பதினால் பகிரவும் செயற்படுபவர்

இவர்களுடன் கலாநிதி ஸ்ரீதேவி ஸ்ரீஸ்கந்தராஜா, இவர் விவசாயத் தொழிநுட்பத்துறையிழும்



இகுருவி ஐயாவை கௌரவிக்கும் பேராசிரியர்கள், விவசாயிகள்



புதிய வெளிச்சம் நிகழ்த்த பெரிதும் உதவிய ஆறுதல் நிறுவன பணிப்பாளர் திரு சுந்தரம் டிவகளாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் இரு இடங்களில் நடைபெற்ற விவசாய பட்டறையில் ஒரு பகுதி விவசாயிகள்




தமிழகத்தில் இருந்து கலந்து சிறப்பித்த விவசாயிகள் குழு



புதிய வெளிச்சம் கண்ட கனடாத்தாய் (லலிதா அம்மா )

கடந்த வருட எமது செயற்பாடுகளை பார்த்தவுடன் "நானும் உங்களுடன் பணியாற்ற வருகின்றேன்" என்று எம்முடன் கனடாவிலிருந்து வந்து கூடவே பணியாற்றியவர், எல்லாருக்கும் அம்மாவாகவும், ஒரு ஆசிரியராகவும், சில நேரத்தில் தனது பணத்தையும் செலவு செய்து நிகழ்வை நிறைவாக்கியவர்




புதியவெளிச்சம் நிகழ்வில் உள்ளூர் வளவாளர்கள் பெரிதும் பங்காற்றி சிறப்பித்திருந்தார்கள். இதில் முக்கியமானவர்களில் நடராஜா அனந்தராஜ் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் முன்னைநாள் உதவி கல்வி பணிப்பாளர்



சுந்தரராமன் ஐயா இயற்கை விவசாய செயல்முறை விளக்கம் கொடுத்தபோது விவசாயிகள் சூழ நின்று அவதானித்தல்

பூங்கனியியலிலும் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர், ஆகியோரும் இயற்கை விவசாய பயிற்சிப்பட்டறைகள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கான பயிற்சிப் பட்டறைகளில் கருத்துரைகளையும், ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார்கள்.

ஒரு வார ஆசிரியர்களுக்கான கற்பித்தல் வழிகாட்டல் பயிற்சிப் பட்டறைகள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில், நடைபெற்ற பயிற்சிப் பட்டறைகளில் முந்நூறுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பங்குகொண்டு பயனடைந்திருந்தார்கள்.

வடமராச்சி வலய கல்விப்பணி மனையிலும், கிளிநொச்சிக் கல்விப்பணி மனையிலும் பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களின் பாடசாலை அதிபர்களுக்கான கருத்துரை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது, இருநூறுக்கும் அதிகமான



இயற்கை விவசாயி சுந்தரராமன் ஐயா. தமிழ் நாட்டிலிருந்து வந்து மக்களோடு மக்களாக இயற்கை விவசாயம் செயல் வடிவம் கொடுத்தார்



இயற்கை விவசாயிகள் கருத்தரங்கின் போது மாணவிகளின் அணிவகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியாவில் விவசாய மாணவிகளில் ஒரு பகுதி



யாழ் வடமராட்சி கல்வி கோட்டத்தில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு.



இளைஞர்களுக்கான 5 நாள் பயிற்சியில் பங்குகொண்ட கிளிநொச்சி இளைஞர்களின் ஒருபகுதி



அதிபர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றியிருந்தார்கள்.

ஒருவார கால பாடசாலைக் கல்வியை பூர்த்திசெய்த இளைஞர் யுவதிகளுக்கான வழிகாட்டல் பயிற்சிப் பட்டறைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில், நடைபெற்ற பயிற்சிப் பட்டறைகளில் முந்நூறுக்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் பங்குகொண்டு பயனடைந்திருந்தார்கள்.

## விவசாயிகளுக்கான இயற்கை விவசாய பட்டறை

விவசாயிகளுக்கான இயற்கை விவசாய வழிகாட்டல், ஒரு நாள் பயிற்சிப் பட்டறைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஜனவரி 3ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நடைபெற்ற இயற்கை விவசாய பயிற்சிப்பட்டறையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், விவசாய மாணவர்கள், பெண் விவசாயிகள், பெண்தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், இயற்கை விவசாய ஆர்வலர்கள், விவசாயம் சார் உத்தியோகத்தர்கள் என பல்வேறுபட்ட தரப்பினரும் பங்குபற்றியிருந்தார்கள்.

ஜனவரி 13ஆம் திகதி யாழ் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில், ஜனவரி 1ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை நடைபெற்ற பயிற்சிப்பட்டறைகளின்



யாழ் வடமராட்சி கல்வி கோட்டத்தில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியாவில் பங்குகொணடவர்களின் ஒரு பகுதி



மன்னாரில் இயற்கை விவசாயிகள் கருத்தரங்கின் போது விவசாய மாணவிகளின் அணிவகுப்பு



முல்லைத்தீவில் நடைபெற்ற விவசாய பட்டறையில் ஒரு பகுதி விவசாயிகள்




இறுதி நாள் நிகழ்வாக யாழ் பொது நூல் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற "அடுத்தது என்ன " என்ற சமூகத் தலைவர்களுடனான கலந்துரையாடல்

மூல பெற்ற அனுபவங்களை தொகுத்துக் கொண்டு, எமது சமூகத்தின் பிரதிநிதிகளின் உள்ளீடுகளையும் சேர்த்து "அடுத்து என்ன?" என்ற கேள்வியில் அடிப்படையில் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. இந்த கலந்துரையாடலில் தமிழகத்தல் இருந்து வருகைதந்திருந்த பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களும், சுவீடன் பல்கலைக்கழக பேராசிரியர் நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களும், தமிழக இயற்கை வேளாண் விஞ்ஞானி திரு பாமயன் அவர்களும், இவர்களது குழுவினரும்,யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியாவை சேர்ந்த அறிஞர் குழுவினரும் பங்குபற்றி கல்வி மற்றும் இயறக்கை விவசாயம் தொடர்பில் புதிய வெளிச்சம் அடுத்ததாக என்னமாதிரியான நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோணத்தில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

ஜனவரி 13ஆம் திகதி மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் புதிய வெளிச்சம் பயிட்சிப்பட்டறைகளில் பயிட்சிகள், கருத்துரைகளை வழங்கியிருந்த வளவாளர்கள் அறிஞர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நினைவுப்பரிசு வழங்கும் நிகழ்வும், பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களின் உரைநிகழ்வும் இடம்பெற்றிடுந்த்தது.

தெல்லிப்பளை மானிடம் இயற்கை விவசாய நிலையத்தில் புதியவெளிச்சம் நிறுவனத்தினால் தமிழகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட 24 மரபு நெல் வகைகளும் , 30 க்கு மேற்பட்ட மரக்கறி தானிய வகைகளும் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது., அத்துடன் 2500 டொலர் பெறுமதியான இலகு விவசாய கருவிகளும் கனடாவிலிருந்து அன்பளிப்பாக வழங்கப்பட்டது . மேலும் 500 க்கு மேற்பட்ட நல்லிண தேன்னங்கன்றுகள் நடுவதற்க்கான ஏற்ப்பாடுகள் செய்யப்பட்டன.

புதிய வெளிச்சம் 2018, பயிற்சி பட்டறைகள் நிறைவு நாள் நிகழ்வு மற்றும் பொங்கல் விழா ஜனவரி 14ஆம் திகதி கிளிநொச்சி கூட்டுறவு சங்க மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது. பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் தலைமையிலான குழுவினர் மற்றும் தமிழக விவசாயிகள் குழுவினர், பயிற்சிப்பட்டறைகளில் பங்குபற்றியிருந்த ஆசிரியர்கள், இளைஞர்கள் யுவதிகள் மற்றும் ஒழுங்கமைப்பாளர்கள் என பலரும் சேர்ந்து பொங்கல் பொங்கி மகிழ்ந்தார்கள். அதன் பின்னர் பயிற்சிப்பட்டறைகளில் பங்குபற்றியிருந்த ஆசிரியர்கள், இளைஞர்கள் யுவதிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும், உரை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தது.

மேலும் இயற்கை விவசாயம் தொடர்பான கருத்துபரிமாண கருத்தரங்குகள், யாழ்ப்பாணம் , டொரோண்டோவிலும் நடைபெற்று மேலும் இயற்கை விவசாயம் தொடர்பான செயல்முறையை மக்களிடம் தொடர்ந்து கொண்டு செல்வதற்க்கு செயல்முறை இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

**-வசீகரன் குலசிங்கம்**

**படம்: இகுருவி ஐயா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்காடுகளுக்குள் மறையும் முகங்களும்...

# வெளில் தெரியும் வால்களும் !

முழுக்க நனைந்த பிறகு முக்காடு தேவையில்லை' என்ற ஒரு முதுமொழி உண்டு!

மழை பெய்கிறது, அதில் நனைந்து விடக் கூடாது என்பதற்காக தலையை மூடி போர்த்திக் கொண்டு சென்றால் அதில் ஒரு நியாயமுண்டு. ஆனால், மழையில் முழுவதுமாக நனைந்து விட்ட பிறகும், மூடி முக்காடு போட்டுக் கொண்டு செல்வதில் அர்த்தமும் இல்லை, பலனும் இல்லை! இதைத்தான் தெளிவாகச் சொல்கின்றது இந்த பழமொழி

ஆனால் இங்கே போதும் போதும் என்கிற அளவுக்கு நனைந்து விட்ட பிறகும் சிலர் முக்காடுகளை மட்டும் கழற்றாமல் மழையில் நனைந்தபடி சென்று கொண்டிருக்கின்றார்கள். அவர்களைப் பற்றி மீண்டும் ஒரு தடைவை பேசுகின்றது இந்த கட்டுரை.

இதற்கு மிகச் சிறந்த அரசியல் உதாரணமாக கடந்த வருடத்தின் இறுதியில் தொடங்கி இந்த வருடத்தின் ஆரம்பம் வரை நீடித்த சர்ச்சை ஒன்று சத்தமில்லாமல் அடங்கிப் போனது.

கனேடிய தமிழர் பேரவை வருடா வருடம் நடத்துகின்ற பொங்கல் விழாவினை(?) பதிவு செய்து ஒளிபரப்புவதற்கு இலங்கையின் தேசிய தொலைக் காட்சி நிறுவனமான ரூபவாஹினிக்கு அனுமதி வழங்கப்பட்டமையே இந்த சர்சையின் தொடக்கமாக அமைந்திருந்தது.

முதலில் இரகசிமான முறையில் கிசு கிசுக்கப்பட்ட இந்த விடயம் பின்னர் சமூக ஊடகங்களிலும் பிரதான தமிழ் ஊடகங்களிலும் பேசு பொருளாக மாறியது.

கனேடிய தமிழர் பேரவையின் விசுவாசத்திற்குரிய சமூகவலைத் தளப் போராளிகள் ஒரு கன்னையிலும் கனேடிய தமிழர் பேரவைக்கு எதிரான போராளிகள் மறுகன்னையிலும் நின்று சமூக வலைத் தளங்களில் கல்லெறிபட்டுக் கொண்டிருந்த காட்சி கடந்த வருடத்தின் Action Blockbuster. .

இந்த விடயத்தில் நாம் கவனிக்கத் தவறிய விடயங்களையும் சத்தமில்லாமல் கடந்து போனவற்றையும் விரிவாக ஆராய்வது தான் இந்த கட்டுரையின் நோக்கம்.

ரூபவாஹினி என்பது வெறும் ஊடகம் என்பதாக மட்டும் அடையாளப்படுத்தப்படக் கூடிய ஒன்றல்ல.

தமிழர்கள் மீதான இனஅழிப்பை மேற்கொண்டு வரும் ஒரு அரசாங்கத்தின் முகமாகவே ரூபவாஹினி என்ற ஊடகம் தமிழர்களால் பார்க்கப்பட்டு வருகின்றது.

> **ரூபஹவானிக்கு எதிரான போராட்டம் அல்லது சமூக வலைத்தள புரட்சி என்பது வெறும் மாயைகளுக்கு எதிரான ஒரு குரலாக மட்டுமே பார்க்கப்பட வேண்டும்.**

அது அரச ஊடகம் அரசாங்கத்தின் பிரசாரங்களையும் அரச செயல்பாடுகளை நியாயப்படுத்தும் செய்திகளையும் மட்டுமே எடுத்து வரும் ஒரு ஊதுகுழல் என்பதாக மட்டுமே அது வரையறுக்கப்பட்டு வந்துள்ளது.

அரசியலுக்கு அப்பால் அது தமிழர்களின் வாழ்வியலை அது போதுமான அளவில் பேசியதாகவோ தமிழர்களின் கலை கலாசார பாரம்பரியங்களை பதிவுகளாக்கும் முயற்சிகளை கடந்த பல தசாப்தங்களாக அது உரிய வகையில் முன்னெடுத்ததாகவோ வரலாறுகள் இல்லை.

ஒரு நாட்டின் தேசிய ஊடகமாக அந்த நாட்டின் தேசிய இனம் ஒன்றின் வாழ்வியலை சரிவர பதிவு செய்யத் தவறிய ஊடகத்தை அரசியலை தவிர்த்து விட்டு ஏனைய விடயப் பரப்புகளில் நியாயப்படுத்த முற்படுவதும் ஏற்புடையதாக அமையாது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக பல ஆண்டுகளுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட தமிழ் மரபு சார் நிகழ்சிகளை மட்டும் வைத்துக் கொண்டு ரூபவாஹினியை தமிழர்களுக்கான ஊடகமாக எவராலும் அடையாளப்படுத்தி விட முடியாது.

ஒரு மனிதப் பேரழிவை சந்தித்துள்ள இனம் தம் மீது மனிதப் பேரவலங்களை புரிந்தவர்கள் இலகுவில் மறந்துவிடவும் மன்னித்துவிடவும் வேண்டும் என்று வகுப்பெடுப்பவர்களால் இந்த அடிப்படைகளை புரிந்து கொள்ள முடியாது.

கனேடிய தமிழ் மக்களின் குரலாக தங்களை வெளிப்படுத்தி வரும் ஒரு அமைப்பு எவ்வாறு அந்த மக்களின் உணர்வுகளை மதிக்காமல் அதற்கு மதிப்பளிக்காமல் இயங்குகின்றது என்பதற்கு ரூபவாஹினிக்கு அனுமதி வழங்கியதன் மூலம் மீண்டும் ஒரு தடவை பேரவை நிரூபித்திருக்கின்றது.

2009ம் ஆண்டிற்கு பின்னர் தனது யாப்பில் அந்த அமைப்பு கொண்டு வந்த மாற்றங்கள் தான் இன்று வரை அந்த அமைப்பின் போக்குகளுக்கு காரணமாக அமைந்துள்ளதாக பலரும் விமர்சிக்கின்றனர். மூடிய அமைப்பாக அதனை மாற்றி அதில் ஏற்கனவே அங்கத்துவம் பெற்று செல்வாக்குடன் இருப்பவர்களால் மட்டுமே அதன் நிர்வாகக் குழுவை நியமிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையிலான யாப்பு மாற்றங்களை பலரின் எதிர்புகளின் மத்தியில் அது நடத்தி முடித்திருக்கின்றது. இன்று வரை அந்த அமைப்பிற்குள் வேறு எவரும் உள்வாங்கப்பட முடியாத நிலையும் அவர்களின் எதேச்திகார போக்குகளை கட்டுப்படுத்த முடியாத நிலைக்கும் அந்த யாப்பு மாற்றத்தை அனுமதித்த அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களின் பலத்துடன் கனேடிய அரசாங்கத்தில் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத் தின் நியாயப்பாட்டை எடுத்துக் கூறுவதற்காக பெரும் கனவுகளுடன் உருவாக்கப்பட்ட அமைப்பு இன்று தனியாருக்கு சொந்தமான நிறுவனம் போன்று இயங்குவதால் யாருக்கு என்ன இலாபம்.

தமிழர்களுக்கான அமைப்பு ஆனால் தமிழர்கள் அதில் இணையவோ அதன் செயல்பாடுகள் குறித்த தமது ஆதங்கங்களையும் விமர்சனங்களையும் முன்வைக்கவோ வாய்புகளை வழங்காமல் தனியர் நிறுவனம் போல அது செயல்படுவதற்கு காரணமான அனைவரும் தமிழ் மக்களின் மனங்களை புரிந்து கொள்ளத் தவறிய குற்றத்தை இழைத்தவர்களே.

ரூபவாஹினியை அழைக்கும் முடிவில் தமக்கு உடன்பாடில்லை என்று சமூக வெளியில் பட்டும் படாமலும் தங்களை காப்பாற்றுவதற்கு நிலைத் தகவல்களை எழுதி அல்லது வேறு சிலரின் பதிவுகளில் பதில் எழுதி தங்களை புனிதர்களாக சித்தரித்துக் காட்ட நினைக்கும் சிலரின் மேதாவித்தனங்கள் வெறும் கோமாளிக் கூத்துக்கள் தான் என்பதில் மாற்றுக் கருத்தேதும் இல்லை.

வெளிப்படையாக இந்த நடவடிக்கையினை கண்டிப்பதற்கு திராணியற்றவர்கள் தமது அத்தனை வாசல்களையும் இறுக மூடிக் கொள்வதே சிறப்பானது.

தமிழ் மக்களுக்கான நீதியை காலதாமதப்படுத்துவதன் ஊடாக தமிழர்களின் குரலை சர்வதேச மட்டத்தில் நலிவடைய வைக்கும் இலங்கை அரசின் கபடத்தனத்துக்குள்ள தாங்கள் சிக்கியது போல ஏனைய தமிழர்களையும் சிக்க வைப்பதற்கு போடப்படும் திட்டங்களை தொடர்ந்து தடுக்க வேண்டும்.

வெறுமனே ரூபவாஹினியின் வருகைக்கான எதிர்ப்பாக இந்த எதிர்ப்பு நடத்தி முடிக்கப் பட்டிருக்கின்றது. மக்களின் எதிர்ப்பினால் தமது முடிவினை மறுபரிசீலனை செய்யும் நிலைக்கு தமிழர் பேரவை தள்ளப்பட்டதாக நம்பவைக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் இந்த ரூபஹவானிக்கு எதிரான போராட்டம் அல்லது சமூக வலைத்தள புரட்சி என்பது வெறும் மாயைகளுக்கு எதிரான ஒரு குரலாக மட்டுமே பார்க்கப்பட வேண்டும்.

ரூபவாஹினி வருவதற்கு ஒரு சில வாரங்களுக்கு முன்னர் இலங்கையில் யுத்தக் குற்றங்களை புரிந்த இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று கனடாவிற்கு வருகை தந்து ஐக்கிய நாடுகள் அமைதிப்படை தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு திரும்பியிருக்கின்றது.

இலங்கை இராணுவத்தினர் கலந்து கொள்வதை அனுமதிக்க வேண்டாம் என்று ரூபவாஹினியன் வருகைக்கு அனுமதியளித்த கனேடிய தமிழர் பேரவை உட்டப பல தமிழர் அமைப்புகள் கூட்டாக கனேடிய அரசாங்கத்திடம் கோரியதாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

தமிழ் மக்களின் எதிர்ப்பிற்கு மாறாக இலங்கை இராணுவ அதிகாரிகள் கனடாவிற்கு வருவதற்கு அனுமதி வழங்கிய கனேடிய அரசாங்கத்தை நோக்கி ஏன் இந்த ரூபவாஹினிக்கு எதிராக குரல் எழுப்பியவர்கள் குரல் எழுப்பவில்லை.

இலங்கை அரசின் நல்லிணக்கம் எப்படி இருக்கும் என்பதற்கான உதாரணத்தை பிரித்தானியாவில் உள்ள இலங்கை தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரியின் செயல்பாட்டில் இருந்து நாம் புரிந்து கொள்ளவேண்டும். இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகளுக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களின் குரல் வளையினை அறுக்கப் போவதான சைகையினை அந்த அதிகாரியால் காண்பிக்க முடிவதே இலங்கை அரசின் உண்மை முகம். இதனை பேரவை புரிந்து கொள்ளாமல் மீண்டும் மீண்டும் இனப்படுகொலை அரசை காப்பாற்ற முற்படுவது தான் ஏன் என்று புரியவில்லை

தமது அமைப்பின் நீண்டகால உறுப்பினருக்கு மார்க்கம் தோன்ஹில்லில் நடைபெற்ற இடைத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பினை வழங்கத் தவறியதற்கு எதிராக பொங்கிய தமிழர் பேரவை அந்த தேர்தலில் கொன்சவேற்றிவ் கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக செயல்படுவதாக நாடகமாடியதை யாரும் இலகுவில் மறந்திருக்க முடியாது.

தமது அமைப்பின் உறுப்பினருக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதற்காய் அரசாங்கத்தை எதிர்க்க துணிந்த அவர்களுக்கு தமிழ் மக்கள் மீது இனஅழிப்பை நடத்திய இராணுவத்தை கனேடிய மண்ணில் அரச மரியாதைகளோடு அழைத்து வந்த அரசாங்கத்தை கண்டித்து ஒரு அறிக்கை கூட விட முடியவில்லை என்றால் அவர்களின் தமிழர் நலன் குறித்த கரிசனை எவ்வாறானது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த பின்னணிகளை தவிர்த்து விட்டு வெறுமனே ரூபஹவானியை பொங்கல் நிகழ்விற்கு அனுமதிப்பது தவறு என்று சிறிய வட்டத்திற்குள் நின்று குத்தி முறிவதில் எந்த ஒரு பலனும் இல்லை.

ஏற்கனவே மங்கள சமரவீரவின் அழைப்பின் பேரில் அவர்கள் இலங்கைக்கு சுற்றுலா சென்று வந்ததையும் அரசாங்கத்தோடு இணங்கி செயல்படுவதன் மூலமாகவே தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்று இங்கு பாடம் நடத்தியத்தையும் மறந்து விட்டு ரூபவாஹினியை மட்டும் தூக்கிப் பிடிப்பது தான் சமூக வலைத்தளப் போராளிகளின் மிகப்பெரிய தோல்வி.

இலங்கை அரசாங்கம் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கும் நல்லிணக்க நாடகத்தின் ஓர் அங்கம் தான் ரூபவாஹினியின் வருகைக்கான ஏற்பாடு.

**இரு தனிமனிதர்கள் மீது தமது வன்மங்களை காட்டித் தீர்த்ததும் தான் நடந்தேறியிருக்கின்றது. எதிர்ப்பாளர்களினது குறுகிய சிந்தனையின் வெளிப்பாடுகள்தான் இவை**

அது இவர்கள் கூறுவத போல திருமண வீட்டிற்கு வந்தவர் கேட்டதால் வழங்கப்பட்ட அனுமதி என்பதெல்லாம் காதில் பூச்சுற்றும் ஏமாற்றுத் தனம்.



ஒரு நாட்டின் தேசிய ஊடகம் புலம்பெயர் தேசத்தில் விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்பாக ஒரு காலத்தில் இயங்கி ஒரு அமைப்பினால் ஏற்பாடு செய்யப்படும் பொங்கல் நிகழ்வை பதிவு செய்வதற்கான அனுமதியை ஒரு சாதாரண தயாரிப்பாளரினால் பெற்றுக் கொள்ள முடியும் என்றால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு எப்போதோ தீர்வு கிடைத்திருக்க வேண்டுமே.

இலங்கையின் தேசிய ஊடகங் களின் நடைமுறைகள் மற்றும் செயல்பாடுகளை தெரிந்தவர்களால் கூட இந்த பூச்சுற்றலை புரிந்து கொள்ள முடியாமல் போனது தான் சோகம்.

அங்கு ஒரு தமிழ் நிகழ்சியை தயாரிப்பதற்கு எத்தனை படிநிலை அனுமதி பெறப்பட வேண்டும் என்பதும் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி ஒளிபரப்பிற்கு முன்னர் எத்தனை தரக்கட்டுபாடுகள் சுத்திகரிப்புகள் தாண்ட வேண்டும் என்பதும் பலரும் அறிந்த விடயம்.

அவ்வாறான கட்டுப்பாடுகள் மிக்க இறுக்கம் நிறைந்த ஊடகம் கனடாவிற்கு வந்து ஒரு தமிழ் அமைப்பின் பொங்கல் விழாவை ஒளிப்பதிவு செய்வதற்கான வேண்டுகோளை ஒரு தயாரிப்பாளர் விடுக்க முடியுமா என்பதும் ஆராயப்பட வேண்டியது.

இது இலங்கை அரசாங்கத்தின் திட்டமிட்ட நகர்வு என்பதை தெளிவாக புரிந்து கொள்வதும் அதன் பின்னால் இருக்கும் ஆபத்தான காரணிகளை புலம் பெயர் சமூகத்திடம் எடுத்துச் சொல்வதும் மிக முக்கியமானது.

ஆனால் புரட்சியாளர்கள் அந்த நுண் அரசியலை தவிர்த்து ரூபவாஹினி வரக் கூடாது என்ற கோசத்துடன் தமது போராட்டங்களை மட்டுப்படுத்தியதும் பேரவையின் பேச்சாளர் மற்றும் நிர்வாக இயக்குனர் ஆகிய இரு தனிமனிதர்கள் மீது தமது வன்மங்களை காட்டித் தீர்த்ததும் தான் நடந்தேறியிருக்கின்றது. எதிர்ப்பாளர்களினது குறுகிய சிந்தனையின் வெளிப்பாடுகள்தான் இவை

தமது எதிர்பபின் காரணமாக ரூபவாஹினியை கனடாவிற்கு வராமல் தடுத்து விட்டடோம் என்பதும் கனேடிய தமிழர் பேரவையின் பொங்கல் நிகழ்வுகளை ரூபவாஹினி பதிவு செய்யவில்லை என்பது பெரும் சாதனையாக கொண்டாடி மகிழ்வதும் அர்த்தமற்றது.

ரூபவாஹினியின் வருகை என்ற குறியீட்டின் பின்னால் உள்ள அரசியலை புரிந்து கொள்ளாமல் கடந்து செல்வதும் அதனை புரிய வைக்காமால் தாண்டிச் செல்வதும் மிக மிகத் தவாறனது.


தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்றால் புலம்பெயர் சமூகம் அதற்கான வலிமையான அழுத்தங்களை சர்வதேச நாடுகள் மூலமாகவும் ஐக்கிய நாடுகள் சபை மூலமாகவும் இலங்கை அரசாங்கத்தின் மீது முன்வைக்க வேண்டும்.

மாறாக அவர்களின் சதி வலைக்குள் தமிழ் சமூகத்தை சிக்க வைத்து அவர்களை காப்பாற்றும் நடவடிக்கைகள் தமிழர்களை மீண்டெழமுடியாத பாழ் குழிக்குள் தள்ளிவிடும் செயல்பாடாகவே அமையும்.

**– ரமணன் சந்திரசேகரமூர்த்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நாடு பிளவுபடுவதை விரும்பாத சகலரும் தேர்தலில் எம்முடன் கைகோருங்கள்! மகிந்தா அறைகூவல்!



சென்ற வாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மகிந்த இராசபக்சா புதிதாகத் தோற்றுவித்த சிறிலங்கா பொதுசன பெரமுன என்ற கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்.

இதற்கு முன்னர் 2015 இல் நடந்த சனாதிபதி தேர்தலில் தனக்கு ஆதரவு தேடி நொவெம்பர் 2014 இல் வடக்குக்கு அவர் வந்திருந்தார். பரப்புரைக் கூட்டம் ஒன்றில் அவர் கொச்சைத் தமிழில் பேசினார். அது விளங்காததால் கூட்டத்தில் இருந்த மக்களிடையே சிறிய சலசலப்பு. ஊ..ஊ என்று ஒலி எழுப்பினர்.

உடனே போபம் தலைக்கேறிய இராசபக்சே "ஆம் நான் சிங்களவன். இந்த நாடு சிங்கள நாடு. எனவே தெமிழர்கள் (தமிழர்கள்) ஆகிய நீங்கள் நான் சொல்வதைக் கேட்க வேண்டும்" எனப் பேசினார். மேலும் "தெரியாத தேவதையை விடத் தெரிந்த பிசாசுக்கு" வாக்களியுங்கள் என்று கேட்டார்.

வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் பேசிய மகிந்த இராசபக்சா "நாம் கூட்டமைப்புடன் தீர்வுக்கான சமரசரப் பேச்சு நடத்துவதற்கு அழைப்பு விடுத்துக் காத்திருந்தோம் ஆனால் கூட்டமைப்பினர்தான் பேச்சுக்கு வரவேயில்லை" என்று சொன்னார்.

மகிந்த இராசபக்சா சொல்வது பச்சைப் பொய் என்பதை வரலாறு தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள். அவரது பேச்சு இன்று கூட மகிந்த இராசபக்சா தனது சிங்கள — பவுத்த மேலாண்மைச் சிந்தனையில் இருந்து விடுபடவில்லை என்பதைக் காட்டுகின்றது.

சனவரி 10, 2011 தொடக்கம் சனவரி 18, 2012 வரை மொத்தம் 18 சுற்றுப் பேச்சுக்களை அன்றைய சனாபதி மகிந்த இராசபக்சா அவர்களின் அமைச்சர்களோடு திரு சம்பந்தன் தலைமையில் ததேகூ பேச்சுவார்த்தை நடத்தியது.

இந்தப் பேச்சுகளின் முதல் மூன்று சுற்றுகளின்போது ததேகூ இனப் பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளை முன்வைத்தது. அதன் பின்னர் ஐந்து மாதங்களாக ஏழு சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றன. ஆனால் கூட்டமைப்புக் கொடுத்த தீர்வுத் திட்ட யோசனைகளுக்கு மஹிந்த தரப்பு பதில் ஏதும் கொடுக்கவில்லை.

மீண்டும் ஒக்தோபர் 2011 இல் சனாதிபதி மகிந்த இராசபக்சா கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் சந்திப்பு இடம்பெற்றது. கூட்டமைப்பின் தீர்வுத் திட்ட யோசனைகளக்கு அரசு பதில் தரா விட்டாலும் முன்னைய சமாதான முயற்சிகள் தொடர்பான ஐந்து ஆவணங்களின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களைத் தொடர அந்தச் சந்திப்பில் முடிவு செய்யப்பட்டது.

ஒக்தோபர் 16, 2011 ஆம் நாள் முதல் மீண்டும் அமைதி பேச்சுக்களை மகிந்த அரசுடன் கூட்டமைப்புத் தொடங்கியது. மங்கள முனசிங்க தலைமையிலான குழுவின் முன்னைய அறிக்கை, சனாதிபதி சந்திரிகா காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அமைதி முயற்சிக்கான ஆவணங்கள், சனாதிபதி மகிந்த இராசபக்சா நியமித்த நிபுணர் குழு அறிக்கை, அந்த நிபுணர் குழுவின் தொடக்கக் கூட்டத்தில் அவர் ஆற்றிய உரையின் தொகுப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களைத் தொடரத் தீர்மானிக்கப்பட்டது.

பேச்சுக்கான பன்னிரண்டு தலைப்புகளும் முடிவுசெய்யப்பட்டன. இப்போது நடவடிக்கைக் குழு எழுதப்பட்ட இடைக்கால அறிக்கையில் காணப்படும் பன்னிரண்டு தலைப்புகளுமே அப்போது வகுக்கப்பட்ட தலைப்புக்கள்தான். அவற்றின் அடிப்படையில் தொடர்ந்த பேச்சுக்களில் காணி தொடர்பான மற்றும் அதிகாரப்பகிர்வு விடயத்தில் சில தீர்மானங்கள், முடிவுகள் கூட எட்டப்பட்டன. இந்தப் பேச்சுக்களின் முக்கிய அம்சம் என்னவென்றால், இந்தப் பேச்சுக்களின் ஒவ்வொரு சுற்றின் போதும் கூட்டத்தின் அறிக்கை தயார் செய்யப்பட்டு, அடுத்த கூட்டத்தின் தொடக்கத்தில் முன்னைய கூட்ட அறிக்கை வாசித்துப் பதிவு செய்யப்பட்டது. அந்தப் பதிவுகள் இந்தக் கூட்டங்களுக்கான சான்றுகளாக இன்றும் உள்ளன.

கடைசியாக 18 ஆவது கூட்டத்தை 2012 சனவரி 16, 17, 18 ஆம் திகதிகளில் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடத்துவது என அதற்கு முந்திய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அந்த மூன்று நாட்களும் உரிய நேரத்தில் கூட்டத்துக்குச் சென்று தமிழ்க் கூட்டமைப்பினர் காத்திருந்தனர். ஆனால், அரசு தரப்புப் பிரதிநிதிகள் வரவேயில்லை.

இதுதான் கடந்த காலத்தில் மகிந்த அரசுடன் கூட்டமைப்பினர் நடத்திய அமைதிப் பேச்சுக்களின் வரலாறாகும். இனச் சிக்கலுக்கு ஒரு நியாயமான, நீதியான தீர்வை எட்ட வேண்டும் என்ற எண்ணம் மகிந்த இராசபக்சாவிடம் கிஞ்சித்தும் இருக்கவில்லை. வெளிநாடுகளின் அழுத்தத்தைத் தணிக்கவே இந்தப் பேச்சு வார்த்தை நாடகத்தை அவர் அப்போது அரங்கேற்றினார்.

2013 இல் மகிந்த இராசபக்சா 13ஏ திருத்தத்தில் காணப்பட்ட காணி, காவல்துறை அதிகாரங்களை நீக்க பகிரத முயற்சிகளை மேற்கொண்டார். அது தொடர்பாக ஒரு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அவர் நியமித்தார்.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை நீக்க வேண்டும் என மகிந்த இராசபக்சாவின் அரசியல் ஆலோசகரும், பொருளாதார வளர்ச்சித்துறை அமைச்சருமான பசில் இராசபக்சா நாடாளுமன்றத்தில் பேசியிந்தார் (<http://www.eprlfnet.com/?cat=39&paged=3>). இந்த அரசியல் திருத்தம் பற்றிப் புது தில்லியோடு பேச அவர் யூலை 04, 2013 இல் இந்தியாவுக்கு ஒரு பயணம் மேற்கொண்டார்.

இது தொடர்பாக பசில் ராஜபக்சே செய்தித்தாள்களுக்கு அளித்த நேர்காணலில், 13 ஏ அரசியல் சட்ட திருத்தம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் ஆகியோருடன் பேசுவேன் என்றார்.

கோத்தபாய இராசபக்சாவைப் பொறுத்தளவில் 13 ஏ சட்ட திருத்தம் முற்றாக இரத்து செய்யப்பட வேண்டும் என்று பகிரங்கமாகவே பேசினார். அதற்குக் காரணம் இருந்தது. சர்வதேச சமூகத்தின் நெருக்குதல் காரணமாக தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழும் வட மாகாண சபைக்கு 23 ஆண்டுகளுக்குப் பின்னர் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. அதில் ததேகூ வெற்றிபெறுவது உறுதி என்பதால் வடக்கு மாகாண ஆட்சி அதிகாரம் தமிழர்கள் கைக்குப் போய்விடும் என்பதால் அதனைத் தடுப்பதற்கு ஒரே வழி 13 ஏ திருத்தத்தை முற்றாக இரத்து செய்வதே என மகிந்தாவின் அரசும் சிங்கள — பவுத்த தீவிரவாத அரசியல் கட்சிகளும் திரைமறை சதிகளில் ஈடுபட்டன.

இதற்கிடையே ததேகூ தலைவர்கள் தில்லி சென்று பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து, அரசியல் சட்ட திருத்தத்தை இரத்து செய்ய சிங்கள அரசு எடுத்துவரும் நடவடிக்கை குறித்து எடுத்துக் கூறினர். அதனை இந்தியா தலையிட்டு தடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். நாடாளுமன்ற தேர்வுக்குழு நடவடிக்கையில் பங்கேற்க போவதில்லை என்றும் ததேகூ அறிவித்தது.

இந்த நிலையில் 2013 செப்தெம்பர் மாதம் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழுகிற வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்போவதாக அறிவிக்கப்பட்டது. இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜிஎல் பீரிசை மத்திய வெளியுறவு துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் 2013 மே மாதம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அரசியல் சட்டத்தின் பிரிவு 13ஏ திருத்தம் இரத்து செய்வது குறித்து ஒரு தலைபட்சமாக முடிவு எடுக்கக்கூடாது எனக் கூறியதாக செய்திகள் வெளி வந்தன.

இதற்கிடையே ததேகூ தலைவர்கள் தில்லி சென்று பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து, அரசியல் சட்ட திருத்தத்தை இரத்து செய்ய சிறிலங்கா அரசு எடுத்துவரும் நடவடிக்கை குறித்து எடுத்துக் கூறினர். அதை இந்தியா தலையிட்டு தடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். நாடாளுமன்ற தேர்வுக்குழு நடவடிக்கையில் பங்கேற்க போவதில்லை என்றும் ததேகூ அறிவித்தது.

இன்று இனச் சிக்கலுக்கு ஒரு சுமுகமான தீர்வு காணத் தடையாக இருக்கும் ஒரே அரசியல்வாதி மகிந்த இராசபக்சாதான். நல்லாட்சி அரசு வெளியிட்ட இடைக்கால அறிக்கையை தனது கட்சியின் தேர்தல் பரப்புரைக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T

*Certified Insolvency Counsellor*

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

**Cell. 416.834.7227 Fax. 1.877.800.789**
**Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com**

**Head Office:**
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

**Branch Office:**
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

**www.TotalDebtFree.ca**


கூட்டங்களில் அவர் கடுமையாக விமர்ச்சித்து வருகிறார்.

இடைக்கால அறிக்கை தமிழர்களுக்கு உச்ச அதிகாரம் வழங்கி நாட்டைத் துண்டாட சனாதிபதி சிறிசேனாவும் பிரதமர் இரணில் விக்கிரமசிங்காவும் சதி செய்கின்றனர் என மகிந்த இராசபக்சா குற்றம்சாட்டுகிறார்.

தமிழர்களுக்கு அதியுச்ச அதிகாரத்தை வழங்கி நாட்டைப் பிளவு படுத்தும் சதித்திட்டத்தை இந்த அரசு முன்னெடுத்து வருகின்றது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அனைவரையும் தம்முடன் கைகோர்க்குமாறும் அவர் அறைகூவல் விடுத்து வருகிறார்.

இந்த அரசை வீழ்த்தும் போராட்டத்துக்குத் தலைமை தாங்கத் தான் தயார் எனவும் முழக்கமிடுகிறார்.

சிறிலங்கா பொதுசன பெரமுனாவின் மக்கள் சந்திப்பு கோமாகம பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய மகிந்த இராசபக்சா "நாம் வென்று கொடுத்த சுதந்திரத்தை மூன்று ஆண்டுகளில் அரசு நாசமாக்கியுள்ளது. புதிய அரசமைப்பை உருவாக்கி நாட்டைத் துண்டாடும் சதித்திட்டம் முன்னெடுக்கபட்டு வருகின்றது. வடக்கு கிழக்கு இணைப்பு, மாகாணங்களுக்கு அதியுச்ச அதிகாரங்கள் என்று அனைத்தையும் வழங்கி இந்த நாட்டைப் பிளவுபடுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்" எனப் பேசினார்.

இந்த நாடு பிளவுபட வேண்டுமா அல்லது இணைந்து செயற்பட வேண்டுமா என்பதை நாட்டு மக்களே தீர்மானிக்கவேண்டும். இந்த நாடு பிளவுபடுவதை விரும்பாத சகலரும் தேர்தலில் எம்முடன் கைகோருங்கள்.

சிறிலங்கா பொதுசன பெரமுன மக்களின் ஆதரவைப் பெற்று வருகின்ற நிலையில் எமது மக்கள் எதனை விரும்புகின்றனரோ அதையே நாமும் செய்ய வேண்டும். மக்கள் விரும்பாத எதையும் நாம் முன்னெடுக்கத் தயாராக இல்லை. மக்களுக்காகத் தலைமை தாங்க நாம் தயாராகவே உள்ளோம். இம்முறை தேர்தலில் மக்கள் ஆதரவை பெற்று எமது பலத்தினை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எண்பித்துக் காட்டுவோம் என்றார்.

இங்கே மகிந்த இராசபக்சா மக்கள் எனக் குறிப்பிடுவது சிங்கள மக்களைத்தான். தமிழர்களை அல்ல.

இந்த தீவிர சிங்கள — பவுத்த பேரினவாதக் கட்சியில் தமிழர்கள் சிலர் போட்டியிடுவது பெரிய வெட்கக் கேடு. இனத்தை எதிரிக்குக் காட்டிக் கொடுக்கும் பாவச் செயல். இதைப் பார்த்து அழுவதா சிரிப்பதா என்பது தெரியவில்லை.

பல ஆண்டுகளாக மகிந்த இராசபக்சாவின் காலைக் கழுவி அவரது எடுபிடியாக வலம் வந்த டக்லஸ் தேவானந்தா கூட தனது சொந்தக் கட்சியில் போட்டியிடுகிறார்.

தென்னிலங்கைக் கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சிகளில் தமிழர்கள் வேட்பாளர்களாகப் போட்டியிட்டால் அதனை நாம் புரிந்து கொள்ளலாம். இந்த மூன்று கட்சிகளும் இனச் சிக்கலுக்கு அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு காணவேண்டும் என்ற கோட்பாட்டை ஆதரிக்கின்ற கட்சிகள் ஆகும்.

ஆனால் மகிந்த இராசபக்சா தலைமை தாங்கும் சிறிலங்கா பொதுசன பெரமுன? இடைக்கால அறிக்கை நாட்டில் எட்டு அல்லது ஒன்பது இணைப்பாட்சி அரசுகளை உருவாக்கப் போகிறது, சிங்கள இனம் அழியப் போகிறது எனப் பச்சை இனவாதத்தைக் கக்கும் மகிந்த இராசாபக்சா தலைமை தாங்கும் கட்சியிலா தமிழர்கள் போட்டியிடுவது?

காணாமல் போனவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு மகிந்த இராசபக்சாவின் ஆட்சிக் காலத்தில் காணமல் போனவர்கள். வெள்ளைவான் கடத்தல், கொலை, கொள்ளை, கப்பம் அவரது ஆட்சியில்தான் அரங்கேறின.

சண்டே லீடர் முதன்மை ஆசிரியர் லசந்தா விக்கிரமதுங்கா, ஊடகவியலாளர் பிரதீப் ஏக்நேலிகொட, தர்மரத்தினம் சிவராம், விளையாட்டு வீரன் வசிம் தயூதீன் போன்றவர்கள் மகிந்த இராசபக்சா ஆட்சியல்தான் நடந்தேறின.

வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த வி.புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த ப.நடேசன், புலித்தேவன், கேணல் இரமேஷ் தலைமையில் 300 க்கும் மேலான வி.புலி உறுப்பினர்களை இராணுவமே சுட்டுக் கொன்றது.

அதேபோல் மே 18 மாலை வட்டுவாகலில் இராணுவத்திடம் சரணடைந்த விபுலிகளின் இரண்டாம் கட்டத் தலைவர்களான எழிலன், யோகி, திலகர், பாலகுமார், கவிஞர் இரத்தினதுரை உட்பட நூற்றுக்கும் அதிகமானவர்களை விசாரணைக்கு என்று அழைத்துச் சென்று இராணுவமே சுட்டுக் கொன்றது.

இந்தக் கொலைகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர் அன்றைய பாதுகாப்பு அமைச்சர் இராசபக்சாவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தா இராசபக்சாவும்தான்.

"போரில் சரணடைந்த மற்றும் பிடிபட்ட விடுதலைப்புலிகளை கொல்லுமாறு இராணுவ தளபதிகளுக்கு நான்தான் உத்திரவிட்டேன். இந்த உத்தரவை மீறிய ஒரு சில தளபதிகளால் தான் தற்பொழுது பிரச்சனையே எழுந்துள்ளது" என்று சொன்னவர் கோத்தபாய இராசபக்சா அவர்களே. (https://www.yarl.com/forum3/topic/104621–)

தலைவர் சம்பந்தரையும் சுமந்திரனையும் மண் அள்ளிப் போட்டுத் திட்டுகிற காணாமல் போனோர்களது பெற்றோர்கள் உறவினர்கள் யாரையும் வீரசிங்கம் மண்டபத்துக்கு ஒரு மைல் தூரத்துக்கு அப்பாலும் காணவில்லையே? குறிப்பாக திரு சுமந்திரனின் உருவப்படத்தை முற்றவெளியில் போட்டு எரித்த அனந்தி சசிகரன் அக்காவைக் காணோமே? எங்கே போய்த் தொலைந்தார்கள்?

இன்றும் ஆட்சியையும் அதிகாரத்தையும் கைப்பற்ற சிங்கள — பவுத்த பேரினவாதமே குறுக்கு வழி என மகிந்த இராசபக்சா நம்புகிறார்.

**நக்கீரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றிக் பிரவுண்?

## தமிழர்களின் நண்பனா? எதிரியா?



கடந்த வருடம் பின் பனிக் காலத்தில், ஒரு நாள், ரொரன்ரோ நகரின் புற நகர்ப் பகுதியில் வட எல்லையில் அமைந்துள்ள ரிம் கோட்டன் கோப்பியகத்தில் எனது நீண்ட கால நண்பன் ஒருவனைச் சந்திக்க வேண்டி வந்தது. இருவரும் உரையாடிக் கொண்டிருந்த போது, ஒரு குண்டை நண்பன் தூக்கிப் போட்டார். 'எனக்கு உடனடியாக ஒரு முப்பாதியரம் டொலர்கள் தேவை' இது குண்டல்ல. ஏன் என்ற எனது கேள்விக்கு அவனது பதிலே அந்தக் குண்டு. 'தேர்தலில் நிற்கப்போகின்றேன்' என்றான். சரி, மாநிலமா, மத்தியா, உள்ளூராட்சியா எனக் கேட்டேன். நடுவில் உள்ளது என்றான். அதாவது மாநிலத் தேர்தல். தேர்தலில் நிற்பது அவ்வளவு சுலபமாகிவிட்டதா? ஏன நேரடியாகவே கேட்டேன். அவன் கூறிய வாய்ப்பாடு மற்றொரு குண்டு.

'முதலில் நான் நிற்கப்போகும் கட்சி சார்பாக, போட்டியிடும் தொகுதியில், குறைந்தது மூவாயிரம் பேரை உறுப்பினராகச் சேர்க்க வேண்டும். (வெற்றி பெறுவதற்கு மூவாயிரம் உறுப்பினர் போதும் என்ற ஒரு கணிப்பு) அதற்கே இந்த முப்பதாயிரம் டொலர்கள்.' 'அதன் பின்னர் மிகுதியெல்லாம்'. என்றான். அவன் முதற் படி ஏறவே முப்பாதியரம் டொலர்கள். ஒவ்வொரு உறுப்பினரும் ஆண்டுச் சந்தாவாக பத்து டொலர்களைச் செலுத்த வேண்டும். ஆனாலும் வாய்ப்பாட்டில் குளறுபடி ஆய்வு செய்யும் பொழுது, பொது மக்கள் பலர் கலந்து கொண்டு மிகவும் ஆழமான கருத்துக்களைக் கூறுகின்றனர். ஒரு நிகழ்வு காலை 4 மணி வரை ஒலிபரப்பட்டுள்ளது. இது மக்கள் அரசியலில் கலந்து கொள்ள விரும்புவதைக் காட்டுகின்றது. மக்கள் மிகத் தெளிவாக உள்ளார்கள். ஒரு கட்சியில் இணைவது என்பது அவர்களது ஜனநாயக உரிமை, அதனை தயவு செய்து அவர்களிடமிருந்து அபகரிக்க வேண்டாம்.

உள்ளூராட்சி சபையிலோ, மாநில அவையிலோ தமிழருக்காக, அவர்களது உரிமைகளுக்காக எதுவுமே செய்ய முடியாது. கனடிய பாராளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சால் அல்லது பிரதமரால் தான் எமது பிரச்சினைக்கு அழுத்தம் கொடுக்கலாம். உள்ளூராட்சி சபையோ, மாநில அவையோ தீர்மானங்களை நிறைவேற்றலாம். அதனை மீறி எதுவுமே செய்ய முடியாது. உள்ளூராட்சி சபையும், மாநில அவையும், எமது அன்றாட வாழ்வில் எம்மை பாதிக்கும் பல விடயங்களை தீர்மானிக்கின்றன. மீண்டும், மீண்டும் தமிழருக்கான தீர்வு என்ற கோசத்துடனேயே வாக்குகள் வேட்டை நடைபெறுகின்றன. பல வேட்பாளர்களுக்கு தங்களது கட்சியின் கொள்கைளே தெரியாது. கடந்த மத்திய பொதுத் தேர்தல் நடைபெற்ற போது போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்களை

உள்ளது. அதனை நேரடியாகவே கேட்டேன். அதற்கு எதற்கு முப்பாதயிரம். 'மூவாயிரம் பேரின் உறுப்பினர் சந்தாவை நானே செலுத்த வேண்டும். அவர்கள் விண்ணப்படிவத்தை நிரப்பித் தருவார்கள். மிகுதியெல்லாம் நாங்களே செய்ய வேண்டும்' இதற்கு மேல் எதுவும் கூறத் தேவையில்லை.

ஒன்ராரியோ தமிழர்கள் மத்தியில் இவ்வாறுதான் கட்சிக்கு உறுப்பினர்கள் சேர்க்கப்படுகின்றார்கள். பலரிடம் கையொப்பமே கேட்கப்படுகின்றது. பலருக்கு எந்தக் கட்சிக்கு என்பதே தெரியாது. 'தமிழர்' என்ற ஒரு அடையாளத்தை வைத்தே கையொப்பமிடுவதும், கையொப்பம் வாங்குவதும் நடைபெறுகின்றது.

ஒவ்வொருவரும் ஒரு ஜனநாயகக் கடமை உண்டு. இது இங்கு அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு உறுப்பினர் தான் எந்தக் கட்சியில் சேர்கின்றேன், ஏன் சேர்கின்றேன் என்பதனைத் தெரிந்து கொண்டு இணைவதே ஜனநாயகத்தை பலப்படுத்தும். அவர் தனது பத்து டொலர்களை கொடுப்பதன் மூலம், தன்னை முறையாக அக் கட்சியில் இணைத்துக் கொள்கின்றார். இங்கு நடைபெறுவதெல்லாம், ஒரு மிக மோசமான உரிமை மீறல்கள்.

அண்மைக் காலங்களில் சி.எம். ஆர், ரி.வி.ஐ போன்ற ஊடகங்களில், சமகாலப் பிரச்சினைகளை 'விளம்பரம்' பத்திரிகை ஒரு விவாத—அறிமுக அரங்கில் சந்திக்க வைத்தது. என்.டி.பிக் கட்சிக்கு போட்டியிட்ட வேட்பாளரிடம் 'தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைக்கு, உங்கள் கட்சி முன்வைக்கும் தீர்வு என்ன' எனக் கேட்டபோது, ஹொலிவூட் மாதரி ஒரு தொழில்துறை இங்கு வந்தால், பிரச்சினை தீர்ந்துவிடும்' என்றார்.

தற்சமயம் மூன்று உறுப்பினர்கள் உள்ளனர். ஒருவர் பாராளுமன்றத்திலும், இருவர் உள்ளூராட்சி சபையிலும் உள்ளனர். ஏற்கனவே ஒரு தமிழர் பா.உ ஆக இருந்துள்ளார். அதைவிட இருவர் கல்விச் சபையில் அறக் காப்பாளர்கள். இவர்களில் ஒருவர் நீண்ட காலமாக உள்ளூராட்சி சபை உறுப்பினராக உள்ளார். 'வன்னி வீதி' என்ற பெயரைத் தவிர வேறு என்ன விடயம் நடைபெற்றது. அப் பகுதியில் தமிழ் மக்கள் அதிகமாக இருப்பதனால், வேறு இனத்தைச் சேர்ந்தவர் அங்கு மாநகர உறுப்பினராக இருந்திருந்தாலும், அப் பெயரைச் சூட்டியிருப்பார். அப் பகுதியில் கராச்சி வீதி, நியு டெல்லி வீதி போன்ற பெயர்களும் சூட்டப்பட்டள்ளன. தமிழர்களுக்கான ஒரு சனசமூக நிலையமாவது அமைக்க முடிந்ததா?

மார்க்கம் நகர நூலகங்களில், இலங்கையில் பிரசுரமாகும் தமிழ் நூல்கள் மிக, மிகக் குறைவு. இவ்வாறான சிறு விடயங்களைக் கூடச் செய்ய முடியாமல், வேறு என்ன தமிழ் மக்களுக்குச் செய்யப் போகின்றார்கள்.

மார்க்கம் நகரத்துக்கும், முல்லைத்தீவுக்கும் இணைப்பு பாலம் கட்டப்பட்டது. வன்னியிலிருந்து வெளியாகும் நூல்களும் இங்கில்லை. பாலத்தின் பின்னால் உள்ள அரசியலை மக்கள் அறிவார்கள்.

அண்மையில் தனது பதவியை இராஜினாமாச் செய்த பற்றிக் பிரவுன், தமிழர்களின் மற்றும் சிறுபான்மையினரின் நாடித் துடிப்பை நன்கறிந்தவர். வழமையாக பெரும்பான்மையினருக்கு சார்பான கருத்துக்களைக் கூறி, வாக்குகளைப் பெறுவார்கள். பண்டாரநாயக்காவிலிருந்து, டொனால்ட் ரம்ப் வரை இதுவே நடைபெற்றது. மாறாக பற்றிக் பிரவுண் சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெறுவதற்கு தூண்டிலை வெகு இலகுவாகவே போட்டார். இவர் ஒன்ராரியோவின் கொன்சவேற்றிவ் கட்சி தலைமைக்கு போட்டியிட்ட போது, சிறுபான்மை அங்கத்தவர்களின் வாக்குகளே இவர் வெற்றி பெற உதவி புரிந்தது. சுமார் முப்பதிரண்டாயிரம் தமிழ் உறுப்பினர்கள் இணைந்தார்கள் அல்லது இணைக்கப்பட்டார்கள் எனக் கூறப்படுகின்றது.தமிழர்கள் மாத்திரமல்ல, அனைத்து சிறுபான்மையினரையும் இவர் அணுகினார்.

பற்றிக் பிரவுண் தலைமைப் பதவிக்கு வந்தவுடன், சிறுபான்மையினம் ஒவ்வொன்றுக்கும் ஆகக் குறைந்தது மூன்று வெற்றி பெறக் கூடிய தொகுதிகளில் போட்டியிட ஆவன செய்யப்படும் என உறுதியளித்ததாக கூறப்படுகின்றது. இந்த மூன்று என்பது தமிழ் இனத்துக்குரியது. மற்றைய இனங்களுக்கான எண்ணிக்கை உறுதியாகத் தெரியாது. இந்த மூன்று ஆசனங்களுக்கு தமிழர்களுக்குள் நடைபெற்ற போட்டியை நீங்கள் அறிவீர்கள். மூன்று என்று தமிழரைக் குறுக்குவதும் ஒரு வகை அடக்குமுவீறாகும். இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட வேட்பாளர்கள், தங்களது தொகுதியில் வேறு தமிழர்கள் போட்டியிடுவதை திட்டமிட்டு மறிக்கின்றார்கள். அவர்களுக்கு எதிராக தவறான பிரச்சாரங்களை மேற்கொள்கின்றனர். பார்த்தி கந்தவேள் ஒரு ரொரன்ரோ கல்விச் சபை அறக் காப்பாளர். இவர் லிபரல் கட்சி வேட்பாளர் தேர்வுக்கு போட்டியிட்டபோது, இவருக்கு எதிராக நடைபெற்ற பிரச்சாரங்கள் முற்றுமுழுதான ஜனநாயக மீறல்கள். அறமற்ற, முறையற்ற செயல்கள். இதே தொகுதியில் கொன்சவேற்றிக் கட்சி வேட்பாளர் தேர்தல் முறையாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு வைக்கப்பட்டிருந்தது. இதே தொகுதியில் கிரேக்க சமூகத்துக்கும், தமிழ்ச் சமூகத்துக்கும் ஒரு முறுகல் நிலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக் பிரவுண் வெற்றிகரமாக ஏற்படுத்தியுள்ளார்.

பற்றிக் பிரவுணின் 'மூன்று தொகுதி' பிரகடனத்தால், உண்மையாக மக்களுக்காக தேர்தலில் நிற்கப் போகின்றவர்கள், தமிழர் என்ற காரணத்தால் பின்னடைவார்கள். பல தொகுதிகளில் போட்டியிடுகின்றேன் என அறிவித்த வேட்பாளர்கள் பின்வாங்கியுள்ளார்கள்.

கனடா ஒரு பல்கலாச்சார நாடு. இதன் கருவையே பற்றிக் பிரவுணின் 'இனங்களை பிரித்தாழும்' முறை உடைக்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு இனத்துக்கும் தொகுதிகள் ஒதுக்கப்படும் பொழுது அத் தொகுதியில் வாழும் அதே இன மக்கள் கொன்சவேற்றிவ் கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம் வெற்றி பெறலாம்; என்பது பற்றிக் பிரவுணின் கணிப்பு. இந்த வேட்பாளர்களும் தங்கள் இன மக்களையே பிரதிநிதிப்படுத்த தள்ளப்படுகின்றார்கள். இத் தொகுதியில் வாழும் ஏனைய இன மக்கள் புறந்தள்ளப்படுகின்றார்கள். இங்கு மற்றொரு விடயத்தையும் விளங்கிக் கொள்ளவேண்டும். தமிழர்கள் சிறுபான்மையாக உள்ள தொகுதிகளில் வாழும் தமிழர்களும் இம் முறையால் பாதிக்கப்படுகின்றார்கள்.

பற்றிக் பிரவுண் கலந்துகொண்ட இரண்டு ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு காணப்பட்ட பதாகையில் "Tamil MPP Candiates" எனவே குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையில் அவர்கள் அத்தொகுதிக்கான வேட்பாளர்கள். இது போட்டியிடும் தொகுதிகளில் இவ் வேட்பாளர்கள் தமிழ் மக்களை மட்டும் பிரதிநிதிதுவப்படுத்துகின்றார்கள் என்ற மாயையை ஏற்படுத்தும்;. இவர்கள் ஒன்ராரியோ கொன்சவேற்றிவ் கட்சியைத்தான் பிரதிநித்துவப்படுத்துகின்றார்கள். இவ்வாறன பதாகைகள், எம்மை மற்றைய இனங்களிடமிருந்து அந்நியப்படுத்தும்.

அடுத்து அங்கு கலந்து கொண்டவர்கள் கேட்கும் கேள்விகள் குறிப்பாக 'இலங்கையில் தமிழர்களுக்கு நடைபெற்றது இன சுத்திகரிப்பு எனக் கூறுகின்றீர்களா' போன்ற கேள்விகளே கேட்கப்படுகின்றன. சாதாரண மனிதன் அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகளைப் பற்றிய எந்த வித கேள்விகளும் கேட்கப்படவில்லை. இலங்கையில் இடைக்கால அறிக்கையை ஏற்றுக் கொண்டு நல்லாட்சியில் இணைய வேண்டும் என்று கூறிக்கொண்டே, இங்கு தமிழ் என்ற கோசத்துடன் மயக்கப்படுகின்றார்கள்.

பற்றிக் பிரவுணைப் பற்றி இரு பெண்கள் சி.ரி.விக்கு கூறியதைத் தொடர்ந்தே, பற்றிக் பிரவுண் தனது பதவியை இராஜினாமாச் செய்தார். இதனைப் பற்றி பலர் சமூக தளங்களிலும்;. ஊடகங்களிலும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த ஜனநாயக வெளி

> தெரிவு செய்யப்பட்ட தமிழ் வேட்பாளர்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா? அண்மையில் மற்றொரு தமிழ் வேட்பாளர் பற்றிக் பிரவுணின் செயலை கண்டிக்கப் போய், அவர் மீது சேறு பூசப்பட்டுள்ளது. தமிழ் வேட்பாளர்கள் தங்கள் தலைகளை தாங்களே உருட்டிக் கொண்டிருக்கின்றார்கள்

வரவேற்கத்தக்கது. ஆனால் பலரும், ஏன் இதுவரை இவர்கள் கூறவில்லை. பத்து வருடங்களின் பின்னர் கூறுகின்றனர் போன்ற பல கருத்துக்களை முன்வைத்துள்ளனர். பொதுவாகவே பெண்கள் இவ் விடயம் பற்றி புகார் செய்ய முன்வருவதே இல்லை. அவர்களது வேலை, சமூகம் போன்றவற்றை அவர்கள் இழக்க வேண்டிவரும் அல்லது ஒதுக்கப்படும் நிலை ஏற்படும். அண்மைக் காலம் வரை இந்த நிலை நீடித்துக் கொண்டுதான் உள்ளது. இப்பொழுது தான் இந்த நிலை மாறிவருகின்றது. விணி ஜிளிளி போன்ற அமைப்புக்களின் வளர்ச்சி பெண்களின் நிலையை மாற்ற போராடுகின்றது. பல பெண்கள் தங்களுக்கு நடைபெற்ற அநீதிகளை துணிந்து வெளியே சொல்லத் தொடங்குகின்றார்கள். இதனை அமெரிக்காவிலும், கனடாவிலும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் தலைவர்களுக்கே பல மனைவிகள் பகிரங்கமாக உள்ளார்கள். அதனால் அங்கு அது இயல்பாக உள்ளது. ஆனாலும் அங்கு பெண் ஒடுக்கு முறைக்கு எதிரான அமைப்புக்களின் தொடர்ச்சியான போராட்டங்கள் மாற்றங்களைக் கொண்டுவர முயற்சிக்கின்றன. எமது சமூகத்தில் பெரும்பாலான ஆண்கள் பற்றிக் பிரவுணின் செயலை இயல்பான ஒரு செயலாகவே பார்க்கின்றனர். அச் செயலை கண்டிக்க மறுக்கின்றனர். இவ்வாறான செயல்கள் கண்டிக்கப்பட வேண்டும். அதில் ஏன் தயக்கம்?

பற்றிக் பிரவுணின் தந்தையார் முன்னால் என்.டி.பிக் கட்சி டேவன்போர்ட் வேட்பாளர் (1979). ஒரு கிரிமினல் வழக்கறிஞர். தாயார் பாடசாலை அதிபராக கடமையாற்றியவர். பற்றிக் கத்தோலிக்க தனியார் பாடசாலையொன்றில் கல்வி கற்று பின்னர் ரொரன்ரோ பல்கலைக் கழகம், வின்சர் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் கல்விகற்றவர். பல்கலைக் கழகங்களில் பல விருதுகளைப் பெற்றவர். தனது 22வது வயதில் Barrie உள்ளூராட்சி சபை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். மிகச் சிறிய வயதிலேயே அரசியல் களம் புகுந்தவர்.

2015ல் ஒன்ராரியோ கொன்சவேற்றிவ் கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். கடந்த இரண்டு வருடங்களில் மூன்று பருவங்கள் தொடர்ச்சியாக ஆண்டு வருகின்ற லிபரல் ஆட்சிக்கு மாற்றாக, கொன்சவேற்றிவ் கட்சியை இவரால் வளர்த்துக் கொள்ள முடியவில்லை. முன்னைய லிபரல் அரசின் முதல்வரின் அலுவலர்கள் குற்றவாளியென நீதிமன்றம் தீர்ப்பளித்தபோதும், அதனை முறையாக மக்களிடம் வெளிப்படுத்தவில்லை. ஒரு எதிர்க்கட்சிக்கு கிடைத்த பல சந்தர்ப்பங்களில் இவர் மவுனமே காத்தார். பல அரசியல் விமர்சகர்கள், இவரை கத்தலின் வின்க்கு போட்டியான ஒரு தலைவராக கருதவில்லை. தனது கட்சிக்குள் ஒற்றுமையை ஏற்படுத்த தவறிவிட்டார். தனக்கு பின்னால் நடைபெறுவதனையும் அவதானிக்கத் தவறிவிட்டார்.

பிரதான ஊடகங்கள் தெரிவிக்கும் கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கும் பொழுது, பற்றிக் பிரவுணின் விவகாரம், பற்றிக் ஒன்ராரியோ தலைமைக்கு போட்டியிடும் பொழுதே , கட்சிக்குத் தெரியும் என தெரிகின்றது. ஏன் தெரிந்து கொண்டும் மவுனம் காத்தார்கள் என்ற கேள்வி எழுகின்றது. கடந்த மார்கழி மாதம், ஒன்ராரியோ மாநில உறுப்பினர் ஒருவர், பற்றிக் பிரவுணின் பிரச்சாரக் குழுவிடம் இது பற்றிக் கேட்ட போது, பிரச்சாரக் குழு மறுத்துவிடுகின்றது. அதே பிரச்சாரக் குழு, C.K.M ஊடகம் இதனை பற்றிக் பிரவுணிடம் தெரிவித்த பொழுது, பற்றிக் பிரவுணை இராஜினாமாச் செய்யுமாறு வற்புறுத்தியது. மறுத்த பொழுது அவர்கள் இராஜினமா செய்துள்ளனர். இந்த மாற்றம் ஏன்? இதனை வெளியிட்ட சி.ரி.வி தொலைக்காட்சிக்கும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் உள்ள தொடர்பு என்ன? தன் மீது தவறு இல்லையெனில் பற்றிக் ஏன் இராஜினாமா செய்தார்? போன்ற பல கேள்விகள் உள்ளன. இதனை உற்கட்சிப் பூசல் என்றெல்லாம் கூறப்படுகின்றது. ஒன்ராரியோ கொன்சவேற்றிவ் கட்சியின் உயர் குழாம் ( Elite Group ), பற்றிக் சிறுபான்மையினருடன் கொண்டுள்ள நெருக்கத்தை விரும்பவில்லை. அதனால் தான் இந்த திட்டமிடப்பட்ட வெளியேற்றம் என்ற கருத்தும் பரவலாக உலாவுகின்றது. ஒன்ராரியோ கொன்சவேற்றிவ் கட்சியின் அதி உயர் நிர்வாகக் குழுவில் ( Excutive ) பல சிறுபான்மையினத்தவர்கள் உள்ளனர். தலைவர், பிரதம உப தலைவர் உட்பட்ட பலர் சிறுபான்மையினமத்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எது எப்படியிருப்பினும், பற்றிக் பிரவுண் இந்தப் போராட்டத்தில் தோல்வி கண்டுள்ளார். அவர் செய்த தவறுகள், அவரது அரசியல் எழுச்சியை அஸ்தமித்தக்க செய்து விட்டது.

புதிய இடைக் காலத் தலைவர், வாக்காளர் தெரிவில் நடைபெற்ற முறைகேடுகள் கவனத்திற்கொள்ளப்படும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். இதனால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் வேட்பாளர்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா? அண்மையில் மற்றொரு தமிழ் வேட்பாளர் பற்றிக் பிரவுணின் செயலை கண்டிக்கப் போய், அவர் மீது சேறு பூசப்பட்டுள்ளது. குளோபல் செய்தியாளர் முக நூலில் தான் இது பற்றி தொடர்ந்து விசாரிக்கப் போவதாகக் கூறியுள்ளார். தமிழ் வேட்பாளர்கள் தங்கள் தலைகளை தாங்களே உருட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

இறுதியாக பற்றிக் பிரவுண் தொடர்ந்து தலைவராக இருந்திருந்தால்

Ernie Eves, John Tory, Tim Hudak வரிசையில் தோல்வியைத் தழுவியிருப்பார். இவர் தன்னை ஒரு நல்ல அரசியல் தலைவராக வளர்த்துக் கொள்ளவில்லை. இவரது இராஜினாமா புதிய தலைவருக்கு வழிவகுத்துள்ளது. இந்த மாற்றம் லிபரல் கட்சிக்கு நல்லதல்ல. லிபரல் பல சவால்களைச் சந்திக்க வேண்டிவரும். அடுத்த மாநிலவை ஒரு சிறுபான்மை அரசை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

– ரதன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 Year Pay Insurance

# இருபது வருடக் கட்டுப்பணம்! வாழ்நாள் முழுவதும் காப்புறுதி!

**இருபது வருடங்களுக்கு மட்டும் மாதாந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்துங்கள். அதன் பின்னர் உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு காப்புறுதி இருக்கும்.**

இருபது வருடங்களின் பின், விரும்பினால் காசுப் பெறுமதியை (Cash Value) அல்லது Policy Loan ஐப் பெற்றுக் கொள்ளலாம்.

| Age | 20 | | 25 | | 30 | | 35 | | 40 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 72 | 60 | 82 | 68 | 92 | 84 | 112 | 98 | 131 | 116 |
| 200K | 126 | 108 | 147 | 126 | 172 | 158 | 211 | 185 | 248 | 223 |
| 300K | 188 | 162 | 220 | 188 | 258 | 236 | 317 | 278 | 372 | 334 |



RBC Insurance, Manulife, Industrial Alliance, La Capitale Financial Group, Assumption Life, BMO Insurance, Sun Life Financial

**Thana Manickavasagar** Broker

Cell:416.728.5772 Office:416.519.3896

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP • Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4

# CANADA MIGRATION PILOT

Canada MIGRATION PILOT

## STUDY - WORK- SETTLE IN CANADA

## அங்கீகாரம் பெற்ற கனடிய குடிவரவு ஆலோசகர்கள்

- பெருந்தொகை பணம் செலவழித்தும் கனடாவிற்கு வரமுடியாமல் தவிக்கும் உறவுகளின் சட்டரீதியிலான குடிவரவிற்கு சரியான ஆலோசனையாளர்.
- இந்தியா, இலங்கையில் இருக்கும் உங்கள் மாணவ உறவுகளுக்கு தகுந்த வழிகாட்டலில் Student Visa ஏற்பாடுகள்.
- உங்கள் பெற்றோர் மற்றும் உறவினரை உங்களோடு சேர்த்து வைக்கும் Super Visa மற்றும் Visit Visa ஒழுங்குகள்
- உங்கள் பெற்றோரினை உங்களுடன் நிரந்தரமாக தங்கவைப்பதற்கான permanent resident Visa விண்ணப்பங்கள்
- கல்வித்தகமை, மற்றும் வேலை அனுபவம் உள்ள உறவுகளுக்கான skilled migration- Permanent Resident Visas
- இலங்கையில் கொழும்பு,யாழ்ப்பாணம். இந்தியாவில் சென்னை,கோயம்புத்தூர் மற்றும் கேரளாவில் எமது சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

## OUR SERVICES



- Family visa
- Spousal Sponsorship
- parental Sponsorship
- Super Visa
- Express Entry for Skilled Workers
- Student Visa
- Provincial Nominees
- Study Permits
- Visit Visas
- Citizenship Applications
- PR Card Extentions
- Immigration Consultations




**Saaruban Sivaratnam**
Regulated Canadian Immigration Consultant
(MBA,B.Eng)

6477178226 151 NASHDENE RD,#55 SCARBOROUGH,ONTARIO


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வெளிச்ச செயற்பாடும் சமூகவலைத்தள பிரதிபலிப்புக்களும்

புதியவெளிச்ச இயற்கை விவசாய வாரம் வடக்கு கிழக்கு முழுவதும் மட்டுமல்லாது , முழு இலங்கையையும் இயற்கை விவசாயம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்ப்படுத்தியது. வடக்கில் 30 க்கு மேற்பட்ட நிகழ்வுகளில் பெருமளவிலான மக்கள், சமூக தலைவர்கள், மாணவர்கள் கலந்துகொண்டது மட்டுமல்லாது, பெருமளவிலான செயற்பாட்டு இயக்கங்களையும் தோற்றுவித்திருக்கினறது. பல பாடசாலைகளில் அவ்வாரத்தை இயற்கை முறையில் கடைபிடித்திருக்கின்றார்கள். புலப்பெயர் சமூகத்திலிருந்து பலர் விவசாயத்தில் முதலிடுவதற்கு ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளோம். பல ஊள்ளூர் சந்தை வாய்ப்பையும், ஏற்றுமதி தொடர்புகளையும் ஏற்படுத்தியுள்ளோம்.

புதிய வெளிச்சம், புலம்பெயர் சமூகமாக மீண்டும் தாயகத்துக்கு சென்று மீண்டும் மீண்டும் சாதாரண மக்களோடு அவர்களிடல் ஆழ்மனங்களோடு பேசுகின்றோம் . தொடர்ந்தும் பேசுவோம் .

இந்நிகழ்வுகள் முடிந்த பின்னர் தொடர்ந்தும் தாயகத்திலிருந்து வரும் இயற்கை விவசாயம் தொடர்பான செயற்பாட்டு முயற்சிகள் ஆறுதலையும் நம்பிக்கையும் தருகினறன .

சமூகவலைத்தளங்களில் ஆயிரத்துக்குமதிகமாக பகிர்ந்து கொண்டமையும் , உலகம் முழவதும் வந்த வாழ்த்துக்களும் ,விருப்பு எண்ணிக்கைகளும் எம்மை சோர்வடையாமல் பலப்படுத்தின, அவற்றில் சிலரது குறிப்புகளை பதிவிடுகின்றோம்



சேதன உற்பத்திகளுக்கு சந்தை திறப்பு



மண்புழு உற்பத்தி ஆரம்பிக்கும் விவசாயிகள்




வர்த்தக கண்காட்சியில் இயற்கை விவசாயம்



பாடசாலை நிகழ்வில் இயற்கை விவசாயிக்கு கௌவரவம்



பாடசாலைகளில் இயற்கை விவசாயம் விழிப்புணர்வு வாரம்

Councillor Neethan Shan – City of Toronto

Proud #TamilCanadian moment.. As we mark Tamil Heritage Month and Pongal in Canada, it is heartening to note that one of our own Tamil Canadians, Navajeevan, is back home, involved in organizing a phenomenal list of activities through an initiative called Puthiya Velicham! His team has declared this week as Ecological Agriculture Week and is engaging many hundreds of farmers and others in many villages and towns in the Northern Province in a meaningful and respectful manner. This month is Tamil Heritage Month in Canada. In 2017, our theme was Agriculture as it played a very significant role in Tamils' lives in the past and continues to do so even today. So it is remarkable that this year, an individual from our own Tamil Canadian family is there to lead and spearhead this awesome initiative. Thank you Navajeevan for the leadership, passion, outside the box thinking and all the hard work. Very proud of your work! Thanks to all the experts who live there and the ones who are visiting to help. This project is very refreshing news for all of us. As the slow paced rehabilitation and rebuilding takes place in our war affected homeland, it is very important that the protection of the ecological integrity of our land is kept front and centre in our mind. Rushed and poorly thought out development activities can ruin the earth/land for our future generations there. This makes this project even more relevant and crucial as it reminds us to consider the ecological integrity and environmental projection as key aspects in our work, while we continue to figure out ways to successfully emerge from the very adverse impact of the war.





வினோத உடைபோட்டியில் நஞ்சற்ற சுத்தக கத்தரிக்காய் சிறுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### Dr Ramanathan Lambotharan



புதிய வெளிச்சம் இவ்வருடமும் தாயகத்தில் தனித்துவமான தடம் பதித்து வந்திருக்கின்றது. பலரும் தொடாத அல்லது தொடத் தயங்குகின்ற ஆனால் போருக்குப் பின்னான தாயகத் தமிழ் மக்களின் வாழ்க்கையில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தத் தேவையான அத்தியாவசியமான விடயங்களைத் தொட்டு வழிப்படுத்தி வருவது நவஜீவன் வழி நடத்தும் புதியவெளிச்சத்தின் பாணியாகும். சென்ற வருடம் போரின் வடுக்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்களினதும் மக்களினதும் உளரீதியன ஆற்றுப்படுத்தலை முன்னெடுத்த புதியவெளிச்சம் இவ்வருடம் அதேபோல இயற்கை வேளாண்மை மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் மற்றும் திறன் வளர் பயிற்சிகளை உலகளாவிய ரீதியில் அவ்வத்துறைகளில் தகை சார்ந்த வல்லுனர்களை வரவழைத்து மிகச்சிறப்பாக நடாத்தியுள்ளது. தொலைநோக்குடன் கூடிய இம் மாபெரும்

மனித நேயப்பணியை எம் ஈழ மக்களுக்கு ஆற்றிவரும் புதியவெளிச்சத்திற்கும் அதனை முன்னெடுத்து நடாத்தும் நவஜீவன் அவர்களுக்கும் அதன் ஆதரவாளார்களுக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துகள். இவர்கள் பணி மேன்மேலும் வளரவும், தொடரவும் எனது பிரார்த்தனைகள்.

### Dr Dharani Akil



எழில் சூழும் ஈழம். மனதில் நீக்கமற இடம் பெற்ற எம் மக்கள் என என் மனதின் நினைவலைகள் என்னை உறங்கவிடாமல் தட்டி எழுப்புகிறது. மனம் கசிந்து வழிகிறது. அழகுப்பைம்பொழில்கள் கொண்ட நாட்டை இந்தியாவில் இருந்து நாம் காண்பதென்னவோ நூற்றில் பத்து சதம் மட்டும்தான். இலங்கை செல்கிறேன் என்றதும் நல்லா சுற்றி பாத்துட்டு வாங்க என்று வழியனுப்பும் நம்மிடம் எத்தனை பேருக்கு தற்போதைய மக்கள் நிலை புரியும்? இலங்கை என்றதும் கண்டி, கொழும்பு, நுவரெலியா, பின்னவாலா என சுற்றுலா மையங்கள் மட்டுமே கண்டுவிட்டு இலங்கை முழுதும் பார்த்துவிட்ட களிப்பில் ஆனந்தப்படும் நம்மின் அறியாமை மட்டும் அல்லாது அரசியல்வாதிகள் மற்றும் ஊடகங்கள் நமக்குக் காட்டித்தரும் வேறு விதமான அவலங்களையும் தாண்டி கல்வியாளர்களாக எம் குழு திருமதி. முனைவர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் முன்னிலையில் புதிய வெளிச்சம் அமைப்பின் ஏற்பாட்டில் நாங்கள் வகுப்பு எடுத்த பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மூலம் நாங்கள் உணர்ந்து அதிர்ந்த பல விஷயங்கள் என் மனதின் தளும்புகிறது. எந்த அரசியலும், எந்த தனிப்பட்ட கருத்துக்களும் கலக்காமல், ஒரு சாதாரணமான ஆசிரியர் பார்வையில் விவரிக்க நான் முடிவெடுத்துள்ளேன். என் பயண அனுபவங்கள் என்பதையும் தாண்டி, நாம் எந்தவிதத்தில் நம் இனத்திற்கு கொஞ்சம் நம் கையை கொடுத்து தூக்கி விடலாம் என்ற ஆதங்கமே இதற்குக்காரணம். ஆவேசம் காட்டி களத்தில் குதித்த அரசியல்வாதிகளோ, அமைப்புகளோ நம் இனத்துக்கு செய்த நன்மைகளை விட இன்னல்களே அதிகம். எனவே அரசியல் சார்ந்த அல்ல்து வேறு வித கருத்துக்கள் எதுவும் தற்போது உதவாது. அவர்கள் எதிர்காலம் என்ன என்பதையே நாம் கலந்தாலோசிக்க வேண்டியது அவசியம்.

### Rajeef Koneswaran



பொங்கல் என்பதே தமிழரின் விருந்தோம்பல் பண்பாட்டின் அடையாளம்,

தான் மட்டும் வாழாமல் தன்னை சூழ்ந்திருக்கும் சமூகமும் வாழ வேண்டும் என்று படைத்தவனுக்கும் பசிக்கு உணவு சமைப்பவனுக்கும் நன்றி சொல்லும் திருநாளில் " புதிய வெளிச்சத்திற்கு" வலுச்சேர்ப்பதற்கும் வாய்ப்பு கிடைத்தது பெரு நிறைவை தருகின்றது. " "Giving Back to the Community" என்பதை எங்கள் தாரக மந்திரமாக வியாபாரக் குறியீட்டில் சுமந்திருக்கும் " RE/MAX Community Realty" புதிய வெளிச்சம் செயல் திட்டத்தின் வெற்றியில் மன மகிழ்வடைகின்றது.

வியாபாரமயமாகவும் அரசியல் அரங்கங்கங்களாகவும் மாறிப்போய் நிற்கும் சில கனேடிய தமிழர்களின் "பொங்கல்" கழியாட்டங்களை தாண்டி தமிழரின் பாரம்பரியங்கள் இருளில் தொலையாமல் வெளிச்சம் ஏற்றியிருகின்றது "புதிய வெளிச்சம்".

மீண்டும் வாழும் கனவுகளைச் சுமந்து கொண்டிருக்கும் எங்கள் தாயக மக்களின் வாழ்வில் அக இருளை நீக்கி நல் ஒளியை ஏற்றியிருக்கின்றது புதிய வெளிச்சம்.

RE/MAX Community Realty இன் விற்பனைப் Remax ThipanRaj உடன் இணைந்து புதிய வெளிச்சத்திற்கு வலுச் சேர்த்தமை இந்த வருடத்தின் நம்பிக்கையான ஆரம்பத்தை எமக்கு ஏற்படுத்தியிருக்கின்றது.

இலாபமீட்டுவதை மட்டும் நோக்காக கொண்ட வியாபார நிறுவனமாக தேங்கிக் கிடப்பதில் என்றும் எமக்கு உடன்பாடில்லை.

அதனால் தான் சமூக அக்கறை கொண்ட செயல்திட்டங்களோடு எம்மை நாம் அடையாளப்படுத்தி ஆதரவளித்து வருகின்றோம்.புதிய வெளிச்சம் போல் இன்னும் பல திட்டங்கள் புலம் பெயர் தேசத்தில் இருந்து தாயகம் நோக்கியதாய் விரிவடைய வேண்டும் தாயக மக்களின் தேவைகளை "பொருளதார" அளவுகளில் மட்டுப்படுத்தி விடாமல் நீண்டகால நோக்கில் அவர்களை வலுவூட்டுவதற்கான நல்ல பல திட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும்.

"வீடு" கட்டுவதும் "சைக்கிள் வாங்கி" கொடுப்பதும் போதும் என்று நின்று விடாமல் எமது மக்கள் எழுந்து நிற்பதற்கு "நம்பிக்கையான" ஊன்று கோல்களாக நாம் மாறவேண்டும். அது தான் இந்த தைத் திருநாளில் எமது உறுதியாக இருக்க வேண்டும். அனைவருக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள் !!!

### குலசிங்கம் வசீகரன்



இயற்கை வேளாண் விவசாயிகள் திரு சுந்தர்ராமன் மற்றும் திரு சதுரகிரி ஆகியோருடன்.

தமிழ்நாட்டிலிருந்து புதிய வெளிச்சம் பயிற்சி பட்டறைகளுக்காக வருகைதந்திருந்த அனைவருமே, நம் மண் மீதும், மக்கள் மீதும் உண்மையான அன்பும் பாசமும் கொண்டவர்களாக, தங்களால் முடிந்தவரை எம்மவர்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று மனப்பூர்வமான விருப்பமுடையவர்களாக காணப்பட்டார்கள்.

எமக்கும் பொறுப்புணர்வையும் கடமைப்பாட்டையும் தந்துவிட்டு சென்றிருக்கிறார்கள்.

புதிய வெளிச்சத்தை இன்னும் பிரகாசமாக முடிந்த தூரம் வரைக்கும் எடுத்துச்செல்ல வேண்டும். நம்மிடையே இன்னும் பலர் புதிய வெளிச்சத்தை அடுத்தடுத்த சந்ததிக்கு எடுத்துச்செல்ல முன்வரவேண்டும்.

### Maheswaranathan Kirisan



பாடசாலை மாணவர்களிடையே இயற்கை விவசாய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக நஞ்சற்ற இலங்கையை உருவாக்க முயற்சி செய்யும் நோக்கில் யா/ அல்லைப்பிட்டி பராசத்தி வித்தியாலயத்தில் இயற்கை விவசாய விழிப்புணர்வை மேற்கொண்டிருந்தேன். மாணவர்களுடன் இணைந்து மரக்கறி நாற்றுக்களை நடுகை செய்தேன். மாணவர்கள் நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாப்போம் என்றும் நஞ்சற்ற உணவை உண்பதற்காக இரசாயனங்கள் அற்ற இயற்கை விவசாயத்தை மேற்கொள்வதுடன் மற்றவர்களையும் ஊக்கப்படுத்தி நிலைத்தகு வாழ்க்கை முறைமையை கட்டியெழுப்புவோம் என உறுதிமொழி எடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Abina Nimalraj**

Agriculture is one of the major contributing factors to Tamils' development in the past which is not well-prioritized in today's time. With the Puthiya Velicham initiative, Navajeevan Anantharaj uncle is doing an incredible job in taking a step forward and contributing to the agricultural development for our brothers and sisters in Tamil Eelam. Being a diaspora Tamil, Navajeevan uncle's Puthiya Vellicham initiative is a very inspiring one which is not only enhancing agriculture in the Northern and Eastern provinces of Sri Lanka, but it is also a motivating factor for us diaspora Tamils to follow his lead and help contribute to the cause. As we celebrate Tamil Heritage Month in Canada this month, the Puthiya Velicham team has made this week more special by declaring it as Ecological Agriculture Week. Along with myself, I hope the younger generations of diaspora Tamils are able to grasp the importance of understanding and pursuing agricultural development in our homeland through Puthiya Vellicham's future initiatives!



**Radha Krish Sithamparam**

வெற்றிகரமான பல படைப்புகள் படைத்து வலம் வரும் நவயுக நாயகன் நவஜீவனை வடமாகாண முதல்வர் பாராட்டுகிறார் என்றால் மிகையாகாது இதற்கு நன்றி சொல்லி மாறாது EXCELLENT JOB வாழ்த்துகள்



**Kuganesan Kukathassan**

இயற்கை விவசாய வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிற்கான உணவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இரசாயன உரப்பாவனை அற்ற மரக்கறி வகைகளைப் பெற்றுக்கொள்வதன் சிறிய முயற்சியாக மரக்கறிப் பயிர்வகைகள் நடப்பட்டமையைத் தொடர்ந்து இன்றும் மேலும் பல மாணவ மாணவிகள் தாமாக முன்வந்து மரக்கறிப்பயிர் வகைகளையும் அவற்றினை நடுவதற்கான பைகளையும் தந்துதவினர். மாணவர்கள் ஆர்வத்துடன் செயற்படுவதனையும் பெற்றோர்கள் பாதுகாப்பு வேலியமைப்பதனையும் படங்களிற் காணலாம். (மன்னார் /ஈச்சளவக்கை அதகபாடசாலை, மடு வலயம் )



**Uthayan Thurairajah**

பேராசிரியர் ஸ்ரீஸ்கந்தராஜா விவசாய உலகில் சிகரம் தொட்டவர். அவரோடு பழகும் அரும் பாக்கியம் பெற்றவன். அவர் சேவை ஆண்டவன் அருளால் எம்மவர்க்கு கிடைக்கட்டும். புத்தாண்டில் புதிய ஒளி பரவட்டும். வணக்கம் வாழ்த்துக்கள்



**Malarvilzhi Ratnasabapathy**

உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள், உங்களின் சேவை எமது மக்களுக்கு நிச்சயமாக ஒரு விழிப்புணர்வை கொண்டு வரும், எல்லோரும் நலமுடனும், வளமுடனும், வாழ வாழ்த்துகின்றேன்.



**Shan Ranjith**

Had a chance to attend the event at Kantharmadam, it was very useful, thanks for arranging such an event with great experience resourceful speakers



**Ravi Kathirgamu**

எம் மக்களுக்கு உங்களின் சேவை நிற்சயம் அவர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு உதவியாக இருக்கும். நன்றி.



**Yamuna Nithiananthan**

I think your dream comes true.....!!!! Well Done & Keep it Up Navajeevan......!!!



**Arun Chellappah**

மேடைப் பேச்சோடு நின்று விடும் இக் காலத்தில், சுயம் சார்ந்த எதிர் பார்ப்பு அற்று, சமூக சேவை செய்யும் தங்களுக்கு ( Navajeevan Anantharaj ) வாழ்த்துக்கள் !!! மக்கள் வாழ்விடம் தேடிச் செல்லும் " புதிய வெளிச்சம் "



**Kubes Navaratnam Nava Wilson LLP**

Another great and needed initiative to advance long-term sustainability for Tamils in the North and East Provinces of Sri Lanka (Eelaam Tamils)!



**Sms Hameed**

இந்நிகழ்ச்சி காலத்தின் தேவைக்குரிய அவசியமான அவசரமான நிகழ்வாகும். இச்செயற்பாடு தொடர்வதற்கு வாழ்த்துகள்!



**Mala Aravin**

நல்லதொரு நிகழ்வு, மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. எமது மாணவர்களால் ஆங்கில மொழியை எழுத வாசிக்க முடிகிறது ஆனால் சரளமாகக் கதைக்க அவர்களுக்கு வசதிகள் இல்லை. குறைந்த பட்சம் உயர்கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள். பல்கலைக் கழகத்திற்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ செல்லும் போது இது மிகவும் உதவியாக இருக்கும். ஆங்கில மொழி அறிவு இருந்தால் துணிந்து முன் வந்து எதையும் செய்வதற்குத் துணிவு ஏற்படும். அதன் மூலம் தலைமைத்துவத்தை ஏற்று சாதனைகள் படைக்க முடியும்.

நல்ல முயற்சி, இப்படியே தொடர வாழ்த்துக்கள். நிகழ்ச்சியை முன் எடுக்கும் நண்பர் நவஜீவன் மற்றும் இகுருவி குழுவினருக்கும், அதற்கு உதவியாக இருக்கும் பேராசிரியர் ஜெயந்திஸ்ரீ குடும்பத்தினருக்கும் எனது வாழ்த்துக்கள். அன்புடன் குரு அரவிந்தன்.



**Jeyan Inpanayagam**

Very good job Jeevan. People will remember you for long time to come.



**Sampasivam Jeyatharsan**

Good work Navajeevan Anna, this kind of work shop and seminar important for our Tamil teacher and principals for changing thier attitude.



**Sellathurai Thiruselvanathan**

வாழ்த்துக்கள் மக்களை அறியாமையிலிருந்து மீட்கும் முயற்சி வெற்றிபெறட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Kaji Ochre

எனது இலங்கை பயணம்..

நாங்கள் ஐந்து பேர் கொண்ட விவசாய குழு இலங்கையில் நடந்த புதியவெளிச்சம் ஏற்பாடு செய்த பயிற்சி பட்டறைக்காக கடந்த மூன்றாம் தேதி சென்றோம். பல விவசாயிகளை சந்தித்தோம்.அனைவரும் இயற்கை விவசாயம் செய்ய மிகவும் ஆர்வமாக உள்ளனர்.சிலபேர் இயற்கை விவசாயம் செய்து கொண்டு இருக்கிறார்கள். நிகழ்ச்சியை முழு ஈடுபாட்டுடன் செய்த Navajeevan Anantharaj கனடாவாழ் இலங்கை தமிழர். இவர் கனடாவில் இருந்து வந்து இலங்கை மக்களுக்கு. புதிய மாற்றத்தை ஏற்படுத்த விவசாயம், கல்வி மற்றும் தொழில்நுட்ப பணிகளை பல மக்களிடம் கொண்டு செல்கிறார். எங்கள் அனைவரையும் சிறப்பாக கவனித்துக்கொண்டு நிகழ்வுகளை சிறப்பான முறையில் கொண்டு சென்றார். அடுத்து Perinpanathan Ekuruvi Aya Sinnathambi Kandiah இவர் 68 வயது இளைஞர். நிகழ்வுகளில் எங்களுடன் நீண்ட தூரம் பயணித்து சிறு சோர்வுகூட இல்லாமல் அனைத்து நிகழ்வுகளை சிறப்பான முறையில் ஒளிப்படம் எடுத்தார். என் வாழ்வில் மறக்க முடியாத ஒரு நபராக மாறிப்போனார்.அடுத்து குலசிங்கம் வசீகரன் இவர் இலங்கையில் இருந்து கொண்டு அனைத்து மாணவர்கள் மற்றும் விவசாயிகளை ஒருங்கிணைத்து பயிற்சி பட்டறைகளை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்தார். மேற்கூறிய அனைவரும் மற்றும் பெயர் குறிப்பிடாத பலபேர்களும் சிறிய முறையில் சேவை செய்தனர். இவர்களது பணி மேலும் சிறப்படையும், தமிழர்களுக்கு புதிய வெளிச்சம் பிறக்கும், புதிய மாற்றம் ஏற்படும், தமிழர்களின் வாழ்வு மறுமலர்ச்சி ஏற்படும் என நான் உறுதிகூறுகிறேன்... நான் மறக்கமுடியாத இலங்கை மக்கள்...



Kumaraguru Sivanantha

You did a great job Nava jeevan!

An old chinese proverb says : Give a man a fish, and you feed him for a day. Teach a man to fish, and you feed him for a lifetime.

You have helped a lot for lifetime



Jeya Chandren

Thanks so much Navajeevan Anantharaj for all that you do for our country and our people!!! We are proud of your initiatives!!!



Guna Thuraisingham

That's really an exciting and needed workshop

Congratulation on your appetite in make real difference in life of our home land most needed individuals! Very happy for you and all the very best !



ramesh

இன்று நான் யாழ் பல்கலைக்கழக வகுப்புக்கு செல்லாமல் புதிய வெளிச்சத்தின் இயற்கை விவசாய பட்டறைக்கு வந்தது 100% சந்தோசமாய் இருக்கின்றது ......யாழ் பல்கலைக்கழக மாணவன்.


MT CPA CA

MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

We wish you A Merry Christmas and A Happy New Year



* AUDIT
* REVIEW ENGAGEMENT
* NOTICE TO READER
* BUSINESS ADVISORY
* CONTROLLERSHIP SERVICES
* CORPORATE TAXES
* PERSONAL TAXES
* FINANCIAL PLANNING
* CRA AUDITS
* PAYROLL
* BOOKKEEPING

Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 304 - 5200 Finch Ave East, Scarborough, ON M1S 4Z5

A LICENSED PUBLIC ACCOUNTING FIRM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்கேஜ்



புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

# MORTGAGE NESAN
## 416-908-5656

*Residential / Commercial / Industrial / Investment Properties*

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

## 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

## 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

## Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

## 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

## 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

## Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.

Office: 1-844-878-2721
Fax: 647-351-3099



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியானந்தாவின் வீட்டிலிருந்து வைரமுத்துவுக்கு வசைபாடும் கும்பல்!





சிவனின் பாதங்களைத் தொட்டுப் பூஜிக்கும் இந்துக்களில் எத்தனை பேர் ஆண்டாளை முழுமையாகப் படித்திருப்பார்கள் என்பது மிகப் பெரிய கேள்வி. குறைந்தபட்சம் இதில் ஒருவராவது வைரமுத்துவின் அந்தப் பேச்சையோ, கட்டுரையையோ படித்திருப்பார்களா என்றால், அதுவும் நிச்சயம் கிடையாது.

வைரமுத்துவுக்குப் தொலைபேசி செய்து பேசிய பி.ஜே.பி—யைச் சேர்ந்த கல்யாண்ராமன் கூட இவ்வாறு சொல்கிறார். தான் அந்தக் கட்டுரையையோ, பேச்சையோ கேட்கவில்லை என்கிறார் அவர். ஆனால், சகட்டுமேனிக்குப் பேசுகிறார்கள். வாய்க்கு வரும் வசைகளை எல்லாம் பேசித் தள்ளுகிறார்கள். வயது வித்தியாசம் பாராமல் பேசுகிறார்கள்.

"உயிர் மலர்ச்சி.. உணர்வு மலர்ச்சி. இது இரண்டையும் பரமஹம்ச நித்தியானந்த சுவாமிகள் எங்களுக்கு அளித்திருக்கிறார்' என்று ஒரு வீடியோ பதிவில் பேசியிருக்கிறார்கள் அவரது பக்தர்கள். அவர்களுக்கு அந்த வார்த்தை மலர்ச்சி மற்றும் ஞான மலர்ச்சியையும் அவர்தான் கொடுத்திருப்பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்த பெரும்பாலான வீடியோக்களில் பேசுபவர்களின் பின்னணியில், சிரித்த முகத்தோடு அவர்களை ஆசீர்வதித்தபடி அமர்ந்திருக்கிறார் நித்தியானந்தா. இதுவரை, இந்தச் சிறுவர்கள் இப்படிப் பேசியதற்கு எதிராக நித்தியானந்தாவிடமிருந்தோ அவர் நடத்தும் அமைப்பிடமிருந்தோ ஒரு சிறு அறிக்கை கூட வரவில்லை. ஒன்று அவர்கள்தான் இவர்களைப் பேசவே சொல்லியிருக்க வேண்டும். அல்லது, அவர்கள் பேசுவதை முழுமனதோடு ஆதரிக்கிறார்கள்.

கூட அது எத்தனை பெரிய விபரீதம் என்பது புரியும். நித்தியானந்தாவின் இளவரசிகளாகத் தங்களைப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் அந்தச் சிறுமிகள் பேசிய வார்த்தைகளை பொதுவெளியில் எழுதிட முடியாது. இந்தக் கொடுமையின் உச்சகட்டம், தமிழ் மொழியின் மிக முக்கிய ஆளுமைகளில் ஒருவராக இருக்கும் கவிஞர் வைரமுத்துவுக்கு எதிராக இந்தக் கொடுஞ்சொற்களை அவர்கள் பயன்படுத்துவது. மதன் கார்க்கி வரை அவர்களின் பேச்சு நீண்டது. கனிமொழி கூறிய கருத்துக்கும் அவர் இந்தக் கூட்டத்திடமிருந்து தப்பிவிடவில்லை.

சிறுவர், சிறுமிகள் இப்படி பேசுவது, அவர்களை இப்படி பேச அனுமதிப்பது, அவர்கள் இப்படி பேசுவதை ஆதரிப்பது எல்லாமே பெருங் குற்றம் என்றும் அந்தக் குழந்தைகளை அவர்களிடமிருந்து மீட்க வேண்டும் என்றும் கர்நாடக டிஜி.பி, தேசிய மற்றும் மாநிலக் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்புக்கு புகார் மனு அனுப்பியுள்ளார் சமூக ஆர்வலர் பியூஷ் மானுஷ். போஸ்கோ (Posco - Protection of Children against Sexual Offences) சட்டத்தின் கீழ் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார் அவர்.

வேடிக்கை என்னவென்றால், நித்தியானந்தாவின் இளவரசிகளும் அதேசட்டத்தைக்காண்பித்துதங்களுக்கு எதிராக சமூக வலைதளங்களில் கருத்து தெரிவிப்பவர்களையும் கைதுசெய்ய வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். நித்தியானந்தாவிடமிருந்து அந்தச் சிறுவர், சிறுமிகளை அந்தச் சட்டம் கொண்டு மீட்க வேண்டும் என்பது ஒருபுறமிருக்க, பொதுமக்களிடமிருந்து எங்களைக் காத்து தங்களின் குருவிடமே தாங்கள் பத்திரமாக இருக்க வழி செய்ய வேண்டுமென்று அதே சட்டத்தை அவர்கள் கோரியிருப்பது நகை முரண் தான்.

இந்தப் பிரச்சினை ஆண்டாள் குறித்தோ, நித்தியானந்தோ குறித்தோ, வைரமுத்து குறித்தோ ஆனது அல்ல. இந்தப் பிரச்சினையின் ஆழத்தில் நாம் பார்க்க வேண்டியது இந்தக் குழந்தைகளின் உளவியலை. இந்தக் குழந்தைகளை இப்படியான ஓர் இடத்தில் கொண்டு போய் சேர்த்திருக்கும் பெற்றோர்களின் உளவியலை; இப்படியான குழந்தைகள் கூட்டத்தைப் பக்தி என்ற பெயரில் ஈர்த்து தவறான வழிக்கு இழுத்துச் செல்லும் நபர்களின் உளவியலைத்தான். பாடசாலையில் ஒரு மாணவர் தவறான வார்த்தை பயபேசிவிட்டால்... அந்த மாணவர் பயப்படுவார். குற்ற உணர்வு ஏற்படும். ஆசிரியருக்குத் தெரிந்துவிட்டால் ஏதும் தண்டனைக் கிடைக்குமே என்ற பயம் ஏற்படும். ஆனால், நித்தியானந்தாவின் இந்த மாணவர்களுக்கு அப்படியான எந்த பயமும், குற்றவுணர்வும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்தக் குழந்தைகள் அப்படி பேசுவதை எல்லாம் கேட்டால், அவர்கள்மீது எந்தக் கோபமும் ஏற்படவில்லை. மாறாக அவர்களைக் கண்டு பரிதாபமாகத்தான் இருக்கிறது.

இதுமாதிரியான ஆன்மிகத் தலைவர்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள்? அவர்கள் பின்னால் எப்படி இப்படியொரு பெருங்கூட்டம் திரள்கிறது? அவர்களை இந்தத் தலைவர்கள் எப்படி மயக்குகிறார்கள்... ஏமாற்றுகிறார்கள்... தங்களின் கைப்பாவைகளாக மாற்றுகிறார்கள்?

**இதுமாதிரியான ஆன்மிகத் தலைவர்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள்? அவர்கள் பின்னால் எப்படி இப்படியொரு பெருங்கூட்டம் திரள்கிறது? அவர்களை இந்தத் தலைவர்கள் எப்படி மயக்குகிறார்கள்... ஏமாற்றுகிறார்கள்... தங்களின் கைப்பாவைகளாக மாற்றுகிறார்கள்?**

தலைவர்கள் எப்படி மயக்குகிறார்கள்... ஏமாற்றுகிறார்கள்... தங்களின் கைப்பாவைகளாக மாற்றுகிறார்கள்? குறிப்பாக, இதுபோன்று வரும் பெண்களை எப்படி தங்களின் இச்சைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதுகுறித்த ஓர் ஆழமான ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிறார் அமெரிக்காவைச் சேர்ந்த உளவியல் ஆராய்ச்சியாளர் டாக்டர் ஜஞ்ஜா லலிச்

The PsychoSexual Exploitation of Women in Cults' என்ற தலைப்பின் கீழ் இந்த ஆராய்ச்சிக் கட்டுரையை அவர் சமர்ப்பித்துள்ளார். வரலாற்றிலிருந்து பல தகவல்களைத் திரட்டி, அதை நிகழ்கால நிகழ்வுகளோடு இணைத்து பல ஆதாரங்களோடு இந்தக் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

"படிப்பறிவில்லாத, நிலைத் தன்மையற்ற, மாறுபட்ட மனிதர்கள் அல்ல இதுபோன்ற தலைவர்களை நம்பிப் போவது. உலகளவில் இது போன்ற தலைவர்களைப் பின்பற்றிப் போகும் கூட்டத்தில் இருப்பவர்களில் பெரும்பாலும் நல்ல அறிவுள்ள, நிலையான வாழ்க்கைச் சூழலில் இருக்கும் மிகச் சாதாரண மக்கள்தான் அதிகம் இருக்கின்றனர்" என்று இந்தக் கட்டுரையின் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார், மார்கரேட் தேலர் சிங்கர் எனும் மனோதத்துவ டாக்டர்.

ஒரு மனிதன், பிற மனிதன்மீது தன் அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும் செலுத்த வேண்டுமென்று முடிவு செய்கிறான். அதற்கான முக்கிய வழி அவனுடைய/ அவளுடைய நம்பிக்கையை முழுமையாகப் பெறுவது. அது உடல்ரீதியான நெருக்கத்தின் மூலம்தான் கிடைக்கும். அதனால்தான், இந்தத் தலைவர்கள் பெண்களை உடல்ரீதியில் கவர்கிறார்கள். உடல்ரீதியில் ஒருவரை உட்படுத்தி விட்டால், அந்த உருவம் அவர்களுக்கு இடையேயான தடைகளை உடைத்து, அவர் மீதான் முழு ஆதிக்கத்தைச் செலுத்த வழிவகைசெய்கிறது. கூடவே, இதுபோன்ற தலைவர்கள் பேச்சில் வல்லவர்கள் என்பதால், இந்த விஷயங்களை மிக எளிதாக அரங்கேற்றுகிறார்கள்.


எல்லாவற்றுக்கும் மேலாக, ஆராய்ச்சியாளர் ராபர் ஹரே (Robert Hare) இதில் சில விஷயங்களை முன்வைக்கிறார்.

"இந்த ஆன்மிகத் தலைவர்கள் அனைவருமே சைக்கோபாத் (Psychopath) கிடையாது. ஆனால், இதில் பெரும்பாலானவர்களுக்கு இந்த பர்சனாலிட்டி டிஸ்—ஓர்டர் (Personality Dis-order) இருக்கிறது. ஆம்...அவர்களில் பெரும்பாலானவர்கள் மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் தான்" என்று சொல்கிறார் ராபர்ட்.

இப்படியாக, அவர்களின் உளவியலை மிக விரிவாக ஆராய்ச்சிக்குட்படுத்தியிருக்கிறது இந்தக் கட்டுரை. இது இந்து மதத்துக்கோ, கிறித்தவ மதத்துக்கோ, இஸ்லாம் மதத்துக்கானதோ மட்டுமான ஆராய்ச்சி அல்ல. இது, பொதுவான அனைத்து மதத்துக்குமானதுதான். சொல்லப்போனால், மதங்களுக்கும் அப்பாற்பட்டது. இந்தக் கட்டுரை பிரச்சினையை மட்டும் பேசவில்லை; அதற்கான தீர்வுகளையும் பேசியிருக்கிறது. குறிப்பாக, இதிலிருந்து மீட்கப்படும் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு, எந்த மாதிரியான மனோதத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதையும், இதற்கெல்லாம் காரணகர்த்தாக்களாக இருக்கும் மதப்போர்வையில் உள்ளவர்களுக்கு என்னமாதிரியான மனோதத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட வேண்டும் என்பதுகுறித்தும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பொங்கல்



வழமை போலவே தமிழ் மரபுரிமைத் திங்கள் இந்த வருடமும் கனடாவில் 'வெகு சிறப்பாக' கொண்டாடி முடிக்கப்பட்டிருக்கின்றது.

பட்டு வேட்டியில் வந்த பிரதமர் பொங்கல் அரிசியைப் போட்டதை கைதட்டி வரவேற்று மகிழ்ந்தனர் கனேடிய தமிழர்கள்.

உண்மையில் ஒரு நாட்டின் பிரதமர் அந்த நாட்டில் வாழும் சிறுபான்மை சமூகங்களின் பாரம்பரியங்களை மதித்து அதற்கு ஏற்வகையான ஆடையுடன் தமிழ் மரபுரிமை நிகழ்வில் கலந்து கொண்டது தமிழர்களுக்கு பெருமை தேடித் தரும் ஒரு விடயம் தான்.

ஆனால் பிரதமரை அழைத்து பொங்கல் விழா கொண்டாடி பெருமை கொண்டாடிய நாம், தமிழ் மரபு திங்கள் பெருமையை பறை சாற்றினோமா ?




பிரதமரே தமிழர்களின் பாரம்பரிய உடையில் கலந்து கொண்ட நிகழ்வில் நம்மவர்கள் எத்தனை பேர் பாரம்பரிய ஆடையுடன் கலந்து கொண்டார்கள் என்பதையும் எத்தனை பேர் தாங்கள் வரித்துக் கொண்ட மேற்கத்தேய நாகரீகத்தை களற்றிவிடாமல் கோட்டு சூட்டுடன் பிரதமருக்கு கைலாகு கொடுத்தார்கள் என்பதையும் நிகழ்வின் புகைப்படங்களை பாரத்து நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருடமும் தை மாதத்தில் கனடாவில் உள்ள ஆயிரத்திச் சொச்ச தமிழ் அமைப்புகளில் நூற்றிச் சொச்சம் அமைப்புகள் வெவ்வேறு பெயர்களில் மரபுரிமை தின நிகழ்வுகளை நடத்தி தங்கள் தமிழ் தாகத்தை தீர்த்துக் கொள்ளும்.

ஒன்றிரண்டு அமைப்புகைள தவிர்த்து ஏனைய பெரும்பாலான அமைப்புகளின் நிகழ்வுகளில் தமிழ் மரபுரிமைக்கான முக்கியத்துவம் மறக்கப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு அரசியல் நலன்களே முன்னிலைப் படுத்தப்படுவதை கவலையுடன் அவதானிக்க முடிகின்றது.

வருடா வருடம் இந்த அரசியல் பொங்கல் விழாக்கள் அதிகரித்துச் செல்வது கூடுதல் கவலை.

இந்த வருடம் ஒன்ராறியோவின் மாகாண சபைக்கான தேர்தலும் அடுத்த வருடம் கனேடிய பாராளுமன்றத்திற்கான தேர்தலும் நடைபெற இருப்பது அரசியல் பொங்கல்களின் எண்ணிக்கை அதிகரிப்பை கூட்டி நிற்கின்றது.

எமது விழாக்களுக்கு அரசியல் வாதிகளை அழைப்பது தவறென்பதல்ல வாதம் ஆனால் தமிழ் மரபுரிமைத் திங்கள் எதற்கானது என்பதை தெளிவு படுத்துவதற்கு நிகழ்வில் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை என்பது தான் பெரும் சோகம்.

புலம்பெயர்ந்த சமூகம் தனது இனத்தின் அடையாள இருப்பை தக்கவைப்பதற்கும் அடுத்த தலைமுறை தமிழ் மீதும் தமிழ் பாரம்பரியங்கள் மீதும் மரியாதை கொண்டு அதனை பின்பற்றுவதற்கும் ஏதுவான நிகழ்வுகளும் செயல்பாடுகளையும் தமிழ் மரபுத்திங்களில் நாங்கள் முன்னெடுக்க தவறுகின்றோம்.

எமது பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகளையும் எமது வரலாற்றை எடுத்துச் சொல்லும் படைப்புகளையும் மாற்றின சமூகததினரோடும் நிகழ்விற்கு வரும் அரசியல் தலைவர்களோடும் பகிரந்து கொள்ளாமல் நிகழ்வின் பெரும்பாலான நேரத்தை அரசியல்வாதிகளுக்கு ஒதுக்கிக் கொடுத்து விட்டு சில நடனங்களையும் பாடல்களையும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்களுக்கு நெருக்கமானவர்களை கொண்டு மேடையேற்றி விழாவை 'சிறப்பாக' நடத்தி முடிக்கின்றோம்.

அதில் பெரும் சோகம் தமிழ் மரபுரிமை நிகழ்வுகள் வருகை தரும் சிறப்பு விருந்தினர்களை திருப்திப் படுத்துவதற்காக முழுமையாக ஆங்கிலத்தில் நடத்தி முடிக்கப்டுவது தான்.

தங்கள் மொழி மீதும் பாராம்பரியம் மீதும் நம்பிக்கை கொள்ளாதவர்கள் எல்லாம் ஏன் மரபுரிமை மாதத்தை கொண்டாட முனைகின்றார்கள் என்ற கேள்வியே தவிர்க்க முடியாமல் எழுகின்றது.

எனினும் சில தமிழ் மரபுரிமை நிகழ்வுகளில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை தெளிவுபடுத்துவதற்கும் தமிழ் மக்களுக்கான நீதியை நோக்கிய பெரும் பயணத்திற்கான ஏற்பாடாகவும் சிறந்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டியது அவசியமானது.

தமிழ் மக்களின் உரிமைகளுக்கான குரலாக கனேடிய மண்ணிலும் சர்வதேச அரங்கிலும் இயங்கிக் கொண்டிருப்பவர்களை அழைத்து அவர்கள் ஊடாக தமிழ் மக்களின் அவலங்களையும் எமக்கான நீதி கிடைப்பதற்கான அவசியத்தையும் வெளிப்படுத்துவது ஆரோக்கியமான ஒரு விடயம் இதனை கனேடிய தலைநகரில் தமிழர்கள் சிறப்பாக கையாண்டிருந்தனர்.

இது போன்ற ஆரோக்கியமான விடயங்களுக்கு அரசியல் தலைவர்களை அழைத்து அவர்களுக்கு எமது மக்களின் பாரம்பரியங்களையும் நாம் வாழ்ந்த வாழ்வையும் இப்போது நாம் எதிர் கொள்ளும் சவால்களையும் எடுத்துக் கூறுவதை விடுத்து ஏட்டிக்கு போட்டியாக நிகழ்வுகளை நடத்துவதும் அங்கு வரும் அரசியல் தலைவர்களோடு படம் எடுத்து பிரபல்யம் தேட முற்படுவதும் கண்டனத்திற்குரியது.

உங்கள் அரசியல் அறுவடைக்காக தமிழ் மரபுரிமை நிகழ்வுகளை பயன்படுத்தாதீர்கள் நண்பர்களே.

உண்மையில் தமிழ் மொழி மீதும் அதன் பாராம்பரியங்கள் தொன்மைகள் மீதும் உங்களுக்கு அளவிட முடியாத ஈடுபாடும் மதிப்பும் இருந்தால் அதனை வெளிப்படுத்தும் விதமான நிகழ்வுகளை ஏற்பாடு செய்யுங்கள்.

எது அடுத்த தலைமுறையிடம் தமிழ் மொழியினையும் அதன் பாராம்பரியங்களையும் எமது மரபுகளையும் எடுத்துச் செல்வதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லுங்கள்.

உங்களது போட்டியாளர் மரபுரிமைத் திங்கள் கொண்டாடு கின்றார் அதனால் நாங்களும் கொண்டாடியே தீரவேண்டும் என்பதற்காக தமிழ் மரபுரிமை நிகழ்வுகளை கொண்டாடி உங்கள் சுயநல அரசியல் வியாபாரத்தை முன்னெடுப்பதை தவிர்த்து விடுங்கள்.

குடும்பத்தை முன்னிலைப்படுத்தி தமிழ் மரபுரிமைத் திங்களை சிலர் கொண்டாடுவதாகவும் தமது அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி தமது குடும்ப உறுப்பினர்கள் தலைமையில் புதிய அமைப்புகளை உருவாக்குவதாகவும் தமது உறவினர்களை நிகழ்ச்சிகளை நடத்த அனுமதிப்பதாகவும் ஒரு சாரார் கூக்குரலிடுகின்றனர். ஆனால் அவ்வாறு கூக்குரல் இடுபவர்கள் தமது எதிர்கால அரசியல் நலன்களை முன்னிலைப்படுத்தி அரசியல் வாதிகளை அழைத்து தமது பொங்கல் விழாவை கொண்டாடி மகிழ்கின்றனர். இது போன்ற முரண்களை யாரிடம் போய் கூறுவது.

இந்த மரபுரிமை நிகழ்வுகளை ஒருங்கிணைப்பதற்காக சில அமைப்புகள் சேர்ந்து ஒரு பொது அமைப்பை உருவாக்கியதாகவும் அரசல் புரசலாக தகவல்கள்

**உங்களது போட்டியாளர் மரபுரிமைத் திங்கள் கொண்டாடு கின்றார் அதனால் நாங்களும் கொண்டாடியே தீரவேண்டும் என்பதற்காக தமிழ் மரபுரிமை நிகழ்வுகளை கொண்டாடி உங்கள் சுயநல அரசியல் வியாபாரத்தை முன்னெடுப்பதை தவிர்த்து விடுங்கள்.**

வெளியாகியிருந்தன.

அந்த அமைப்பு என்னவாகியது என்பது பற்றியோ அல்லது அதற்கு என்னவானது என்பது பற்றியோ விசாரணை நடத்தப்பட வேண்டும்.

தமிழ் மீது தீராக்காதல் கொண்டு தமிழ் மரபுரிமைத் திங்களை உங்கள் தலைமையில் கொண்டாட வேண்டும் என்று அடம் பிடிக்குமு; அடங்காத் தமிழர்களே

நாளைய எம் தலைவர்களே நீங்கள் கொண்டாடமல் விடுவதால் தமிழ் நாளைக்கே தற்கொலை செய்துக் கொள்ளாது என்பதை நீங்கள் நினவில் கொள்வது நல்லது.

தமிழ் மரபுரிமை நிகழ்வுகளை அதன் பிரதான நோக்கங்களை அடைவதற்கான மூலமாக பயன்படுத்த முன்வாருங்கள் என்பதே இந்த கட்டுரை மூலம் நாம்; இறைஞ்சிக் கேட்டுக் கொள்ளும் விடயம்.

உங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்துவதற்காக கனேடிய மண்ணில் எமக்கு கிடைத்துள்ள இந்த உன்னதமான வாய்ப்பினை உதாசீனம் செய்து விடாதீர்கள். மறுபுறம் தமிழ் மரபுரிமைத் திங்களின் குறிக்கோளை அடைவதற்கான முயற்சியில் தனித்துவத்தோடு சிறப்பான முறையில் பயணிப்பவர்களால் முன்னெடுக்கப்டும் தமிழ் மரபுரிமை நிகழ்வுகளை இது போன்ற போலி; நிகழ்வுகள் வீரியமிளக்கச் செய்துவிடும் என்பதால் தமிழ் மரபுரிமை நிகழ்வுகளை தவிர்த்து விட்டு நீங்கள் வேறு ஏதாவது விழாக்களை கொண்டாடி மகிழுழுங்கள். பாவம் தமிழ் அதனை விட்டு விடுங்கள்.

தமிழ் இனி மெல்லச் சாகாது ... உங்கள் கைகளில் சிக்கி சின்னாபின்னமாகி சாவதை விட தமிழ் உடனடியாகவே தற்கொலை செய்யும் அபாயம் இருப்தையும் உணருங்கள்.

**ரமணன் சந்திரசேகரமூர்த்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை 'பைலா' இசையை இந்தியத் திரைத்துறைக்கு எடுத்துச்சென்ற ஏ.ஈ.மனோகரன்

"சுராங்கனி" என்ற பைலா பாடலுக்கு நாற்பது வயதுக்கு மேலிருக்கும். ஆனால், அந்தப் பாடலை எங்கே கேட்டாலும் நான்கு நாட்களுக்கு முன் பிறந்த குழந்தை கூடத் தொட்டிலில் இருந்து பைலா ஆட்டம் ஆடும். அந்த அளவுக்குப் பெரும் புகழ்பெற்ற இந்தப் பாட்டுக்குச் சொந்தக்காரர் பொப்பிசைச் சக்கரவர்த்தி ஏ.ஈ.மனோகரன் .

ஈழத்துக் கலைஞர்களில், ஏ.ஈ.மனோகரன் போன்று ஈழத்தமிழ் ரசிக எல்லையைக் கடந்து சிங்கள ரசிகர்கள், அவர்களைத் தாண்டி இந்திய ரசிகர்கள் என்று லட்சோப லட்சம் ரசிக உள்ளங்களைச் சம்பாதித்தவர் வேறு யாருமிலர். இன்னமும் சிங்கப்பூர், மலேசியா கடந்து அங்குள்ள பூர்வீகத் தமிழர்களிலிருந்து புலம் பெயர் தமிழர் வரை ஆட்கொண்டார்.

"சின்னமாமியே உன் சின்ன மகள் எங்கே ..." என்ற புகழ்பெற்ற பொப்பிசைப் பிதா நித்தி கனகரட்ணம் ஒரு பக்கம், இன்னொரு பக்கம் பொப்பிசைச் சக்கரவர்த்தி ஏ.ஈ.மனோகரன் என்று ஈழத்துத் துள்ளிசை வரலாறு எழுபதுகளிலே வெகு செழிப்போடு விளங்கியது. அந்தக் கால கட்டத்தில் அமுதன் அண்ணாமலை, எம்.பி.பரமேஷ் (உனக்குத் தெரியுமா நான் உன்னை அழைத்தது) என்று இன்னும் ஏராளம் தனித்துவம் மிக்க ஈழத்துப் பாடகர்கள்

தென்னிந்தியத் திரையிசை மரபை மீறி அவற்றைப் பிரதிபண்ணாத தனித்துவம் மிக்க ஈழத்துப் பாடல்களை ரசிகர்கள் அடையாளம் கொண்டு அரவணைத்தது எங்கள் ஜனரஞ்சக இசை மரபின் பொற்காலம் எனலாம்.

தான் உலக இசை மேடைகளில் பவனி வந்த போதெல்லாம் துடிப்போடு பாடி, ஆடி ரசிகர்களையும் ஆட வைத்து அவர்களை உற்சாக வெள்ளத்தில் மிதக்க வைக்கும் கலையைக் கற்றவர் ஏ.ஈ.மனோகரன். தன்னுடைய வாழ்க்கை இதற்கே எழுதப்பட்டது என்று முழு அர்ப்பணிப்புடன் பாட்டு, நடிப்பு இவற்றில் தீவிரமாக இயங்கியவர்.

"சுராங்கனி மனோகரன்" என்ற அடைமொழியோடு தமிழகமெங்கும் இவர் பெயர் பிரபலமாயிற்று.

"சுராங்கனி" பாட்டு கல்லூரிக் காளையருக்குக் கொண்டாட்டப் பாட்டு என்றால் இதுதான். ஒரே பாடலைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் களியாட்டம் போடும் மரபில் இதுவும் சேர்ந்து கொண்டது.

இந்தப் பாடல் கொடுத்த புகழ் காய்ச்சலை அப்போதைய திரையுலகம் பயன்படுத்தியது.

தமிழகத்தின் பிரபல இசையமைப் பாளர் இளையராஜாவின் இசையில் "அவர் எனக்கே சொந்தம்" படத்தில் "சுராங்கனி" பாடல் மீளவும் மலேசியா வாசுதேவன், ரேணுகா குழுவினரால் பாடப்பட்டுப் பயன்படுத்தப் பட்டதிலிருந்து இந்தப் பாடலின் புகழ் வெளிச்சம் தெரியும். இலங்கையின் இசையை வெளியில் இருந்து பார்க்கும் யாருமே "சுராங்கனி"யைக் கடந்து போவதில்லை.

நாற்பது வருடங்களுக்குப் பின்னர் விவெல் சோப் என்ற பிரபல நிறுவனத்தின் விளம்பரத்தில் கூட இடம்பிடித்த மங்காப் புகழ் கொண்டது. இன்னமும் வெவ்வேறு இந்திய மொழிகளில் பிரதி பண்ணப்பட்டும் வந்தது. பந்தயம் என்ற படத்தில் சுரேஷ் ஆண்டனியால் மீள் கலவை இசையோடு மீண்டும் வந்தது. சுராங்கனி பற்றி இவ்வளவும் சொல்லக் காரணமே இது ஒன்றே போதும் அவர் புகழ் கூற. ஆனால் ஏ.ஈ.மனோகரன் என்ற அற்புதமான பாடகரைத் தமிழ்த் திரையுலகம் அதிகம் பயன்படுத்தத் தவறியது.

Maruwa Samage Wase என்ற சிங்களப் படத்தில் "சுராங்கனி" பாடலோடே நடித்தார்.

இலங்கை இந்தியக் கூட்டுத் தயாரிப்பான "பைலட் பிரேம்நாத்" இல் எல்.ஆர்.ஈஸ்வரியுடன் "கோப்பித் தோட்ட முதலாளிக்குக் கொழும்பில தானே கல்யாணம்" பாட்டு திரையிசையிலும் இவரது முத்திரையைக் காட்டும்.

தமிழ், சிங்களத்தைக் கலந்து கட்டிப் பாடிய இவரது பாடல்களால் இரு மொழிக்காரர்களையும் ஒரு சேரக் கவர்ந்தவர். குறிப்பாக "ஹாய் கூய் மீனாட்சி எலிகள் பட்டாளம்" பாடலில் இந்த மொழிக் கலப்பை வெகு இயல்பாகப் பயன்படுத்தி ரசிக்க வைத்தார். அது போல் "சிக்கன் இல்லாது சோறு சாப்பிட (ரஸ்புடீன்)" இல் ஆங்கில மொழிக் கலவை இருந்தாலும் அதைக் கவர்ச்சிகரமாக உச்சரித்து இவர் பாடும் அழகே தனி.

"இலங்கை என்பது நம் தாய்த்திரு நாடு" இன்னொரு புகழ் பூத்த பாட்டு. நல்லூர்க் கந்தனுக்காகப் பொப்பிசைப் பாட்டு "மால் மருகா எழில் வேல் முருகா", மரியன்னைக்காக "மாதாவே சரணம்" போன்ற பக்தி கீதங்களிலும் இனித்தார்.

"கள்ளுக்கடைப் பக்கம் போகாதே" என்று நித்தி கனகரட்ணம் கிராமத்தானைக் கெஞ்ச, மனோகரனோ "பிரண்டி பியர் விஸ்கி போடாதே" என்று நகரத்தானுக்குப் புத்தி சொன்னார் பாட்டில்.

"அன்பு மச்சாளே எந்தன் ஆசை மச்சாளே", "சில சில பாவையர்", "பறந்து வந்து பாடுகிறேன்" ஆகிய பாடல்களும் மறக்க முடியாதவை.

நித்தி கனகரட்ணம் பாடிய "சின்ன மாமியே" மெட்டைத் தழுவி "பட்டு மாமியே" பாடலைப் பிற்காலத்தில் பாடியிருக்கிறார்.

புகழ் பூத்த சிங்களப் பாடகர் எம்.எஸ்.பெர்னாண்டோ பாடிய "கிக்கிரி பலன" பாடலை மீளவும் ஏ.ஈ.மனோகரனும் பாடியிருக்கிறார். பின்னாளில் ஏ.ஈ.மனோகரனுடன் இசைப் பணியில் இணைந்த விஜய காண்டீபன் இந்தப் பாடலைக் "காவலுக்குக் கண்ணில்லை" என்ற ஆனந்த்பாபு நடித்த தென்னிந்தியத் திரைப்படத்துக்குப் பயன்படுத்தினார்.

"பொன் வண்டு" என்று லண்டனில் வெளியிட்ட இசைத்தட்டில் இவர் பாடிய "வா வா பொண்ணோ நான் வெள்ளி ரூபா தாறேன்" பாடலே மூலாதாரம் ஆனது தேவி ஸ்ரீ பிரசாத் இசையில் வில்லு படத்தில் இடம்பெற்ற "வாடா மாப்பிள்ளை வாழைப் பழத் தோப்பில" பாட்டு.

ஈழத்துத்தமிழ்த்திரைப்படங்களிலும் தென்னிந்தியத் திரைப்படங்களிலும், சின்னத்திரை நாடகங்களிலும் இவரின் கலைப்பயணம் விரிந்தது. ஜனாதிபதி விருது பெற்ற ஈழத்தின் மிக முக்கியமான திரைப்படம் "வாடைக்காற்று" படத்தில் செமியோன் என்ற முக்கிய பாத்திரமேற்று நடித்திருக்கிறார்.

பாச நிலா இவரது முதல் திரைப் படைப்பாகும்.

யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவராக இருந்த போது இவர் நாயகனாக நடித்து அப்படம் 1963 இல் வெளி வந்தது. அது போல இந்தியத் திரைப்படங்களில் "சிலோன் மனோகர்" ஆகத் தெலுங்கில் "டூஃபான் மெயில்" தொடங்கி மாங்குடி மைனர், தீ, பைலட் பிரேம்நாத்,

மனிதரில் இத்தனை நிறங்களா, ஜே ஜே உட்பட்ட தமிழ்த் திரைப்படங்களோடு ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளில் 250 க்கும் மேற்பட்ட படங்களில் நடித்திருக்கிறார். இருப்பினும் வில்லன், அடியாள் போன்ற சிறு சிறு பாத்திரங்களே கிட்டியது அவரின் திறமைக்குச் சோளப் பொரி தானும் இல்லை எனலாம்.

சின்னத்திரைத் தொடர்களில் அஞ்சலி, சாவித்திரி ஆகியவற்றில் ஈழத் தமிழ் பேசி நடித்தார். அத்திப் பூக்கள், திருமதி செல்வம் என்று தொடர்ந்த சின்னத் திரை வாழ்க்கையே பின்னாளில் அதிகம் இவரை ஆட்கொண்டது.

ஈழத்துப் பாடகர், நடிகர் அதே அடையாளத்தோடே இந்தியாவிலும் புகழ் பெற்றுத் துலங்க முடியும் என்ற வகையில் ஏ.ஈ.மனோகரன் ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். ஆனால் அவரின் திறமையோடு ஒப்பிடும் போது அவருக்கான வாசல் அகலத் திறந்து விடப்படவில்லை என்ற ஆதங்கத்தையும் அவர் பிரிவில் நினைத்துப் பார்க்க வேண்டும்.

தென்னிந்தியத் திரையிசையின் துள்ளிசைப் பாடல் குத்துப் பாடல் என்றால் ஆபாசம் கலக்காது காண்பதரிது. ஆனால் முகம் சுழிக்காது கொண்டாடக் கூடிய பாடல்களை வழங்கிய ஈழத்துப் பொப்பிசைப் பாடல் மரபில் ஏ.ஈ.மனோகரன் பங்கு அளப்பரியது, தனித்துவமானது. அவரை விலக்கிவைத்துவிட்டு ஈழத்து ஜனரஞ்சக இசை வரலாற்றை எழுத முடியாது. ஆன்மிகம், தத்துவம், போதனை, காதல், தாய் நிலம் என்று எல்லாமுமாக அந்தப் பாடல்களில் காட்டிச் சென்றார். ஏ.ஈ.மனோகரனின் இழப்பு ஈழத்து மெல்லிசை உலகுக்குப் பேரிழப்பே.

**கானா பிரபா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு பெண்ணின் கதை!

**நாம் யாவரும் சுதந்திரமாகவும் சந்தோஷமாகவும் வாழ முடியும் என்பது எனது நம்பிக்கை. சரித்திரம் படைப்போம். பெண்ணாக துணிந்து நிற்போம். சமுதாயத்துக்கு விழிப்புணர்வு ஊட்டுவோம்.**

யாழ். மண்ணில் பெண்ணாக பிறந்ததால் ஆண் இன்றி பெண் இல்லை என்ற மூடநம்பிக்கையில் வாழ்ந்தேன். ஆணின் துனையின்றி என்னால் வாழ முடியாது என்பது எனது ஆழ் மனப் பயமாக இருந்தது. என் அப்பா, என் கணவன், என் மகன் என்னை பார்ப்பார்கள் என்பது எனது கற்பனையாக இருந்ததால் நான் யார் என்று தெரியாது வாழ்ந்தேன். தெரிந்துகொள்ளவும் முற்படவில்லை. ஏனெனில், அவர்களைப் பின் தொடர்வதை எனது கடமையாக உணர்ந்தேன். பெண் என்பவள் ஒரு ஆணை திருப்திபடுத்த பிறந்தவள் என்று நம்பியதால் ஆணின் அடிமையாக நான் என்னைப் பார்த்தேன்.

மருத்துவ பட்டம் பெற ரஷ்யா சென்று பெண்களின் சுதந்திரதத்தைப் பார்த்த போதும் நான் என்னை இயலாதவள் என்ற சிறைக்குள் அடைத்து வைத்தேன். டாக்டர் பட்டம் பெற்றாலும் கணவனுக்கு தொண்டு செய்தல் எனது ஆயுள் கடமை என்பது எனது புராணமாக இருந்தது. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் திருமண பந்தத்தில் இணைந்தேன்.

திருமணம் என்ற கனவு சிதைந்தாலும் கணவன் கண் கண்ட தெய்வம் என்பது என் நம்பிக்கை. திருமணம் என்ற ஆயிரம் காலத்து பயிரை பராமரிப்பதற்காக அவரது துன்புறுத்தல்களை ஏற்றுக்கொண்டேன். ஒரு டாக்டராக இருந்தபோதும் என் கணவர் சொல்லை மந்திரமாக மதித்து அவர் சொற்படி வாழ்ந்தேன். நான் சுயமாக சிந்திக்கும் ஆற்றலை இழந்து ஒரு ஜடப் பொருளாக மாறினேன். அவர் சொல்வதற்கெல்லாம் ஆமா போட்டு பேச்சற்றவளாக மாறினேன்.

கனடா நாட்டிலே குடும்ப வன்முறை ஒரு குற்ற செயல். எனது கணவன் தண்டனைக்குரிய குற்றம் செய்கிறார் என்பதை நான் ஏற்க மறுத்தேன். கணவனுக்கு மனைவியை தண்டிக்க உரிமை உண்டு என்பது எனது கருத்து. ஒவ்வொரு தடவையும் என் கணவர் வன்முறை செய்யும்போதும் நான்தான் பிழை என குற்ற உணர்வுடன் இருந்தேன். ஆண் பிழை விடமாட்டான், ஏனென்றால் ஆவதும் பெண்ணால் மனிதன் அழிவதும் பெண்ணால் என்பது என் வைராக்கியம். ஆகவே, எனது கணவன் மீது பிழை இல்லை என்றே நான் வாதாடினேன்.

திடீரென்று ஒரு நாள் வயிற்றில் உதை, மூன்று நாட்கள் வயிற்று நோ. அன்று கூட நான் என்னை மறந்து என் கருவில் உருவாகாத என் குழந்தை கஷ்டப்படக்கூடாது என்று நான் என் கணவர் பிழை என்பதை ஒத்துக்கொண்டேன். கணவரைப் பிரிவது பிழை என்ற என் கலாச்சார சமய நம்பிக்கையை நானும் பின்பற்றினேன். கனடா நாட்டு சட்டம் என் கணவரை தண்டித்தது. ஆனால், குற்றவாளியாக என்னைக் கருதினேன். கணவன் மனைவி இடையான பிரச்சினை இரசியமாக பேணப்பட்டு அவர் கையால் மரணத்தை தழுவுவது ஒரு சிறப்பான காரியம் என நான் கருதினேன். ஆனால் அவரை பிரிய பெண்கள் பாதுகாப்புக்கான அந்நாட்டு சட்டம் காரணமாக இருந்தது.

விவாகரத்து என்பது மிகவும் வேதனை தரும் விடயம். கனவுகள் அழிந்துவிட்டன என்று கூறும் பத்திரம். திருமணத்தன்று யாவரும் கூடி எதிர்பார்ப்போடும் நம்பிக்கையுடனும் புதுவாழ்வு ஆரம்பமாகும். ஆனால், விவாகரத்து அன்று வாழாவெட்டி என்ற பட்டத்துடன் புறக்கணிக்கபட்ட தனி வாழ்வு ஆரம்பமாகும். சமுதாயம் குற்றம் கண்டுபிடிக்க ஆரம்பித்தது. நீ ஒழுங்காக சமைக்கவில்லை, நீ அனுசரித்து போயிருந்தால் அவன் ஒழுங்காக இருந்திருப்பான் என்ற ஆயிரம் விமர்சனங்கள். விசேட நாட்களுக்குரிய வரவேற்பு மறுக்கப்பட்டன. உறவுகள் உறவு கொள்ள மறுத்தனர். சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவளாக விவாகரத்து பெற்ற நான் இருந்தேன்.

திருமணம் முடித்த காரணத்தால் கற்பை இழந்த எனது தாம்பத்திய வாழ்வை பற்றி அறிய முற்பட்டோர் பலர். திருமண பந்தத்தில் இருந்தவள் ஆணுறவு இன்றி வாழமுடியாது என சவால் விட்டோர் சிலர். எதிர்காலம் உனக்கு இல்லை என சபதம் இட்டோர் சிலர். பாவப்பட்ட ஜென்மமாக சித்தரித்தோர் பலர். என் தந்தை தனக்கு மகள் இல்லை என்று உறவை அறுத்தார். எப்போ உறவுகள் என்னை மறுத்தார்களோ அன்று நான் வாழவேண்டும் என்ற ஆசையுடன் புதுப் பிறவி எடுத்தேன்.

விவாகரத்து பெற்றவள் என்ற தாழ்வு மனப்பான்மை என்னைக் கொலை செய்தது. தனிமை என்னை வதைத்தது. மறு திருமணம் முடிப்பதற்காக இன்ரனெட் ஊடாக டேடிங் பண்ணினேன். ஆண்கள் கண்களில் பல தடவை பாலியல் இயந்திரமாக பார்க்கப்பட்டேன். ஆண்களை தோல்வியுடன் சந்தித்தேன். கடந்த காலத்தை மறக்க பார் சென்றேன். ஆனால், பாரில் என் வேதனையை விட்டு வர முடியவில்லை.

ஒரு புறம் ஏமாற்றமடைந்த திருமண வாழ்க்கை குறித்த விரக்தி, மறுபுறம் தனிமையின் வேதனை, இன்னொரு புறம் எதிர்காலத்தை குறித்த பயம், மறுபுறம் சமுதாய குற்றச்சாட்டுகள், எனது குற்ற உணர்வு, சமுதாயத்தை சந்திக்க தயக்கம், கேலிப் பேச்சுக்களால் அவமானம். இவை யாவற்றையும் எதிர்கொள்வது குடும்ப வன்முறையிலும் கொடுமையாக இருந்தது.

சமுதாயம் விவாகரத்து பெற்ற பெண்ணை ஒரு ஆணுடன் பார்க்கும்போது நடத்தை கெட்டவளாகப் பார்த்தது. தனியாக வாழ முயற்சித்தவுடன் பலர் அடக்கி ஆள முற்பட்டனர். பெண் என்பவள் ஒரு உடமை. ஆகவே, அதைப் பேணி பாதுகாக்கணும் என்ற நோக்கத்துடன் உரிமை கொண்டாட முற்பட்டனர். பெண்ணாக சுதந்திர வாழ்வை வாழ்வது சவாலாக இருந்தது.

தாயாகி சமுதாயத்தை எதிர்கொள்ள முடிவு செய்தேன். ஒரு குழந்தைக்குத் தாயாவதன் மூலம் சமுதாய அங்கீகாரம் பெற முற்பட்டேன். குழந்தைக்குத் தாயாகும் போராட்டத்தில் வெற்றி பெற்ற செய்தி காதில் கேட்க முதல் நான் மீண்டும் தோல்வியடைந்துவிட்டேன். மீண்டும் வெட்கம். பயம், அவமானம், என்னைக் கொலை செய்தன. சமுதாய ஒதுக்கு முறைக்கு பயந்து ஓடினேன்.

விவாகரத்து பெற்ற பெண்கள் குழுவில் இணைந்தேன். தேடிக் கண்டுபிடித்தனர் புது நண்பர்கள். ஏற்றுகொண்டனர். என் குறைகளுக்குப் பதிலாக நிறைகளை கண்டு மகிழ்ந்தனர். குற்றவாளிக் கூண்டில் நிற்கவேண்டிய என்னை இராணி போல் பராமரித்தனர். ஆலோசனை மூலமும் தியானம் மூலமும் கடந்த காலத்துடன் சமாதானம் பண்ணினேன். என்னை நான் காதலிக்க ஆரம்பித்தேன். எனது உயிர் நண்பியாக நான் மாறினேன். இன்று நான் மீண்டும் சொந்தக் காலில்.

நான் எனது சொந்த அனுபவங்களை பகிருவதால் எனக்குள் மாற்றத்தையும் மற்றவர்களுக்கு நம்பிக்கையும் அளிக்கிறேன். எனது எழுத்து வடிவிலான உருவாக்கங்கள் புதுமையை உருவாக்குகிறது. தினமும் என் வாழ்க்கைப் பயணத்தை உருவாக்குதிலும் அதனைத் திட்டமிடுவதிலும் கவனம் செலுத்துகிறேன். இன்று என் சிந்னைகளிலும் நம்பிக்கைகளிலும் மாற்றம் ஏற்பட்ட காரணத்தால் விவாகரத்து சாதாரண விடயமாகிவிட்டது. அது குறித்த வெட்கமோ கவலையோ இல்லை. இன்று என் விவாகரத்து ஒரு வரலாறு. அந்த வரலாற்றை பெருமையுடன் சொந்தம் கொண்டாடுகிறேன்.

எமது சமுதாயத்தில் குடும்பம் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. பெண்ணுக்கு அவளது மரியாதை மனைவியாகும் போதும், தாய் ஆகும் போதும் கிடைக்கிறது. தனி பெண்ணாக அந்த மரியாதையை சம்பாதித்தது எனக்கு பெரும் பாக்கியம். நான் எனக்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது நான் முக்கியமாவேன், நான் என்னை ஒதுக்கினால் நான் ஒதுக்கப்பட்டு விடுவேன், எனது வாழ்வை நிர்ணயிப்பவள் நான் தான் என்பதில் மாற்று கருத்து இல்லை. ஒரு பெண் முழுமையாக தன்னை ஏற்றுகொண்டு சுயமாக வாழும்போது அவள் மகிழ்ச்சியான வாழ்வை வாழ்வாள் என்பதற்கு நான் ஒரு முன் உதாரணம்.

சிறகுகள் ஒடிக்கப்பட்டு வாழ்ந்த நான் இன்று ஒரு சுதந்திர பறவை. நாம் யாவரும் சுதந்திரமாகவும் சந்தோஷமாகவும் வாழ முடியும் என்பது எனது நம்பிக்கை. சரித்திரம் படைப்போம். பெண்ணாக துணிந்து நிற்போம். சமுதாயத்துக்கு விழிப்புணர்வு ஊட்டுவோம்.

டாக்டர் மௌரீன் எர்னஸ்ட்

நன்றி: @Bakamoonolk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2009ல்** பிரபாகரன் இறந்த போது, விம்மி, விம்மி அழுத கவிஞர் செழியன் இன்று எங்களுடன் இல்லை. ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் உடன் இணைந்து தனது போராட்ட வாழ்வை ஆரம்பித்து அதன் மத்திய குழு உறுப்பினராகவும் செயற்பட்டிருந்தார். புலம் பெயர்ந்த பின்னர் தமிழர் வகை துறை வள நிலையம் (தேடகம்) ஆரம்பிப்பதில் முன்நின்றார். தமிழ்த் தேசியத்தின் மீது அளப்பரிய பற்றுக் கொண்ட இவர் ,ஒரு சிறந்த கவிஞருமாவர் மனவெளி அவைக் காற்றுக் குழுவின் அரங்கில், இவரது நாடகங்கள் பல மேடையேற்றப்பட்டுள்ளன. பெருங்கதையாடல் இவரது சிறந்த நாடகங்களில் ஒன்று. இறுதி வரை தனது சொந்த வாழ்வை விட, தமிழ்த் தேசியத்துக்கு உழைத்தார். வழமை போல் போராளிகளுக்கு உள்ள ஒரு குறை இவருக்கும் இருந்தது. தனது உடலின் மேல் கவனம் செலுத்தாமை. அதுவே அவரது வாழ்வையும், அவரையும் எம்மிடமிருந்து பறித்துவிட்டது.

முகநூலில் அவரது வாழ்வு பற்றி பகிர்ந்த சில பதிவுகள்



# சமூகப் போராளி செழியன் காலமாகிவிட்டார்.

### எழுத்தாளர் வ.ந. கிரிதரனின் பதிவு

போர்ச்சுவாலை அமரச்சுடராகியது: கவிஞர் செழியன் மறைவு!

ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த எழுத்தாளர் 'கவிஞர் செழியன்' அமரராகிய செய்தி துயர் தருவது. மானுட வாழ்வில் இத்தகைய இழப்புகள் தவிர்க்க முடியாதவையெனினும் , ஏற்படுகையில் தரும் துயர் தவிர்க்க முடியாதது. சமூகப் பிரக்ஞை மிக்க படைப்பாளியான கவிஞர் செழியனின் பலவகை எழுத்துகளும் அவரது ஆளுமையினை வெளிப்படுத்துபவை. நாடகம், கதை, கவிதை, கட்டுரையெனப் பன்முகப்பட்ட இலக்கியப்பங்களிப்பை வழங்கிய எழுத்துகள் அவை.

அவர் தான் வாழ்ந்த மானுட வாழ்வில் வழங்கிய மானுடப்பங்களிப்புகளினூடு நிலைத்து வாழ்வார். இத்தருணத்தில் அவரது இழப்பால் துயருறும் உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தோழர்கள் அனைவருக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செழியனின் 'ஒரு போராளியின் நாட்குறிப்பிலிருந்து..' (வானத்தைப் பிளந்த கதை)

'விமானம் ஓடு பாதையில் ஓடத்தொடங்கியது. வேகமாக .. ஓடி.. ஓடி..மெல்ல மெல்ல எழுந்து வானவெளியில் மிதந்தது. மலைகளே! கற்களே! மேகக் கூட்டங்களே! என் இனிய தேசமே... சென்று வருகிறேன். கண்ணீர் நிறைந்து வழிந்தது. சென்று வருகிறேன். என் ஜென்ம பூமியே! இங்குதான் பிறந்தேன். இங்குதான் வளர்ந்தேன். இப்போ பிரிய நேர்ந்ததே. வயல்களும், காடுகளும், மலைகளும் நிறைந்தன என் தேசம். தந்தையர் வாழ்ந்த தாய்த்திருநாடு. தந்தையும்,தாயும் கூடிக் குலாவி வாழ்ந்த பொன்னாடு. விமானம் உயர உயரப் பறந்தது. என் தேசத்தில் இருந்து வந்த ஒளிக்கீற்றுகள் கண்சிமிட்டி விடை தருவதுபோல இருந்தது. இனிய தேசமே மறுபடியும் நான் வருவேன். மனிதன் எனும் இனம் எழுந்து வரும் நாளில் மறுபடி நான் வருவேன். ஒருவேளை என் முற்றாத கன்வுகளோடு முதிர்ந்த வயதில் ஏதோ ஒரு நாட்டில் ஒரு அகதியாய் அநாதைப் பிணமாய் பனிக்கட்டிகளுக்கு நடுவிலோ, இயந்திரங்களுக்கு அடியிலோ மரணித்துப் போகலாம். காற்றே, மரம், செடி, கொடிகளே என் தலைமுறை மறுபடி இங்குதான் வேர்விட்டு, இருதளிர்கரம் நீட்டி வளரும். என்புதல்வர்கள், அல்லது போனால் என் பேரர்களில் ஒருவர் வருவார்கள். இத்தாய்த் திருநாட்டை முத்தமிட வருவார்கள். இனிய தேசமே தெரிந்தோ தெரியாமலோ நான் ஏதும் தவறு செய்திருந்தால் தங்கள் கண்ணிரால் என் பாவங்களை இவர்கள் கழுவுவார்கள். தேசமே என்தலை முறையையாவது இங்கு வாழவிடு. விமானம் மேகக் கூட்டத்தினுள் புகுந்து தொலைந்து போனது.'

எழுத்தாளர் 'கவிஞர் செழியன்' இலங்கைத்தமிழ் இலக்கியத்துக்குக் குறிப்பாகப் புலம்பெயர் தமிழ் இலக்கியத்துக்கு, கனடாத் தமிழ் இலக்கியத்துக்கு ,புகலிடத்தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்த்த படைப்பாளி. 'ஒரு போராளியின் நாட் குறிப்பு', 'வானத்தைப் பிளந்த கதை, 'குழந்தைகளிடம் பொய்களைக் கூறாதீர்கள் (கவிதைத்தொகுப்பு), 'ஆளற்ற தனித்த தீவுகளில் நிலவு, ஈரமற்ற மழை' (கவிதைத்தொகுப்பு) , 'அதிகாலையைத்தேடி (கவிதைத்தொகுப்பு) ஆகிய நூல்களின் ஆசிரியர். இவரது கவிதைகளின் மொழி என்னை மிகவும் கவர்ந்தது. சொற்களைத் தேர்ந்தெடுத்து இவர் செதுக்கும் கவிச்சிற்பங்களின் அழகில் நான் எப்பொழுதும் மனதைப்பறிகொடுப்பவன். போராட்டங்கள் நிறைந்த வாழ்க்கையின் வடுக்களைத்தாங்கிய இவரது எழுத்துகள் இலக்கியச்சிறப்பு மிக்கவை; முக்கிய ஆவணங்களும் கூட. ஈழத்தமிழர்தம் விடுதலைப்போராட்ட அமைப்புகளிடையே வெடித்த முரண்கள் பகை முரண்பாடுகளாகிய நிலையில் அவற்றிலிருந்து தப்பிய தனது அனுபவங்களை 'ஒரு போராளியின் நாட் குறிப்பு' என்னும் 'தாயகம்' பத்திரிகைத் தொடரில் ஆவணப்படுத்தியவர்.

தனது 'குழந்தைகளிடம் பொய்களைக் கூறாதீர்கள்' என்னும் கவிதைத்தொகுப்பின் முன்னுரைக்குறிப்பில் பின்வருமாறு எழுதினார்:

'மூங்கில்களை முறித்து எழுகின்ற துயரத்தின் குரல் பதினாறு திசைகளிலும் பரவுகின்றது. சோற்றுப் பானைக்குள் இருக்கும் பருக்கையை எண்ணுவதற்குள் குழந்தை செத்துக் கிடக்கின்றது. இரவையும் பகலையும் திருடிக் கொண்டு போய் விட்டார்கள். காற்று இடம் பெயர்கின்றது,பிண வாசனையை சுமந்து கொண்டு. சமயத்தில் மனிதர்களையும் தூக்கிக் கொண்டு. வாழ்க்கையை பனை மரத்தின் அடியிலும், வயல் வரம்புகளுக்குள்ளும் தொலைத்து விட்டு வந்து பனிப்புலங்களுக்கடியிலும் இயந்திரங்களுக்கிடையிலும் தேடியவர்களும் களைத்துப் போனார்கள். ஈரக் காற்றில் குளிர்ந்து இப்போதும் துடித்துக் கொண்டிருக்கின்றது நம்பிக்கை. கண்ணீரிலும், மூச்சிலும் கரைந்து பிரபஞ்சத்தின் முடிவிலி வரை எதிரொலிக்கின்றது. பூவரசம் காற்றைக் குடித்துக் கொண்டு, புழுதியைத் திரட்டிப் பூசிக் கொண்டு வாழ வேண்டுமென்ற ஆசை மனிதனாக வாழ வேண்டுமென்ற ஆசை மறுபடியும் மறுபடியும் கொழுந்து விட்டு எரிகின்றது. இறுதி மூச்சின் கடைசிச் சொட்டு காற்றிலும் இந்த நம்பிக்கை துடித்துக் கொண்டு தான் இருக்கும். அன்புடன் செழியன்'

### ஓவியர், நாடகர், ஈழ-புலம் பெயர் சினிமா செயற்பாட்டாளர் கிருஸ்ணராஜா

எங்களின் அன்புக்கும் நேசத்திகும் உரிய தோழன்,

மக்கள் விடிவிற்காய்ப் போராடிய உண்மையான போராளி, கவிஞன், எழுத்தாளன், விமர்சகன், நாடகாசிரியன், பாடகன்.........

எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றுவிட்டான்.

### எழுத்தாளர் சோபா சக்தி

மரணத்தைக் கண்டு நாம் அஞ்சவில்லை

ஒரு அனாதைப் பிணமாய் ஒரு அடிமையாய் புதிய எஜமானர்களுக்காக தெருக்களில் மரணிப்பதை

நாம் வெறுக்கிறோம்!

இந்த வரிகளை இன்று பலதடவைகள் படித்துவிட்டேன். இதை எழுதும்போது செழியனுக்கு 20 வயது இருக்குமா..மகிழ்ச்சிக்காய் இறந்து போய்விட்ட எங்கள் தோழர்கள் மத்தியில் அமையும்

என் சமாதியில் அழுகையின் ஒலி கேட்கவே கூடாது என்றெழுதும்போது செழியனுக்கு 22 வயதிருக்குமா..

பெர்லின் விமான நிலையத்தில் வந்து இறங்கும் அகதிகள் கூட்டத்தில் என்னைத் தேடி நீ அலையாதே என்று நம்பிக்கை தொனிக்க எழுதியபோது செழியனுக்கு 24 வயதிருக்குமா..

எரிகின்ற எங்கள் தேசத்தில் எழுகின்ற எங்கள்

மக்களின் கரங்களுடன் மெலிந்துபோன என் கரங்களை .

இணைத்துக் கொள்வதற்காய் நான் எங்கள் தேசத்தில் வாழ விரும்புகிறேன் என்றெழுதிய செழியனை, அவர்கள் தேசத்திலிருந்தே துரத்தியபோது அவருக்கு 25 வயதிருக்குமா!

ஒரு கையில் துப்பாக்கியும் மறு கையில் கவிதையுமாய் புறப்பட்ட ஈழப் போராட்ட முன்னோடிக்கு என் அஞ்சலிகள்!

இப்போது செழியனுக்கு 55 வயது இருக்குமா!

### பாலன் ஜெயகரன்

இனிமையான தோழர். பல இனிய தருணங்களை அவர் நினைவுகளாக எம்மிடம் விட்டுச் சென்றுள்ளார். எப்போதும் தனது கவிதைக்கூடாக நம்பிக்கையை விரவவிட்ட கவிஞர் அவர். அந்த நம்பிக்கையுடன் உனது நினைவையும் சுமந்து முன்னேறுவோம். சென்று வா தோழா!!. அவரது இழப்பால் துயருறும் அனைவருடனும் தேடகமும் இணைந்து தோழருக்கு எமது ஆத்மார்த்தமான அஞ்சலியைச் செழுத்துகிறோம்

### எழுத்தாளர் கற்சுறா

ஒருகாலத்தில் நாம் பார்த்து வியந்த செழியன் ஏன் இப்படியானார்? எங்கே அந்தத் தவறு நடந்தது? நாம் பேசியே ஆகவேண்டும். செழியனின் மரணம் ஒரு மரணத்தைப் போல் கடந்துபோக வேண்டுமா?

அவர் குறித்து நான் பேச வேண்டியவை இன்னமும் இருக்கின்றது.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவராக இருந்தவர். எழுத்தாழுமை கொண்டவர். சமூக அக்கறையோடு செயற்பட்டு வந்தவர் தன்னைக் கடைசிக் காலங்களில் தானே சீரழித்தது பற்றி நாம் பேசியே ஆக வேண்டும் நண்பர்களே

இறுதியாக...

நான் எனக்கு மிக நெருங்கியவரை "நீ" என்றே விழிப்பேன்.

நான் பழகிய செழியனுக்கு அந்த உரிமையோடு சொல்கிறேன் "சனியனே நீ செய்தது கொஞ்சமும் சரியில்லை"

மிக அதிகமான நண்பர்களை தவிக்கவிட்டுச் சென்றிருக்கிறாய் என்பதாவது உனக்குத் தெரிய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா தமிழர் வரலாறு - 19

# வடக்குக் கிழக்கு பயிற்சிப் பட்டறைகளுக்குக் கனடா தமிழர்களின் பங்களிப்பு

சென்ற இதழில் தமிழ்மக்கள் விவசாயத்தில் கொண்டுள்ள ஈடுபாடு பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். வானம் பார்த்த பூமி என்பது போல விவசாயத்தை நம்பியே பல தமிழ் குடும்பங்கள் அங்கே இருந்தன. பல படித்த இளைஞர்கள் ஒரு காலகட்டத்தில் யாழ் குடாநாட்டை விட்டு வெளியேறி கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, போன்ற மாவட்டங்களில் விவசாயத்தை நம்பியே குடியேறினர். போர்ச் சூழல் காரணமாக தமிழ் மக்களின் வளங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு விட்டிருந்தன. அதை மீளவும் கட்டி எழுப்பும் நோக்கோடு புலம் பெயர்ந்த மண்ணில் உள்ள நல்ல மனம் கொண்டவர்கள் தங்களால் முடிந்த உதவிகளைச் செய்ய முன் வந்திருக்கிறார்கள். வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சமீபத்தில் நடந்த விவசாயப் பயிற்சிப் பட்டறை, மாணவர்கள், அதிபர்கள் ஆகியோருக்கான பயிற்சிப் பட்டறை பற்றி உரையாடிய போது பலரும் அதை வரவேற்றுச் செய்தி அனுப்பியிருந்தார்கள்.

விவசாயப் பயிற்சிப் பட்டறையின் போது இயற்கை உரம் பாவிப்பதால் ஏற்படக் கூடிய நன்மைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. அங்கே உள்ளவர்களின் தேவை என்ன என்பதை அறிந்து அதற்கேற்ப செயற்பட்ட எல்லோருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள். இப்போது அங்கே இருக்கும் சூழ்நிலையில் யார் சொல்கிறார்கள் என்பதை விட என்ன சொல்கிறார்கள் என்பதுதான் முக்கியமானது. நேர்மையான முறையில் செயற்படும் போது அதனால் என்ன பலாபலன் கிடைக்கிறது என்பதும் கவனிக்கத் தக்கது. அங்கே உள்ள தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக இங்கிருந்து பலரும் தனிப்பட்ட முறையிலும் குழுவாகவும் உதவிக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோல புலம் பெயர்ந்த மக்களும் தாங்கள் புலம் பெயர்ந்த மண்ணில் இருந்து முடிந்த அளவு உதவி செய்கின்றார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்குச் செய்யும் இத்தகைய உதவிகள் என்றும் பாராட்டப்பட வேண்டும். உதவி செய்பவர்களில் பொதுவான நோக்கத்தோடு உதவுபவர்களும், தனிப்பட்ட சில தேவைகளுக்காக உதவுபவர்களும் இருக்கின்றார்கள்.

ஈழத் தமிழ் மக்கள் கல்விச் செல்வத்திற்கு எப்பொழுதும் முன்னுரிமை கொடுப்பவர்கள். அதுவே நிரந்தரமான செல்வம் என்ற நம்பிக்கையும் கொண்டவர்கள். எனவேதான் தாங்கள் கல்வி கற்ற பாடசாலைகளுக்குத் தங்களால் முடிந்த அளவு உதவிகளைச் செய்கின்றார்கள். புலம் பெயர்ந்த மண்ணில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் பல இத்தகைய உதவிகளைச் செய்து கொண்டிருக்கின்றன. வேறு சிலர் தங்கள் ஊரின் முன்னேற்றம் கருதி ஊர் ஒன்றியங்கள் மூலம் உதவிகளைச் செய்கின்றார்கள். குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்ட நூலகம், வழிபாட்டுத் தலங்கள் போன்றவற்றைக் மீளவும் கட்டி எழுப்புவதற்குத் தங்களால் முடிந்த உதவிகளைச் செய்கின்றார்கள். ஒருசிலர் இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடாமல், எந்த உதவியும் செய்யாமல் தங்களைச் சுற்றி வட்டம் போட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். காரணம் கேட்டால் உதவ மனம் இருக்கிறது ஆனால் ஒருவரையும் நம்பமுடியவில்லை என்று எல்லாவற்றையுமே சந்தேகக் கண்ணோடுதான் இவர்கள் பார்க்கிறார்கள். 'மனம் இருந்தால் இடமிருக்கும்' என்ற பழமொழிதான் நினைவுக்கு வந்தது.






அங்கே நடந்த பயிற்சிப் பட்டறைகள் பற்றி முகநூலில் ஒருவர் மிகவும் விரக்தியோடு 'எதற்காக இந்தப் பயிற்சிப்பட்டறைகள்?' என்பதுபோல எழுதியிருந்தார். யாரோ வந்து எங்களுக்கு விவசாயத்தைப் பற்றிச் சொல்லித் தரவேண்டுமா? என்பது போல அவர் வினாவியிருந்தார். யார் சொல்லித் தருகிறார்கள் என்பது முக்கியமில்லை, தெரியாவிட்டால் நல்ல நோக்கத்திற்காக அதைத் தெரிந்து கொள்வதில் தப்பில்லை. இப்படிப்பட்டவர்கள் நல்ல காரியங்களைத் தாங்களும் செய்ய மாட்டார்கள் மற்றவர்களைச் செய்யவும் விடமாட்டார்கள். காய்க்கிற மரத்திற்கு எறிவிழத்தான் செய்யும். எங்கோ நடந்த, யாரோ செய்த தவறுக்காக எல்லோரையும் சந்தேகக் கண்ணோடு பார்ப்பதை முதலில் தவிர்த்துக் கொள்வது நல்லது.

யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் நடந்த சர்வதேச வர்த்தக கண்காட்சியில் இயற்கை விவசாயம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. 'நஞ்சு அற்ற உணவை உண்போம், ஆரோக்கியமாக வாழ்வோம், இயற்கை விவசாயத்தை ஆதரிப்போம்' என்பது போன்ற தொனிப்பொருளில் இயற்கை விவசாயம் சார்ந்த பொருட்கள் காட்சிப்படுத்தப் பட்டதாகத் தெரிகின்றது. இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட கிருமிநாசினிகள், உரங்கள் என்பனவும் அங்கு விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இந்த காட்சி கூடங்களில் கூட்டுரம், உரக்கரைசல், உள்ளிக்கரைசல், பஞ்சகவ்வியா, வேப்பம் பிண்ணாக்கு, வேப்பம் தூள், வேப்பெண்ணைக் கரைசல், சீமைக்கிளுவை திரவம், மண்புழு உரம் என்பன போன்றவையும் விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்ததாகத் தெரிகின்றது. தற்போது பல இடங்களில் இயற்கை விவசாய விற்பனை நிலையங்கள் ஒவ்வொன்றாக ஆரம்பித்திருப்பதில் இருந்தே இத்தகைய பயிற்சிப் பட்டறைகளின் பலன் என்னவென்று புரிகின்றது.

மாணவர்களின் மொழி விருத்தி பற்றிய பயிற்சிப் பட்டறைகள் அங்கே நடப்பது காலத்திற்கேற்ற நல்லதொரு முக்கியமான நிகழ்வாகும். இதன் மூலம் அங்கே உள்ள பல தரப்பினரும் பயன் பெற்றதை அறிந்தபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. என்னிடம் மகாஜனக்கல்லூரி அதிபர் ஆலோசனை கேட்டபோது மகாஜனக் கல்லூரி செய்தி மடலிலும் ஒரு விடயத்தை முக்கியமாக எழுதியிருந்தேன். எமது மாணவர்களால் ஆங்கில மொழியை எழுத வாசிக்க முடிகிறது ஆனால் சரளமாகக் கதைத்துப் பழக அவர்களுக்கு வசதிகள் இல்லை. அப்படியான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்படி கேட்டிருந்தேன். அனேகமான கல்லூரிகளில் ஆங்கிலத்தில் உரையாடக் கூடிய வசதிகள் இல்லை. குறைந்த பட்சம் உயர்கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள். பல்கலைக் கழகத்திற்கோ, அல்லது தமிழ் மொழி தெரியாதவர்களுடன் உரையாடவோ அல்லது வெளிநாடுகளுக்கோ செல்லும் போது இந்த மொழி அறிவு மிகவும் உதவியாக இருக்கும்.

ஆங்கில மொழி அறிவு இருந்தால் எங்கே சென்றாலும் துணிந்து முன் வந்து எதையும் செய்வதற்குத் துணிவு ஏற்படும். அதன் மூலம் தலைமைத்துவத்தை ஏற்று சாதனைகள் படைக்க எம்மவர்களால் முடியும். எமது மாணவர்களிடையே போதிய அளவு தலைமைத்துவ பண்பு வளர்க்கப் படவில்லை என்பதும் ஒரு குறைபாடாகும். பெற்றோரின் கட்டுப்பாட்டுக்குள் வளர்வதால் தாமாக முடிவெடுக்கும் பழக்கம் எமது வளர்ந்த பிள்ளைகளிடம் கூட இல்லை. கனடாவில் உள்ள பிள்ளைகளிடமும் அந்தக் குறைபாட்டை அவதானிக்க முடிந்தது. எனது வகுப்பில் உள்ள சில தமிழ் பிள்ளைகளிடமும் இந்தக் குறைபாட்டை அவதானித்தேன், தாமாக முன் வந்து எதையும் செய்யத் தயங்குகிறார்கள். கேள்விக்கான பதில் தெரிந்தாலும் அதைச் சொல்லத் தயங்குகிறார்கள். நாமாக முன் வந்து எதையும் செய்யாவிட்டால் கைகட்டி வாழவேண்டிய நிலைதான் எமக்கு ஏற்படும்.

ஆங்கில மொழியைச் சரளமாகப் பேசுவதற்கான முதலாவது பயிற்சிப் பட்டறை பற்றிய ஒளிப்படத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இந்த நிகழ்ச்சியை முன் எடுத்த நண்பர் நவஜீவன் மற்றும் இகுருவி குழுவினருக்கும், அதற்கு உதவியாக இருக்கும் பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஸ்னன் குடும்பத்தினருக்கும் எனது வாழ்த்துக்கள்.

கிளிநொச்சியில் நடந்த ஒரு ஆங்கில மொழி அறிவுப் பயிற்சிப் பட்டறையில் தானாகவே முன்வந்து ஆங்கிலத்தில் உரையாட முயன்ற சிறுமி விக்னராஜாவைப் பார்த்து நான் பெருமைப்பட்டேன். தமிழ் மாணவ, மாணவிகளுக்கு அவர் ஒரு எடுத்துக் காட்டாக இருந்தார். Aim என்றால் என்ன Ambition என்றால் என்ன என்பதற்கு அப்போது கொடுக்கப்பட்ட விளக்கத்தை அங்கே இருந்த மாணவர்கள் யாருமே என்றும் மறக்க மாட்டார்கள். எங்கள் இனம் முன்னேற வேண்டுமானால் இது போன்ற முயற்சிகள் அவசியமானது. காரணம் இவைதான், 'தங்களால் முடியும்' என்ற நம்பிக்கையை மாணவர்களிடையே ஊட்டக் கூடியது.

அங்கே ஆங்கில மொழியை ஊட்டுதிலும், இங்கே தமிழ் மொழியை ஊட்டுவதிலும் பல சிரமங்கள் இருக்கின்றன. கனடாவில் உள்ள அனேகமான தமிழ் பிள்ளைகள் தமிழில் சொல்வதைப் புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் இருக்கின்றார்கள். தமிழில் ஏதாவது கேட்டால் திரும்ப அதற்குத் தமிழில் பதில் அளிப்பதில்தான் தயக்கம் காட்டுகின்றார்கள். தாங்கள் ஏதாவது தவறாகச் சொன்னால் கேலிசெய்வார்களோ என்ற தயக்கம் அவர்களுக்கு இருப்பதால்தான் ஆங்கிலத்தில் பதில் அளிக்கின்றார்கள். அனேகமான பெற்றோர்கள் அவர்களைத் திருத்தி அதைத் தமிழில் சொல்ல வைக்க முற்படுவதில்லை. அதைப் பெற்றோர்கள்தான் அவர்களது மனம் நோகாமல் செய்ய வேண்டும்.

தினசரி பாடசாலையில் கொடுக்கும் வீட்டு வேலைகளோடு தமிழ் மொழியைக் கற்பது கடினம் என்றதொரு மாயையைச் சில பெற்றோர்களே பிள்ளைகளிடம் உருவாக்குகின்றார்கள். சரி, ஆங்கிலத்தை விடுவோம், புதிய மொழியான பிரெஞ்சு மொழியைத் திறமையாகக் கற்கும் ஒரு தமிழ் பிள்ளையால் தமிழ் மொழியைக் கற்க முடியாமல் போனதன் காரணம் என்னவென்றுதான் புரியவில்லை. மீண்டும் 'மனம் இருந்தால் இடமிருக்கும்' என்ற வாக்கியத்தைத்தான் நினைவு படுத்த முடியும்.

குரு அரவிந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய அரசியலில் தவிர்க்க முடியாத

# சினிமாக் கவர்ச்சி



ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவதாக அறிவித்த பின்னர் தமிழகத்தில் மட்டுமல்லாமல், பிற மாநிலங்களிலும், மற்ற சில நாடுகளிலும் தமிழக அரசியல் குறித்த விவாதங்கள் உருவாகியுள்ளன. தமிழக மாநில இளைஞர்கள், ரஜினி மன்றத்தின் உறுப்பினர்களான அவரது ரசிகர்கள் மற்றும் பல கிராமப்புற மக்கள் இதை எம்.ஜி.ஆர், என்.டி.ராமராவ், ஜெயலலிதா போன்ற நடிகர்கள் அரசியலில் நுழைந்து வெற்றி பெற்றுப் பதவியில் இருந்ததுடன் ஒப்பிடுவதில் வியப்பொன்றும் இல்லை. ஆனால், உலகின் 18 நாடுகளில் மொத்தம் 228 நடிகர்கள், நடிகைகள் அரசியலில் நுழைந்து எம்.பி. பதவிகளிலும், பிரதமர், ஜனாதிபதி பதவிகளிலும் இருந்திருக்கிறார்கள் என்பது பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

ஆர்ஜென்டீனா— 1, பங்களாதேஷ்— 1, பிரேசில்— 1, கனடா —7, ஜெர்மனி— 1, இந்தியா— 48, இத்தாலி— 3, இஸ்ரேல்— 1, மெக்ஸிகோ —2, நெதர்லாந்து— 1, பாகிஸ்தான் —1, போலந்து —4, பிலிப்பைன்ஸ்— 33, ரஷ்யா —1, இலங்கை— 13, தாய்லாந்து— 8, பிரிட்டன்— 7, அமெரிக்கா— 22 என்று கலைத் துறையினர் அரசியலில் இறங்கியுள்ளனர்.

இந்தியாவில்தான் மிக அதிக அளவில் சினிமா நடிகர்கள் நேரடி அரசியலில் இறங்கியது தெரியவருகிறது. இதுவரையில் 48 பேரும், ரஜினி—49—ஆவது, கமல் இறங்கினால் 50 பேர் சினிமா துறையிலிருந்து அரசியலுக்கு வந்திருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சினிமா நடிகர்கள் அரசியலில் நுழைந்து பிரபலமடைவதற்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்த ராபர்ட் தாம்ப்சன் எனும் பேராசிரியர் "24 மணி நேர தொலைக்காட்சிகளில் தோன்றி பார்வையாளர்களைக் கவரும் வகையில் பேசி வரும் ஓர் அரசியல்வாதியும், சினிமா, நாடகங்களில்தோன்றிமக்களைக்கவரும் நடிகரும் ஒரே மாதிரியானவர்களே" எனக் கூறியுள்ளார். அமெரிக்காவின் சைரக்யூஸ் பல்கலைக்கழகத்தில் சினிமா மற்றும் தொலைக்காட்சி பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள இந்தப் பேராசிரியர் மேலும் கூறுவது கவனிக்கத்தக்கது.

சினிமா நடிகர்கள் தங்கள் அரசியலைத் தொடங்கும்போதே இவர்களுக்கு எதிரான அரசியல்வாதிகளை விடவும் சிறப்பான வகையில் அரசியல் களத்தில் உதிக்கும் நிலைமையில் இருப்பார்கள் எனக் கூறுகிறார் இவர். நிறைய பணத்தையும், நேரத்தையும் செலவு செய்து அரசியலில் வளர்ந்து நிற்கும் பல தலைவர்களையும் மக்கள் மன்றத்தில் எளிதாக இந்த நடிகர்கள் ஓரந்தள்ளி விடுவார்கள்.

இது போன்ற புதிய அரசியல்வாதிகளான நடிகர்கள் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுவது, வாக்காளர்களின் புத்திசாலித்தனமில்லாத நடத்தை என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஒப்பீட்டளவில், தேர்தலில் போட்டியிடும் பழைய அரசியல்வாதிகள், ஊழல்வாதிகளாகவும், நிர்வாகத் திறமையற்றவர்களாகவும் இருப்பதாக வாக்காளர்கள் கருதுவது முக்கியமான காரணங்களாகின்றன எனக் கூறுகிறார் பேராசிரியர் தாம்ப்சன்.

அரவிந்த் ராஜகோபால், அமெரிக்காவின் நியூயார்க் பல்கலைக்கழகத்தின் ஊடகவியல் துறையில் பேராசிரியராக இருப்பவர். புகழ்பெற்ற ஜெர்மனிய சமூகவியல் ஆராய்ச்சியாளர் மேக்ஸ் வீபர். இவர்கள் இருவரும் சேர்ந்து கூறியது கவனிக்கத்தக்கது:

'நவீன சமூக வளர்ச்சியில் நிர்வாகமும் ஆட்சி முறையும் மக்களின் சுதந்திரத்தையும் வளர்ச்சியையும் மிக அதிக அளவில் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிக்கும் காலகட்டத்தில், மிக அதிக அளவில் மக்களைக் கவர்ந்த தலைவர்கள் பொது வாழ்வில் உருவாகி அரசியல் செய்வது வரவேற்கத்தக்கது' என இவர்கள் கூறுகிறார்கள்.

இதுபோன்ற தத்துவங்கள் ஒருபுறம் இருக்க, அரசியலில் புகுந்து வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்த நடிகர்களில், உலகமே போற்றும் வகையில் பணிசெய்த அமெரிக்க ஜனாதிபதியும், மிக அதிக அளவில் ஊழல் செய்து மணிலாவின் சிறையில் வாடிய பிலிப்பின்ஸ் நாட்டின் ஜனாதிபதியான ஜோசப் எஸ்ட்ராடாவும் நம்மால் கவனிக்கத்தக்கவர்கள்.

நல்ல மற்றும் கெட்ட தலைவர்களின் உதாரணங்களைக் கையிலெடுத்து புரிந்து கொண்டு நடிக, நடிகையர் அரசியலுக்கு வரும்போது நல்லது நடக்கும்.

'தனி மனித குறைபாடுகளும், கெட்ட குணாதிசயங்களும் உடையவர்களால் பொது நன்மை செய்ய முடியாது' என மேதறிஞர் இங்கர்சால் கூறுவார்.

'நமது நிர்வாகத் திறமை என்பது, கல்வியால் பெரிய பட்டங்களைப் பெறுவது அல்ல. நல்ல மனிதர்கள், திறமையானவர்கள், பொது நலத்தில் அக்கறை கொண்டவர்கள் யார் என்பதைப் புரிந்து கொள்ளும் திறமையே' என ராபர்ட் கிளைவ் கூறியதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

பெருந்தலைவர் காமராஜர் இதை நிரூபித்தார். அழியாப் புகழடைந்தார். இதேசமயம், ரஜினியால் அரசியல் வெற்றிடத்தை நிரப்ப முடியுமா என்பது குறித்து வாதங்கள் நடந்து வருகின்றன.

தமிழக அரசியல் சூழலில் தற்போதைய நிலையில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்றால் திமுக கூட்டணி 130 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை பிடிக்கும் என்றும் அதிமுக சரிவை சந்திக்கும் என்றும் 'இந்தியா டுடே' ' நடத்திய கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதா மறைவு, திமுக தலைவர் கருணாநிதி வயது முதிர்வு காரணமாக அரசியலில் செயல்பட முடியாத நிலையால், தமிழக அரசியல் நாள்தோறும் புதிய அதிரடி அறிவிப்புகளும், மாற்றங்களும் நிகழ்ந்து வருகின்றன.

தினகரன் வளர்ச்சி, ரஜினிகாந்த், கமல்ஹாசன் உள்ளிட்டோரின் அறிக்கை, அரசியல் பிரவேசம் என நாளும் அதிரடி திருப்பங்கள் நடந்து கொண்டேதான் இருக்கின்றன.

தமிழக அரசியல் சூழ்நிலை குறித்து ஒரு தெளிவான அரசியல் நிலை எட்டப்படாத நிலையில், தற்போது தமிழகத்திற்கு சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற்றால் எந்தக் கட்சிக்கு மக்களிடையே செல்வாக்கு இருக்கும் என்று 'இந்தியா டுடே' மற்றும் 'கார்வி' இணைந்து தமிழகத்தின் 77 தொகுதிகளில் நடத்திய கருத்துக்கணிப்பு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஜெயலலிதா மறைவிற்குப் பிறகு தமிழகத்தில் அரசியல் வெற்றிடம் இருப்பதாக சுமார் 65 சதவீத வாக்காளர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் அதிமுகவில் நிலவும் குழப்பத்தால் நாட்டு நடப்புகள் அனைத்தும் சிதைந்துள்ளதாகவும் மக்கள் கருதுவதாக கருத்துக் கணிப்பு கூறுகிறது.

இது ஒருபுறமிருக்க, வரும் பெப்ரவரி 21—ம் திகதி தமது புதுக் கட்சிக்குப் பெயர் அறிவித்து, தமது சுற்றுப் பயணத்தையும் அதன் மூலம் தமது அரசியல் பயணத்தையும் தொடங்க இருப்பதாக நடிகர் கமல்ஹாசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், தம்மை வளர்த்தெடுத்த சமூகத்துக்கு தாம் நிறைய நன்றி சொல்லியிருப்பதாகவும், அதைத் தாண்டி கடமைகள் நிறைய இருப்பதாகவும் கூறியுள்ளார்.

"அக் கடமைகளின் தொடக்கமாக எம் மக்களை நேரில் சந்திக்கும் பயணத்தை நான் பிறந்த இராமநாதபுரத்தில் இருந்து பெப்ரவரி 21ம் திகதி தொடங்க இருக்கிறேன். ஆரம்பச் சுற்றுப் பயணத்தில் மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், சிவகங்கை மாவட்ட மக்களை சந்திக்கத் திட்டமிட்டுள்ளேன்.

இது நீண்ட நாள்களாகத் திட்டமிட்டிருந்த பயணம். மக்களுடனான இந்த சந்திப்பு புரட்சி முழக்கமோ, கவர்ச்சிக் கழகமோ அல்ல. என் புரிதல், எனக்கான கல்வி," என்று தெரிவித்துள்ளார் கமல்ஹாசன்.

"தேசிய ஒருமைப்பாட்டுக்கு உதாரணமாக இருக்கும் இராமநாதபுரம் மண்ணில், பெப்ரவரி 21—ம் திகதி என் கட்சியின் பெயரை அறிவித்து என் அரசியல் பயணத்தைத் தொடங்க இருக்கிறேன். இது என் நாடு, இதை நான் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் எனக்கு மாத்திரம் இருந்தால் போதாது.

இங்கு தலைவன் என்பவன் வழிநடத்த மாத்திரமன்று, பின்பற்றவே தலைவன் இருக்க வேண்டும். பின் தொடர்வதற்கே ஒரு தலைமைப் பொறுப்பு இருக்க வேண்டும். நாமெல்லாம் சேர்ந்து இந்தத் தேரை இழுக்கிறோம் என்ற எண்ணம் இருக்கவேண்டும்.

அதுவே ஜனநாயகம். அந்த நாயகர்களை சந்திக்கத்தான் நான் சென்று கொண்டிருக்கிறேன்" என்று கமல் குறிப்பிட்டுள்ளார்.

"இது ஆட்சியைப் பிடிப்பதற்கான திட்டமா? என்று கேட்பார்கள். ஆட்சியை ஒரு தனி ஆள் பிடிக்க முடியுமா? யாரின் ஆட்சி, யாரின் அரசு. குடியின் அரசு. அப்படியென்றால் முதலில் அவர்களை உயர்த்த வேண்டும். அதற்கான கடமைகளை நினைவுபடுத்த வேண்டும். அதை நோக்கிய பயணம்தான் இது. உங்களின் ஆதரவோடு இந்தப் பயணத்தைத் தொடங்குகிறேன். கரம் கோர்த்திடுங்கள். களத்தில் சந்திப்போம்" என்று கமல் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

2016 தேர்தலில் அதிமுகவிற்கு வாக்களித்த வாக்காளர்களில் 3இல் ஒருவர் தற்போதைய சூழ்நிலையில், அதிமுகவிற்கு வாக்களிக்க மாட்டோம் என்றே தங்கள் கருத்தை பதிவிட்டுள்ளனர்.

அதிமுக மீது அதிருப்தியில் இருக்கும் 60 சதவீத வாக்காளர்களின் கவனம் ரஜினியின் பக்கம் திரும்பியுள்ளது என்றும் அவர்களில் 26 சதவீதம் பேர் திமுகவிற்கு சாதகமாக திரும்பியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. மேலும் ரஜினியின் தலைமையிலான கட்சிக்கு 33 தொகுதிகளில் மட்டுமே வெற்றி கிடைக்கும் என்றும் தினகரன், கமல்ஹாசனுக்கு போதிய வரவேற்பு இருக்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஜினியால் அரசியல் வெற்றிடத்தை நிரப்ப முடியுமா என்ற கேள்விக்கு 51 சதவீதம் பேர் இல்லை என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அதிமுக சிதைந்து போகுமா? என்ற கேள்விக்கு ஆம் என 54 சதவீதமும் பேரும், இல்லை என 35 சதவீதம் பேரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

ரஜினியின் அரசியல் எதிர்காலம்? குறித்த கேள்விக்கு வெற்றிகரமாக மாறும் என 53 சதவீதம் பேரும், தோல்வி அடையும் என 34 சதவீதம் பேரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

தேர்தல் வந்தால் வாக்குகளுக்கு அரசியல் கட்சிகள் பணம் கொடுப்பார்களா என்ற கேள்விக்கு ஆம் என 72 சதவீதம் பேரும் கருத்து தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்ச்னைகளுக்கான
இலவச ஆலோசனைகளுக்கு

**V. SRI**
Certified Insolvency Counsellor

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com




Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community

OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

***At Need Funeral Arrangements***



**Vilosanan Sivatharman**
416-993-0826

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:
- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception* • *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

***Pre-Arranging: A Wise Choice...***

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

**1911 Woodbine Ave, Markham**
**ON, L3R 5G1**
**www.chapelridgefh.com**
**info@chapelridgefh.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.சி தமிழ் தாயக திறப்புவிழா : கனேடிய கலைஞனுக்கு கௌரவம்

பிரித்தானியாவைத் தளமாக கொண்ட இயங்கி வரும் ஐ.பி.சி தமிழ் தனது கலையகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்துள்ளது.

ஜனவரி மாதம் 31ம் திகதி இடம்பெற்ற இந்த திறப்பு விழாவில் பல நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கு கிழக்கில் ஊடக செயல்பாடுகள் என்பது பத்திரிகைகளோடு மட்டும் நின்றுவிடும் நிலை தாண்டி இலத்திரனியல் ஊடகங்களுடனான பரீட்சயத்தை எமது இளம் தலைமுறை ஊடகவியலாளர்களுக்கு ஏற்படுத்துவதற்கான வாய்ப்பாக ஐ.பி.சியின் தாயகக் கலையம் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊடகத்துறையில் வேரூன்றி சாதிக்க துடிக்கும் இளம் தலைமுறையினர் தமது ஆக்கத்திறன்களை வெளிப்படுத்துவதற்கும் தாயக மக்களின் வாழ்வாதாரத்தை புலம் பெயர் சமூகத்தோடு பகிர்ந்து கொள்வதற்கும் இந்த முயற்சி வாய்பளித்திருக்கின்றது.






இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஈகுருவியின் வருடாந்த விருது வழங்கல் விழாவில் கனேடிய ஒலிபரப்புத் துறையின் முன்னோடி என விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் அதிபர் இளையபாரதி அவர்கள் இந்த தாயகக் கலையத்தின் திறப்பு விழாவில் முன்னிலை வகித்திருந்தார்.

உலகின் முதலாவது 24 மணி நேர தமிழ் வானொலியை கனேடிய மண்ணில் இருந்து ஆரம்பித்தவர் அதன் மூலமாக இப்போதும் கனடாவில் உயிர்ப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் வானொலிகளின் வருகைக்கும் வானொலி ஊடகர்களின் எழுச்சிக்கும் வித்திட்டவர் இளையபாரதி அவர்கள்.

அவ்வாறான ஒருவர் மூலமாக தாயகத்தில் ஒரு கலையகத்தை திறந்து வைத்தமை மூலம் தாயக மக்களுக்கும் புலம்பெயர் தமிழ் சமூகத்திற்கும் ஐ.பி.சி தமிழின் தலைவர் பாஸ்கரன் கந்தையா பெருமை சேர்த்துள்ளார்.

புதிய தலைமுறையின் வித்தியாசமான சிந்தனைப் பரிமாற்றங்களோடு தாயக மண்ணில் இருந்து சிறப்பாண படைப்புகளை ஐ.பி.சி தமிழ் உலகம் முழுவதற்கும் கொண்டு செல்ல வேண்டும் என வாழ்த்துவதில் ஈகுருவி பெரு மகிழ்வடைகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செந்தூரா செந்தூரா சேர்ந்தே செல்வோம்

# குருவியார் @ Tim Hortons.

செந்தூரா செந்தூராசேர்தே செல்வோம் செந்தூரா என்று உற்றசாகமான பாடலுடன் ரிம் ஹோட்டனுக்குள் நுழைந்த குருவியார் வழமை போலவே ஒரு டபிள் டபிளை ஓடர் எடுத்துக் கொண்டு போய் குப்பண்ணாவும் சுப்பண்ணாவும் இருந்த மேசையில வைச்சுப் போட்டு ஹாயா இருந்தார்.

என்ன குருவியர் அடிக்கடி காணமல் போறியள் சரியான பிசியான வேலை போல எண்டு குப்பண்ணா அரட்டையை ஆரம்பிக்கவும் சுப்பண்ணா குருவியாரா ரிம் ஹோர்டன் பக்கம் காணரட்டில் குருவியாரின்ர பேப்பரையும் காணக் கிடைக்கிதில்ல உது வேலைக்காகது கண்டியளோ எண்டு கொஞ்சம் ரென்சனான குரலில சுப்பண்ணா கொமண்ட் அடித்தார்.

அட விசரா ஒழுங்கா பேப்பர் அடிக்கிறது லேசுப்பட்ட விசயம் எண்டு நினைச்சியோ அதுவும் எக்ஸ்குளுசிவா எழுதுற ஆக்கள கட்டி மேச்சு பேப்பர கொண்டு வாறதுக்குள்ள நாக்கு மூக்கெல்லாம் தள்ளிப் போடும்.

அதுக்குள்ள பேப்பர் எழுதுற பெரிய பெரிய ஆக்களை எல்லாம் தள்ளிக் கொண்டு போய் வெளியில விடுறதுக்கு போத்திலும் கையுமா நிக்கிற பெரிய 'துரை' மாரின்ர அன்புத் தொல்லையளும் எங்களப் பற்றி எழுதினியெண்டா வழக்கு போடுவம் எண்டு இல்லாத மீசையை முறுக்கிக் கொண்டு திரியிற ராசாக்களின்ர அன்புத் தொல்லைகள் அத்தனையும் தாண்டி தானே பேப்பர கொண்டு வரவேண்டிக் கிடக்கு.

உப்பிடி கஸ்டப்பட்டு பேப்பர் அடிக்கிறதுக்கு பேசாமால் ஊருக்கு காசு அனுப்பிறதுக் எண்டு சொல்லி ஒரு புரோக்கிறாம நடத்தி காசுபாக்கலாமே எண்டு குப்பண்ணா பெரிய மிசைல் ஒண்டை அடிச்சு விட்டார்.

ஓமடா தம்பி புதுசு புதுசா ஐடியாக்களோட ஆக்கள் வெளிக்கிடுகினம் எண்டு தான் நானும் கேள்விப்பட்டன்.

அவையள கேப்பார் மேய்பார் இல்லாததால அவை சொல்லிறத வேத வாக்காக எடுத்துக் கொண்டு அவைக்கு காவடி தூக்கிறதுக்கும் கொஞ்சம் மறை கழண்டதுகள் இருக்கு தானே என சுப்பண்ணாவும் தன்ர பொயின்ர எடுத்து விட்டார்.

தம்பியவ ஊரில இருக்கிற சனத்துக்கு வெளிநாட்டில இருக்கிற ஆக்கள் உதவி செய்ய வேணும் எண்டது முக்கியம் தான் ஆனால் பல இலட்சம் செலவழிச்சு இந்தியாவில இருந்து ஆக்கள கூட்டிக் கொண்டு வந்து புரோக்கிறாம் செய்து தான் காசு அனுப்ப வேணும் எண்டதில்ல தானே அதோட இஞ்ச நடக்கிற புறோக்கிறாமில பெரும்பாலான புரோக்கிறம் நடத்தினவையின்ர கையை மட்டுமில்ல அங்க பிங்க எண்டு எல்லா இடத்திலயும் சுட்டுப் போடும். இந்த லட்சணத்தில சும்மா ரிக்கெட் விக்கிறதுக்கும் புரமோசனுக்கும் 'தாயக மக்களுக்கு உதவும் நோக்கில் நடைபெறும் மாபெரும்.... ஏண்டு ஒரு வரியை அடிச்சு விடுறது எவ்வளவு போக்கிலித் தனம் தெரியுமே எண்டு குருவியார் கொதிக்கத் தொடங்கினார்.

புரோக்கிறாம் நடத்திறவ உண்மையில ஊருக்கு காசு அனுப்பத் தான் நடத்திறதா இருந்தால் முதலில அங்க யாருக்கு எவ்வளவு காசு குடுக்கப் போறம் எண்டு அறிவிச்சுப் போட்டு நிகழ்சியை செய்ய வேணும்.


சனம் வருதோ இல்லையோ அந்த காச அறிவிச்ச மாதிரி அனுப்ப வேணும்; இது தான் சரியான முறையா இருக்கும் இதை செய்ய வக்கில்லாமல் சும்மா பீலா விடுற ஆக்களை நாக்கப் புடுங்கிற மாதிரி கேல்வி கேட்க வேணும் எண்டு தனது குருவியார் குமுறி முடிச்சார்.

அதில்ல குருவியார் நான் ஒரு விசயம் அரசல் புரசலா கேள்விப் பட்டனான் இஞ்ச இருந்து போய் பேமசா வந்த ஒராள் இஞ்ச நடக்கிற புறோக்கிறமில புளொக் பண்ணிட்டினமாம் எண்டு ஒரு கேள்வி எண்டு புது விசயம் ஒண்ட எடுத்து விட்டார் குப்பண்ணா.

ஓமடா தம்பி நானும் காரில வரேக்க இந்தியால இருக்கிற என்ர சினேகிதப் பெடியன் கோல் பண்ணி உந்த புதினத்தை தான் சொன்னவன் ஏன் அண்ணை உங்கட ஆக்கள் இப்பிடி இருக்கினம் எண்டு அவன் என்னை கேள்வி கேக்கிறான். நான் சொன்னன் அட அவை அப்பிடிச் சொன்னால அங்க இருந்து இஞ்ச வாறா அவருக்கு மதி எங்க போச்சு எண்டு மறுத்தான் ஒண்ட எடுத்து விட்டன் பெடியன் சுருண்டிட்டான். இல்ல குருவியார் அவையள் காசில கண்ணா இருக்கிறவ உந்த லோக்கல் பொலிட்டிக்சால தங்களுக்கு சுளையா வாற காச விட விரும்ப மாட்டினம் தானே எண்டு எனக்கு கதையளக்கிறான் அவன் எண்டார் குருவியார்.

உதுக்கு என்னதான் சொலுசன் காசிருக்கிறனவன் கோஸ்டி வைச்சு பாட்டு பாடுவான் அதை படமா எடுத்து பேஸ்புக் யு ரியுப் எண்டு எல்லாத்திலயும் போட்டு பேமசாகுவான். ஏங்கட சனம் பேமஸ் ஆன ஆக்கள் காசு கேட்டால் கண்ண மூடிக்கு கொண்டு அள்ளிக் குடுப்பினம் தானே. புறகென்ன கொஞ்சம் அங்காலயும் கனக்க இஞ் சாலணும் போக கோயில் கணக்கு நிவாரணக் கணக்கா மாறிப் போகும். எங்கட சனத்துக்கிருக்கிற சோர்ட் ரேம் மெமரி புரொப்பிளம் (short term memory problems) தீராத வரைக்கும் தலையில அரைப்பரைக்கிறவங்களை யாராலயும் தடுக்கேலாது. உங்களை எங்க மாதிரி இரண்டு மூன்று லூசுகள் நேரம் போகாமல் கோப்பிக் கடையில இருந்து கதைச்சு போட்டு போறதோட சரி வேற ஒரு ஆணியையும் புடுங்கேலாது எண்டு சுப்பண்ணா தன்ர பங்குக்கு ஒரு கருத்தை எடுத்து விட்டுப் போட்டு கதிரயில இருந்து எழும்பினார்.

என்ன ஆயத்தம் போல எண்டு குருவியார் கேக்கவும் உங்களப் போல நாங்கள் செல்லப் பிள்ளையளே குருவியார் இனித் தான் போய் மிச்ச கிளினிங் செய்ய வேணும் எண்டு போட்டு புறப்பட்டார் சுப்பண்ணா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகப் போரின் விளிம்பை நோக்கி தள்ளாடிச் செல்கின்றது மனித இனம்!

கார்ல் மார்க்ஸ் ஆல் 150 ஆண்டுகளுக்கு முன்னர் "நிதிய பிரபுத்துவத்தின்" "ஐரோப்பிய அங்கமாக"வர்ணிக்கப்பட்ட பிரபல இலண்டன் வாரயிதழ் Economist பத்திரிகை, அதன் சமீபத்திய பதிப்பை "அடுத்த போர்", "அதிகரித்து வரும் வல்லரசு மோதலின் அச்சுறுத்தல்" ஆகியவற்றை விவாதிப்பதற்காக அர்ப்பணித்துள்ளது. அதன் பிரதான தலையங்கம் நடுங்க வைக்கும் ஓர் எச்சரிக்கையுடன் தொடங்குகிறது:

கடந்த 25 ஆண்டு கால போர், நிறைய உயிர்களைப் பறித்துள்ளது. இவ்வாறு உள்நாட்டு மற்றும் மதரீதியிலான சச்சரவுகள், சிரியா, மத்திய ஆபிரிக்கா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கைச் சீரழித்த போதும் கூட, உலகின் வல்லரசுகளுக்கு இடையிலான ஒரு பேரழிவுகரமான மோதல் ஏறத்தாழ கற்பனை செய்யவியலாததாக இருந்துள்ளது.

இனி அவ்வாறு இருக்காது புவிசார் அரசியலின் சக்தி வாய்ந்த, நீண்ட காலத்திய மாற்றங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களின் பெருகிய வளர்ச்சி ஆகியவை அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் அனுபவித்து வந்துள்ள அசாதாரண இராணுவ மேலாதிக்கத்தை இல்லாதொழித்து வருகின்றன. இரண்டாம் உலக போருக்குப் பின்னர் பார்த்திராத மோதலின் அளவும் தீவிரமும் மீண்டுமொருமுறை சாத்தியமானது போல் தென்படுகின்றன. உலகமோ அதற்கு தயாராக இல்லை.

ஒவ்வொரு இடத்திலும் அதன் மேலாதிக்கத்திற்கான சவால்கள் என்று கூறப்படுவனவற்றை மிரட்டவோ அல்லது அழிக்கவோ அமெரிக்க இராணுவம் நிலைநிறுத்தப்பட்டு வருகின்ற நிலையில், Economist பத்திரிகை ஒரு தரந்தாழ்ந்த, வன்முறையான எதிர்காலத்தை எதிர்நோக்குகிறது.

அடுத்த 20 ஆண்டுகளில், "காலநிலை மாற்றம், மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் வகுப்புவாத அல்லது இனவாத மோதல்", பெரும்பான்மை உலகை "நாடுகளுக்கு இடையிலான போருக்குள் அல்லது உள்நாட்டு போர்களுக்குள்" இருப்பதை உறுதிப்படுத்தக்கூடும். அதுபோன்ற மோதல்கள், "சேரிகளை" மற்றும் மில்லியன் கணக்கான மக்கள் வசிக்கும் பகுதிகளைச் சுற்றி, "நெருக்கமான குடியிருப்புக்கள், கட்டிடம் கட்டிடமாக", அதிகரித்தளவில் நகரங்களில் சண்டை நடக்கும். ஈராக்கிய நகரமான மொசூலிலும் மற்றும் சிரிய நகரம் அலெப்போவிலும் கடந்த ஆண்டு நடந்த மரணகதியிலான சண்டைகளின் போது கண்ணுற்றவாறு, மனிதயினத்தின் பெரும் பிரிவுகளது எதிர்காலம் மனிதயின படுகொலைகளாக இருக்கும் என்று Economist அனுமானிக்கிறது.

ஆனால், அமெரிக்காவுக்கும், அதன் மூலோபாய எதிர்விரோதிகளாக சித்தரிக்கப்படும் ரஷ்யா மற்றும் சீனாவுக்கும் இடையிலான பதட்டங்கள், எத்தருணத்திலும் அணுஆயுத மனித பேரழிவாக மாறும் அச்சுறுத்தலைக் கொண்டுள்ள நிலையில், அவற்றின் ஒரு பாரிய தீவிரப்பாட்டை வரையறுத்து, அப்பத்திரிகை குறிப்பிடும் பல தொடர்ச்சியான சூழல்களே மிகவும் நடுங்க வைப்பதாக உள்ளது.

ஜூலை 2016 இல், டேவிட் நோர்த்தின் ஒரு கால் நூற்றாண்டு போர் நூலை மெஹ்ரிங் புக்ஸ் பிரசுரித்தது, அந்நூல் சுட்டிக்காட்டியது:

*1990—91 இன் முதல் பாரசீக வளைகுடா மோதலில் தொடங்கி, ஐக்கிய அமெரிக்க அரசுகள் ஒரு கால் நூற்றாண்டாக தொடர்ந்து போரில் இருந்துள்ளது. மத்திய கிழக்கு, மத்திய ஆசியா, மற்றும் ஆபிரிக்காவில் அதன் தலையீடுகளுக்கான நிஜமான நோக்கங்களை மூடிமறைக்கவும், அத்துடன் ரஷ்யா மற்றும் சீனாவை எதிர்கொள்வதற்கும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்பது போன்ற கவர்ச்சிகரமான* வார்த்தைஜால பிரச்சாரத்தைப் பயன்படுத்தி, அமெரிக்கா உலகளாவிய மேலாதிக்கத்திற்கான ஒரு மோதலில் ஈடுபட்டு வந்துள்ளது. அமெரிக்கா அதன் பொருளாதார பலவீனம் மற்றும் மோசமடைந்து வரும் உள்நாட்டு சமூக பதட்டங்களுக்கு எதிர்வினையாற்ற முயல்கையில், அதன் இடைவிடாத தீவிர இராணுவ நடவடிக்கைகள், அணு ஆயுத நாடுகளுக்கு இடையே ஒரு முழு அளவிலான போர் வெடிக்க அச்சுறுத்துகின்றன.

இரண்டு ஆண்டுகளுக்கு சற்று குறைவான காலத்திற்கு முந்தைய இந்த மதிப்பீட்டில் பெரும்பாலானவை, ஆங்கிலோ— அமெரிக்க முதலாளித்துவத்தின் மிக முக்கிய அரசியல் சாதனங்களில் ஒன்றால் எதிரொலிக்கப்பட்டுள்ளது. ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகளாவிய மேலாதிக்கத்துடன் தங்களது செல்வவளத்தை பிணைத்துள்ள நிதிய மற்றும் பெருநிறுவன செல்வந்த தன்னலக் குழுக்களின் அப்பட்டமான பிரதிநிதியாக பேசும் Economist இன் முடிவான தீர்மானங்கள், ஒரு "புதிய போர் எதிர்ப்பு இயக்கத்தைக்" கட்டியெழுப்ப உதவுவதற்கான நோர்த்தின் குறிப்பிட்ட நோக்கத்திற்கு முற்றிலும் எதிர்தரப்பில் உள்ளன.

விரோதிகளை முற்றிலுமாக அழிக்கவல்ல அமெரிக்காவின் தகைமையாலேயே சமாதானம் சிறப்பாக பாதுகாக்கப்படும் என்ற சமூகவெறி கூற்றை பிரதியீடாக முன்நிறுத்தும் Economist, "தீர்மானகரமான மற்றும் வல்லமை மிக்க எதிர்ப்பாளர்களுக்கு" எதிராக தன்னை பாதுகாக்க, அமெரிக்கா "கடுமையான பலத்தை" அபிவிருத்தி செய்யுமாறு வலியுறுத்துகிறது.



அமெரிக்காவினது மேலாதிக்க வீழ்ச்சியைத் தடுக்க அது அவசர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே இந்த சிறப்பு அறிக்கையின் மூலக்கூற்றாக உள்ளது. சீன மற்றும் ரஷ்ய ஆளும் வர்க்கங்கள் அவற்றின் சொந்த பிராந்தியங்களில் மேலாதிக்க செல்வாக்கு பெறுவதற்கான அவற்றினது அபிலாஷைகளை அடைய விட்டுவிட்டால், பின், "சாத்தியமாகக்கூடிய" விளைவு, "உலகின் வல்லரசுகளுக்கு இடையிலான பேரழிவுகரமான மோதலாக" அணுஆயுதங்களுடன் சண்டையிடப்படும் ஓர் உலகப் போராக இருக்குமென அது வலியுறுத்துகிறது.

ஜனவரி 27 பதிப்பில் வந்த அதன் தலையங்கம் அறிவிக்கிறது, சீனாவும் ரஷ்யாவும் "இப்போது திருத்தல்வாத நாடுகளாகும், அவை நடைமுறையில் இருப்பதை சவால் விடுக்க விரும்புவதுடன், அவற்றின் பிராந்தியங்களை மேலாதிக்கத்தில் வைத்திருப்பதற்கான செல்வாக்கு பிரதேசங்களாக பார்க்கின்றன. சீனாவைப் பொறுத்த வரையில், அதற்கு கிழக்கு ஆசியா; ரஷ்யாவைப் பொறுத்த வரையில், அதற்கு கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா."

அமெரிக்காவில் அடுத்தடுத்து வந்த நிர்வாகங்களின் கீழ், "ரஷ்யா மற்றும் சீனா சாதகமாக்கிக் கொண்டதாக" கூறப்படும் "20 ஆண்டுகால மூலோபாய தடுமாற்றத்தை" அது முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதே Economist முன்வைக்கும் தீர்மானமாக உள்ளது. இதுவரையில் அமெரிக்கா "அதன் எதிரிகளுக்கு கிலியூட்டிய" இராணுவ மேலாளுமையைப் பேணி உள்ளது, இதை உறுதிப்படுத்தி வைக்க, ரோபாடிக் தானியங்கி எந்திரங்கள் (robotic), செயற்கை அறிவு (artificial intelligence - AI) தொழில்நுட்பம் உட்பட அணுசக்தி அல்லாத ஆயுதங்களுக்காகவும் மற்றும் அணு ஆயுதங்களுக்காகவும் அது மலைப்பூட்டும் அளவிலான தொகையைச் செலவிட்டுள்ளதாக. பல தொடர்ச்சியான கட்டுரைகளில் அதன் சிறப்பு அறிக்கை குறிப்பிடுகிறது.

Economist எச்சரிக்கிறது: "அழுத்திக் கொண்டிருக்கும் அபாயம் கொரிய தீபகற்பம் மீதான போராகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அனேகமாக இந்த ஆண்டே. ஞ் பத்தாயிரக் கணக்கானவர்கள் கொல்லப்படலாம், அணுஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால் இன்னும் அதிகமானவர்கள் கொல்லப்படலாம்."

அமெரிக்க இராணுவம் அதுபோன்றவொரு போரைத் தொடங்க தயாராக உள்ளது. அது குவாமில் B-2 மற்றும் B-52 ரக அணுஆயுதம் ஏந்திச் செல்லும் குண்டுவீசிகளையும், நூற்றுக் கணக்கான போர்விமானங்களையும், ஏனைய பசிபிக் தளங்களில் போர்க்கப்பல்களின் தொகுப்பையும் முன்நோக்கி நிலைநிறுத்தி உள்ளது. பியொங்யாங் அதன் அணுஆயுத திட்டத்தைக் கைவிட வேண்டுமென்ற அதன் கோரிக்கை மூலமாக வட கொரியாவுடன் வாஷிங்டன் தூண்டியுள்ள மோதல், எதிர்காலத்தில் சீனாவுடனான ஒரு விட்டுக்கொடுப்பற்ற அணுஆயுத நிலைப்பாட்டுக்கான ஒரு பாரிய ஒத்திகை என்று நம்புவதற்கு அங்கே நிறைய காரணம் உள்ளது.

Economist குறிப்பிடுகையில், "ஈரான் அணுஆயுதங்கள் பெறுவதைத் தடுப்பதற்கான ஒரு போர் இப்போது மிகவும் ஊகம்மிக்க ஒரு சாத்தியப்பாடாகவே, ஆனால் ஒரு சில ஆண்டுகளுக்குள் இது மிகவும் சாத்தியமான ஒன்றாகலாம்" என்றது கருத்துரைக்கிறது.

சீனா, ரஷ்யா, ஈரான் மற்றும் பிற நாடுகளும் ஒரு பகிரங்கமான மோதலைத் தூண்டாமலேயே "சுரண்ட" முனைந்துள்ள, அமெரிக்காவின் "பாதிப்பிற்குரிய" உலகப் பகுதிகளான "மங்கலான பிரதேசங்கள்" (grey zone) என்றழைக்கப்படுவதில் அமெரிக்கா அச்சுறுத்தப்பட்டுள்ளதாக அது வலியுறுத்துகிறது. அது, தென் சீனக் கடலில் சீனா உரிமை கோரும் பகுதிகளையும், கிரிமியாவை ரஷ்யா இணைத்துக் கொண்டதையும், ஈராக், சிரியா மற்றும் லெபனானில் ஈரானின் அரசியல் செல்வாக்கையும் எடுத்துக்காட்டுகளாக முன்வைக்கிறது.

ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலையீடுகளோ, Economist ஆல் முற்றிலும் நியாயமாக கருதப்படுகிறது. சிரியாவில், ரஷ்ய மற்றும் ஈரானிய ஆதரவிலான அரசாங்கத்தைத் தூக்கி வீச அமெரிக்கா ஏழாண்டு காலம் ஆட்சி மாற்றத்திற்கான சதியில் ஈடுபட்டிருந்தது. அந்நாட்டின் மூன்றில் ஒரு பங்கு பகுதியை நடைமுறையளவில் ஆக்கிரமிக்கவும், குர்திஷ் மற்றும் இஸ்லாமிய போராளிகள் குழுக்களில் இருந்து 30,000 பலமான பினாமி இராணுவத்தை ஒன்றுதிரட்டவும் உத்தேசித்துள்ளதாக வாஷிங்டனின் இம்மாத அறிவிப்பு, ஈரான் அல்லது ரஷ்யாவுடன் மட்டுமல்ல, மாறாக அதன் பெயரளவிலான நேட்டோ கூட்டாளி துருக்கி உடனும் நேரடி மோதல்களுக்கான நிலைமைகளை உருவாக்கி உள்ளது.

இணையத்தின் மீது அரசு கட்டுப்பாடு மற்றும் தணிக்கையைத் திணிக்க அமெரிக்காவிலும் மற்றும் சர்வதேச அளவிலும் நடத்தப்பட்டு வரும் வெறித்தனமான நகர்வுகளுக்கு இடையே, அனுமானிக்கத்தக்க வகையில், அப்பத்திரிகை "மேற்கத்திய அமைப்புகள் மீதான நம்பிக்கையைப் பலவீனப்படுத்தவும், தேர்தல்களில் தலை நுழைத்து வெகுஜன இயக்கங்களை ஊக்குவிக்கவும், சமூக ஊடகங்களில் விதிமீறிய கணினி நிரல்கள் (bots) மற்றும் "இட்டுக்கட்டப்பட்ட செய்திகளைப் பயன்படுத்தி மனக்குறைகள் மற்றும் தப்பெண்ணங்களைத் தூண்டிவிடவும்" ரஷ்யா முனைந்துள்ளதாக அப்பத்திரிகை ரஷ்யாவைக் குற்றஞ்சாட்டுகிறது.

தொழில்நுட்ப நிறுவனங்கள் இராணுவத்துடன் இன்னும் அதிகமாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்றும், அதேவேளையில் "செல்வாக்கு மிக்க நடவடிக்கைகளையும்" மற்றும் "மக்கள் கருத்துக்களில் பாரியளவில் தந்திரம் செய்வதையும்" எதிர்ப்பதற்காக என்ற மோசடியான சாக்குப்போக்கில், எதிர்ப்பு கண்ணோட்டங்களை அணுகுவதைத் தடுப்பதற்காக அரசு எந்திரத்துடன் பெருநிறுவனங்கள் இணைந்து இயங்க வேண்டுமென்றும் அது வலியுறுத்துகிறது.

அமெரிக்க அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், அது ஏற்கனவே 700 பில்லியன் டாலரை நெருங்கி வரும் வருடாந்தர வரவு—செலவு திட்டக்கணக்கு பற்றாக்குறையில் சென்று கொண்டிருக்கையில், "பணத்தைத் தேடுவது மற்றொரு பிரச்சினையாக இருக்கும்" என்று அது போகிற போக்கில் குறிப்பிட்டு செல்கிறது.

போர் தயாரிப்புகளுக்காக சமூகத்தின் ஒவ்வொரு அம்சமும்

**அமெரிக்க அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், அது ஏற்கனவே 700 பில்லியன் டாலரை நெருங்கி வரும் வருடாந்தர வரவு செலவு திட்டக்கணக்கு பற்றாக்குறையில் சென்று கொண்டிருக்கையில், "பணத்தைத் தேடுவது மற்றொரு பிரச்சினையாக இருக்கும்" என்று அது போகிற போக்கில் குறிப்பிட்டு செல்கிறது.**

அடிபணிய செய்யப்படுவதானது, அமெரிக்க தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கைத் தரங்கள் மற்றும் நிலைமைகள் தொடர்ந்து அழிக்கப்படுவதன் மூலமாகவும், அத்துடன் சேர்ந்து அதன் ஜனநாயக உரிமைகள் அகற்றப்பட்டும் மற்றும் எதிர்ப்பு ஒடுக்கப்படுவதுடனும் சேர்த்து விலை கொடுக்கப்படும் என்பதே உண்மை.

Economist பத்திரிகை நிறைவு செய்கையில், ஜோர்ஜ் ஓர்வெல் "நியூஸ்பீக்" (Newspeak) இன் எதிர்பாரா எதிரொலியாக, கோரப்பற்களுடன் ஆயுதமயப்பட்ட மற்றும் அதன் போட்டியாளர்களைத் துடைத்தழிக்க நிரந்தரமாக அச்சுறுத்துகின்ற, "ஒரு பலமான அமெரிக்கா", "உலக சமாதானத்திற்கு சிறந்த உத்தரவாத மளிப்பவராக" இருக்குமென நிறைவு செய்கிறது.

எவ்வாறிருப்பினும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் அதன் போட்டியாளர்களை அடிபணிய வைக்க மிரட்ட முடியுமென்ற அதன் சொந்த ஆய்வு முடிவை அது திடமாக நம்புகிறது என்பதுதான் அந்த அறிக்கையின் மிகவும் உறைய வைக்கும் அம்சமாகும். சீனா மற்றும் ரஷ்யாவை நோக்கிய முன்பினும் அதிக ஆக்ரோஷமான இராணுவ நிலைப்பாட்டின் அபிவிருத்தியானது, போர் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறை, குறைக்கவில்லை, அதிகரிக்கவே செய்கிறது.

"ஓர் எதிரியின் உள்நோக்கங்களைப் புரிந்து கொள்ளத் தவறி, கட்டுப்பாட்டை மீறிச் செல்லக்கூடிய, ஒரு திட்டமிடப்படாத தீவிரப்பாட்டுக்கு இட்டுச் செல்லும் தவறான கணக்கீட்டில் தான்," "மிகப்பெரிய அபாயம் தங்கியுள்ளது," என்றது குறிப்பிடுகிறது.

இங்கு என்ன குறிப்பிடப்படுகிறது என்றால் ஓர் அணுஆயுத மனித பேரழிவுக்குள் இட்டுச்செல்லும் மோதலாகும். அக்கட்டுரை RUSI சிந்தனை குழாமின் ஒரு பகுப்பாய்வாளர் ரொம் பிளான்ட் ஐ மேற்கோளிடுகிறது: "ரஷ்யா மற்றும் அமெரிக்காவைப் பொறுத்த வரையில், அணுஆயுதங்களே அவற்றின் முதன்மையை பேணி வைத்துள்ளது. அவர்கள் அவர்களது பணத்தை எவ்வாறு செலவிடுகிறார்கள் என்பதை மட்டுமே நீங்கள் கவனிக்க வேண்டும்."

வரவிருக்கும் தசாப்தங்களில் அமெரிக்கா 1.2 ட்ரில்லியன் டாலர் செலவில் அதன் ஒட்டுமொத்த அணுஆயுத தளவாடங்களையும் மேம்படுத்துகிறது. ரஷ்யா அதன் அணுஆயுத தகைமை கொண்ட ஏவுகணைகள், குண்டுவீசிகள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களை மேம்படுத்துகிறது. பிரிட்டன் மற்றும் பிரான்சைப் போலவே, சீனா அதன் மிகச் சிறிய அணுஆயுதப் படைகளின் அளவையும் தகைமையையும் வேகமாக விரிவாக்கி வருகிறது. அணுஆயுதமேந்திய நாடுகளைத் "தடுப்பதற்காக", ஜேர்மனி, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவிலும் கூட அணுஆயுதங்களைப் பெறுவதன் மீது ஆளும் வட்டாரங்களில் விவாதங்கள் நடந்து வருகின்றன.

21 ஆம் நூற்றாண்டில் இந்த மடத்தனமான அணுஆயுத போட்டியானது, தவிர்க்கவியலாத வகையில் முதலாளித்துவ அமைப்புமுறையின் முரண்பாடுகளில் இருந்து எழுகிறது. உலகளாவிய புவிசார் மூலோபாய மற்றும் பொருளாதார மேலாதிக்கத்திற்காக எதிர்விரோத தேசிய—அரசுகளுக்கு இடையிலான இந்த மோதலானது, முதலாளித்துவ அமைப்புமுறையின் கையாளவியலாத நெருக்கடியினதும் மற்றும், சந்தைகள் மற்றும் ஆதார வளங்கள் மீது கட்டுப்பாட்டைப் பெறுவதற்கான மூர்க்கமான மோதலினதும் தவிர்க்கவியலாத விளைவாகும்.

மார்க்சிச புரட்சியாளர் விளாடிமீர் லெனின் எழுதினார், உலகப் போர் சகாப்தம் என்பது உலக புரட்சியின் சகாப்தமாக இருக்கும். போர் அபாயத்தை அதிகரிக்கின்ற முதலாளித்துவ அமைப்பு முறையைத் தூக்கி வீசுவது, மனித நாகரீகம் உயிர் பிழைப்பதற்கான அத்தியாவசிய அவசியமாகும்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவும் (ICFI) மற்றும் அதன் பிரிவுகளும், தொழிலாள வர்க்கத்தின் ஒரு சர்வதேச, போர்—எதிர்ப்பு, சோசலிச இயக்கத்தைக் கட்டியெழுப்ப போராடி வருகின்றன. Economist போன்ற பத்திரிகைகளின் பக்கங்களில் அணுஆயுத போருக்கான சாத்தியக்கூறு மீதான பகிரங்க விவாதம், ஆழ்ந்து சிந்திக்கும் தொழிலாளர்கள், இளைஞர்கள் அனைவரையும் நமது போராட்டத்தில் இணைய உத்வேகப்படுத்தும்.

**James Cogan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்னதாக வட கொரியா மற்றும் தென் கொரியாவுக்கு இடையே இறுக்கம் தளர்ந்துள்ள நிலையிலும் மற்றும் ட்ரம்ப் வெள்ளை மாளிகையிடமிருந்து வந்த "நெருப்பு கக்கும் சீற்றத்தில்" தற்காலிக அமைதி நிலவுகின்ற இந்த திரைமறைவிற்குப் பின்னால், பென்டகனும் சிஐஏ உம் வட கொரியாவுக்கு எதிராக அணுஆயுதங்களைப் பயன்படுத்துவது உட்பட ஒரு முன்கூட்டிய போருக்கான தயாரிப்புகளை முன் நகர்த்துகின்றன என்பதற்கு அங்கே அறிகுறிகள் அதிகரித்து வருகின்றது.


ஒரு முழு அளவிலான போரை தூண்டிவிடாது என்ற தவறான நிரந்தரமாக தடுக்க" உள்ளது என்று அந்த சிஐஏ இயக்குனர் தெரிவித்தார்.

கிம் யொங் யுன் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் கோருவதன் மூலமாக "அவர் நேரத்தை வீணடித்துக் கொண்டிருப்பதாக" வெளியுறவுத்துறை செயலர் றெக்ஸ் ரில்லர்சனுக்கு கடந்த அக்டோபரில் ட்ரம்ப் அளித்த எரிச்சலான கூற்றால் பொய்யாகிப் போன கூற்றை ட்ரம்ப் நிர்வாகம் "இராஜாங்க வழிவகை தீர்வுக்கு" பொறுப்பேற்றுள்ளதாக அவர் வலியுறுத்திய போதினும் பொம்பியோ, "ஜனாதிபதி எல்லாவித சாத்தியக்கூறுகளையும் கொண்டிருக்கும் வகையில், பல்வேறு விடயங்களை நம்மால் வழங்க முடியும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக," பென்டகனுடன் இணைந்து சிஐஏ "பல விருப்பத்தேர்வுகளுக்கு தயாரிப்பு" செய்து வருவதாக தெரிவித்தார்.

"ஒரு முன்கூட்டிய தாக்குதலுக்கான ஆற்றல் அல்லது அறிவைக் குறித்து வழங்கும்," என்று விமானப்படை அறிக்கை ஒன்று குறிப்பிட்டது. "50,000 அடி உயரத்தில் அதிவேகத்தில் பறக்கும் ஆற்றல் பெற்ற B-52 ரக குண்டுவீசிகள், அணுஆயுதங்களை அல்லது அணுஆயுதமல்லாத குண்டுகளுடன் துல்லியமாக உலகளவில் வழிநடத்தப்பட்டு செல்லக்கூடிய தகைமை கொண்டவையாகும். இந்த முன்னோக்கிய நிலைநிறுத்தல், இந்தோ—பசிபிக் பிராந்தியத்தில் அதன் கூட்டாளிகள் மற்றும் பங்காளிகளுக்கு அமெரிக்கா ஏற்றிருக்கும் தொடர்ச்சியான பொறுப்புறுதியைக் எடுத்துக்காட்டுகிறது," என்று அந்த அறிக்கை குறிப்பிட்டது.

ஒரு வாரத்திற்கு முன்னர், அணுஆயுதம் தாங்கிய கண்டறியவியலாத மூன்று B-2 ரக குண்டுவீசிகளை பென்டகன் குவாம் விமானப்படைத் தளத்தில் நிலைநிறுத்தியது.

# பதுங்கி பாயப்போகிறதா அமெரிக்கா?




"பயன்படுத்துக் கூடும்" என்று புளூம்பேர்க் அறிவித்தது.

இதற்கிடையே, வழிநடத்தத்தக்க ஏவுகணைகளைக் கொண்ட நடுத்தர அழிப்புபோர்க்கப்பல்கள் (destroyers) மற்றும் பிற வகை போர்க்கப்பல்களின் தாக்கும் படைப்பிரிவுடன் சேர்த்து, அமெரிக்க கப்பற்படையின் Nimitz ரக பிரமாண்ட விமானந்தாங்கி போர்க்கப்பல் USS கார்ல் வின்சென் இம்மாத தொடக்கத்தில் சான் டெய்கோவில் இருந்து புறப்பட்டது, இது பெப்ரவரி 9 இல் தென் கொரியாவின் Pyeongchang இல் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் தொடங்குவதற்கு முன்னதாக கொரிய தீபகற்பத்தைச் சென்றடைந்து, அங்கே ஏற்கனவே ஜப்பானில் நிலைநிறுத்தப்பட்டுள்ள USS ரோனால்டு ரீகன் விமானந்தாங்கி போர்க்கப்பல் உடன் இணையும்.

எதிர்பார்ப்புடன் இருந்தாலும் கூட, வட கொரிய அணுஆயுத தளங்கள் மீது அமெரிக்க விமானத் தாக்குதல்களை உள்ளடக்கிய ஓர் "மூக்குடைக்கும்" தாக்குதல் (bloody nose attack) என்றழைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அமெரிக்க இராணுவத்திற்கும் உளவுத்துறை எந்திரம் மற்றும் ட்ரம்ப் நிர்வாகத்திற்கும் இடையே திரைக்குப் பின்னால் நடந்து வரும் விவாதங்கள் குறித்து அமெரிக்க பெருநிறுவன ஊடகங்களில் பல்வேறு செய்திகள் வெளியாகி உள்ளன.

அரிதான ஒரு பகிரங்க உரையில், சிஐஏ இயக்குனர் மைக் பொம்பியோ (Mike Pompeo) இந்த திட்டங்களைச் சூசகமாக சுட்டிக்காட்டினார். அமெரிக்க நிறுவன பயிலகம் எனும் வலதுசாரி சிந்தனை குழாமில் செவ்வாயன்று பொம்பியோ உரையாற்றுகையில், அமெரிக்க பெருநிலத்திற்கு எதிராக ஓர் அணுஆயுத தாக்குதல் நடத்தும் ஆற்றலை பியொங்யாங் "இன்னும் ஒரு சில மாதங்களில்" எட்டிவிடுமென எச்சரித்தார்.

வாஷிங்டன் "இந்த அபாயத்தை முன்கூட்டியே அகற்ற உள்ளது" மற்றும் வட கொரியா "அணுஆயுதமயப்படுவதை கவனித்துக் கொள்வதை [அவர்] மற்றவர்களிடம் விட்டுவிடுவார்" என்பதையும் அவர் சேர்த்துக் கொண்டார்.

எவ்வாறிருப்பினும் இதற்கான "தகைமை" சம்பந்தமான பிரச்சினை, ஏற்கனவே அமெரிக்க இராணுவம் எடுத்த தொடர்ச்சியான பல அச்சுறுத்தும் நடவடிக்கைகள் மூலமாக முடிவெடுக்கப்பட்டுவிட்டது.

விமானப்படை, இம்மாத தொடக்கத்தில், லூசியானாவின் பார்க்ஸ்டேல் விமானத்தளத்தின் 300 விமானப் படையினரோடு சேர்ந்து ஆறு B-52H ரக Stratofortress குண்டுவீசிகளை, குவாமில் இருந்த ஆறு B-1B Lancer ரக குண்டுவீசிகளுக்குப் பதிலாக பிரதியீடு செய்தது. B-1B குண்டுவீசிகளைப் போலன்றி, அணுஆயுதங்களைத் தாங்கி செல்லக்கூடிய ஆற்றல் கொண்ட B-52s இன் நிலைநிறுத்தல், ஒரு மிகப் பெரிய தீவிரப்பாட்டைக் குறிக்கிறது.

"பசிபிக்கிற்கு B-52H மீண்டும் வந்திருப்பது [அமெரிக்க பசிபிக் கட்டளையகம்] மற்றும் அதன் பிராந்திய கூட்டாளிகள் மற்றும் பங்காளிகளுக்கு ஒரு நம்பகமான, மூலோபாய சக்தியைக் காட்டுவதற்கான அடித்தளத்தை

இந்த மூன்று குண்டுவீசிகளும் B-52s, B-2s மற்றும் B-1Bs ஆகியவை வட கொரியாவின் இலக்குகளில் இருந்து வெறும் 2,200 மைல் தொலைவில் அமைந்துள்ள குவாமில் ஒருசேர நிறுவப்பட்டுள்ளன என்பது அண்மித்து இரண்டரை ஆண்டுகளில் முதல் நிலைநிறுத்தலாகும்.

புளூம்பேர்க் செய்தி நிறுவனம் புதனன்று அறிவிக்கையில், அமெரிக்க விமானப்படை "அமெரிக்காவின் மிகப் பெரிய அணுஆயுதமல்லாத குண்டின் ஒரு மேம்பட்ட வடிவத்தை அதாவது, இப்போது குவாமில் அமைக்கப்பட்டுள்ள கண்டறியவியலாத B-2 ரக குண்டுவீசிகள் மட்டுமே கொண்டு செல்லக்கூடிய 30,000 பவுண்டு எடையிலான "பாதாளங்களையும் தகர்க்கும்" ஒரு குண்டை, நிலைநிறுத்தி இருப்பதாக" குறிப்பிட்டது.

"வட கொரியாவில் நிலத்தடியில் அமைக்கப்பட்ட அணுஆயுத ஏவுகணை தளங்களைத் தாக்குவதென அமெரிக்கா முடிவெடுத்துவிட்டால்," கடந்த ஏப்ரலில் ஆப்கானிஸ்தான் மீது வீசப்பட்ட அனைத்து குண்டுகளுக்கும் தாய் என்றழைக்கப்படும் MOAB ஐ விட மிகப் பெரியதான இந்த ஆயுதத்தை,

பென்டகனின் அதிநவீன F-35B ரக போர்விமானங்களைத் தாங்கியவாறு, 40,000 டன் எடையுள்ள அதிநுட்பமான விமானந்தாங்கி போர்க்கப்பல் USS Wasp இப்போது ஜப்பானில் இருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த போர் விமானங்கள் வட கொரியாவில் உள்ள நிலத்தடி அணுசக்தி அமைப்புகள் மற்றும் கட்டளையகங்கள் மற்றும் கட்டுப்பாட்டு வசதிகளுக்கு எதிராக பயன்படுத்தத்தக்கதும், நிலத்தை ஊடுருவி பாதாளத்தில் சென்று வெடிக்கும் ஆயுதமுமான B61 ரக அணுவெப்பாற்றல் புவிசர்ப்பு குண்டுகளை (thermonuclear gravity bombs) ஏந்திச் செல்ல தகைமை கொண்டவையாகும்.

அணுஆயுத தாக்கும் படைகளின் இந்த உருவாக்கத்திற்கு சமாந்தரமாக, அமெரிக்க தரைப்படையும் மற்றும் தரைப்படையின் வான்படைப்பிரிவு துருப்புகளும், அமெரிக்கா எங்கிலுமான இராணுவத் தளங்களில் ஒரு படையெடுப்புக்கான ஒத்திகையில் ஈடுபட்டுள்ளன, அதேவேளையில் வெளிநாடுகளுக்குத் துருப்புகளை விரைவாக நகர்த்துவதற்குப் பயன்படுத்தப்படும் வகையில் "ஆட்சேர்ப்பு மையங்களில்" ஆட்களைச் சேர்க்க காத்திருப்புப் பட்டியலில் இருந்த 1,000 தரைப்படையினர் பணியாற்றுவதற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கொரிய தீபகற்பத்தில் திட்டமிடப்பட்டிருந்த கூட்டு இராணுவ பயிற்சிகளை ஒத்தி வைக்க தென் கொரியா வாஷிங்டனை இணங்க வைத்ததும் தான், இந்த துடிப்பார்ந்த இராணுவ தயாரிப்புகள் நடந்து வருகின்றன. பியொங்யாங், அந்த கூட்டு இராணுவப் பயிற்சியை படையெடுப்புக்கான ஓர் ஆத்திரமூட்டும் தயாரிப்பு என்று கண்டித்திருந்தது.

ஜனாதிபதி Moon Jae-in இன் தென் கொரிய அரசாங்கம், வரவிருக்கும் 2018 ஒலிம்பிக் குளிர்கால விளையாட்டுக்களை வட கொரியாவுடன் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு பயன்படுத்தி உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட கொரியா இந்த விளையாட்டுக்களில் மிகப் பெரியளவில் பிரதிநிதிகள் குழுவை அனுப்ப உடன்பட்டுள்ளது, அத்துடன் தென் கொரிய மற்றும் வட கொரியாவின் பெண்களுக்கான பனிச்சறுக்கு ஹாக்கி விளையாட்டு வீராங்கனைகள் முதல் முறையாக ஓர் ஒருங்கிணைந்த குழுவாக கலந்துகொள்ள இணைகிறார்கள்.

“உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்” கொரியர்கள் அனைவரும் "விரைவாக வட கொரிய மற்றும் தென் கொரிய உறவுகளை மேம்படுத்துமாறும்", மற்றும் ஒரு "சுதந்திரமான மறுஐக்கியத்திற்கான திருப்பம் எடுக்க" செயல்படுமாறும் அழைப்பு விடுத்து, வியாழனன்று Kim Jong-un சமாதான அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

இதற்கிடையே டாவோஸில், தென் கொரியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் Kang Kyung-wha ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் கூறுகையில், “அணுசக்தி பிரச்சினையை பேச்சுவார்த்தைகள் மற்றும் இராஜாங்க முன்முயற்சிகள் மூலமாக தீர்க்க வேண்டும். இராணுவ தீர்வு யோசனையை ஏற்க முடியாது,” என்றார்.

வாஷிங்டன் தன்னிச்சையாக ஓர் இராணுவத் தாக்குதலை நடத்தாது என்பதற்கு அது தெளிவான உத்தரவாதங்களை சியோலுக்கு வழங்கினால், என்று கேட்கப்பட்ட போது அப்பெண்மணி கருத்துரைக்க மறுத்தார். அவர் தொடர்ந்து கூறுகையில், “எங்கள் தலைவிதி தான் பணயத்தில் உள்ளது. கொரிய தீபகற்பத்தில் எடுக்கப்படும் எந்தவொரு விருப்பத் தெரிவையும், எங்களுடன் இணைந்து செல்லாமல் நடைமுறைப்படுத்த முடியாது,” என்றார்.

எவ்வாறிருப்பினும், ட்ரம்ப் நிர்வாகம் அமெரிக்க இராணுவ நடவடிக்கை மீது சியோலுக்கு ஏதேனும் தனியதிகாரம் வழங்கி உள்ளதா என்பது எந்த விதத்திலும் தெளிவாக இல்லை. சியோலுக்கும் பியொங்யாங்கிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை, வாஷிங்டன், வட கொரியாவுக்கு எதிராக "அதிகபட்ச அழுத்தமளிக்கும்" அதன் கொள்கைக்கு ஓர் அச்சுறுத்தலாகவும் மற்றும் போருக்கான அதன் தயாரிப்புகளுக்கு ஒரு சாத்தியமான தடையாகவும் பார்க்கிறது என்பதில் எந்த ஐயமும் இல்லை. சியோல் மற்றும் பியொங்யாங்கிற்கு இடையே ஏற்பாடு செய்து கொள்வதற்கான எந்தவொரு நகர்வும், அமெரிக்க போர் முனைவைக் குறைப்பதற்கு பதிலாக, ஆக்ரோஷ இராணுவ வழிவகைகள் மூலமாக தீர்ப்பதற்காக அமெரிக்க ஆளும் ஸ்தாபகம் மற்றும் அதன் இராணுவ மற்றும் உளவுத்துறை எந்திரத்திற்குள் அழுத்தத்தை மட்டுமே அதிகரிக்கக்கூடும்.

அமெரிக்க இராணுவ ஆயத்தப்படுத்தல்களுக்கு இடையே, அமெரிக்க அரசாங்கம், வட கொரியாவின் பொருளாதாரத்தை முடக்கும் நோக்கில் ஒரு புதிய சுற்று தடையாணைகளை விதித்தது. இந்த சமீபத்திய தடையாணைகள் ஒன்பது நிறுவனங்களையும், 16 தனிநபர்கள் மற்றும் ஆறு வட கொரிய கப்பல்களையும் இலக்கில் வைத்தது. அந்த தடையாணை பட்டியலில் சீனாவை மையமாக கொண்ட இரண்டு வர்த்த நிறுவனங்களும் இருந்தன.

இந்த புதிய தடையாணைகளுக்கு பெய்ஜிங் கோபத்துடன் தனது பிரதிபலிப்பை காட்டியது. “எந்தவொரு நாடும் சீன நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் மீது நீதி பரிபாலனைகளுக்கு வெளியே அதன் சொந்த சட்டங்களைப் பயன்படுத்துவதை, சீனா தீர்மானமாக எதிர்க்கிறது,” என்று வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறினார்.

கொரிய தீபகற்பத்தில் தொடர்ந்து வரும் போர் அபாயம், மில்லியன் கணக்கானவர்களின் உயிரைப் பறிக்கக்கூடிய ஓர் அணுஆயுத மோதல் அச்சுறுத்தலை கொண்டிருப்பதுடன், இதை அணுசக்தி விஞ்ஞானிகளின் சஞ்சிகை வியாழனன்று மேற்கோளிடுகையில், 1947 இல் இருந்து கடைபிடிக்கப்பட்டு வரும் அதன் அணுவாயுத கடிகாரம் (Doomsday Clock) என்றழைக்கப்படுவது, 30 நொடிகள் முன்னோக்கி நகர்த்தப்பட்டு, நள்ளிரவுக்கு இரண்டு நிமிடங்களுக்கு முன்கூட்டி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டது. அக்குழு இந்த அணுஆயுத போர் அச்சுறுத்தலை மரணகதியிலானதாக மதிப்பிட்டுள்ளமை, கடந்த ஏழு தசாப்தங்களுக்கும் அதிகமான காலத்தில் இது இரண்டாவது முறையாகும்.

ஈரான் அணுஆயுதஉடன்படிக்கையை முடித்துக் கொள்வதற்கான ட்ரம்ப் நிர்வாகத்தின் அச்சுறுத்தலையும், உலகின் இரண்டு மிகப்பெரிய அணுஆயுத சக்திகளான அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுக்கு இடையே அதிகரித்து வரும் பதட்டங்களையும் அது மேற்கோளிட்டுக் காட்டியது. அது ட்ரம்ப் நிர்வாகத்தினது அணுஆயுத தோரணை மீளாய்வு அறிக்கைமீதும் கவனம் செலுத்த அழைப்புவிடுத்தது, இந்த அறிக்கையானது "அமெரிக்க பாதுகாப்பு திட்டங்களில் அணுஆயுதங்களின் வகைகள் மற்றும் அவை வகிக்கும் பாத்திரங்களை அதிகரிக்கவும் மற்றும்" அவற்றின் பயன்பாட்டின் "உச்ச வரம்பைக் குறைக்கவும்" கோருகிறது.

இந்த நிர்வாகமும் பென்டகனும் சமீபத்தில் ஒரு தேசிய பாதுகாப்பு மூலோபாயம் மற்றும் தேசிய இராணுவ மூலோபாயத்தையும் வெளியிட்டுள்ளன, இவை இரண்டு தசாப்த கால முந்தைய "பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போர்" என்பதை, "வல்லரசு" மோதல் மற்றும் உலக போருக்கான தயாரிப்பு என்பதைக் கொண்டு பிரதியீடு செய்து, அமெரிக்க மூலோபாயத்தில் ஓர் அடிப்படை மாற்றத்தை விவரித்திருந்தன, அதில் ஒரு வலியுறுத்தலாக வாஷிங்டனின் அணுஆயுத தளவாடங்களை கட்டியெழுப்புவதும் இடம் பெற்றுள்ளது.

By Bill Van Auken


BEST DEAL FROM ROGERS

Student Offer is Back

High Speed Unlimited Internet

Free advance Wifi Modem

$ 49.99 Only

Home Phone, Internet Digital Basic TV $ 99.95

Tamil Channel Starting from $ 8.00

Internet Starting from $ 49.95



Home Phone $ 8.99 only

தமிழ் TV அலைவரிசைகளின் புதிய பொதி

VIJAY JAYA TV KTV

$30 மாதம் ஒன்றுக்கு



தமிழில் தொடர்புகளிற்கு:

ROGERS

SANJAY : 416.315.2917


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தந்த இல்லம் புதிய கட்டட திறப்பு விழா



அன்னை தந்த இல்லம் ("ஏ.டி.ஐ") அறக்கட்டளை என்பது கனேடிய தமிழர்களின் மாற்றுத் திறனாளிகளுக்குரிய அமைப்பாகும் . 2014 ல் உருவாக்கப்பட்ட இலாப நோக்கமற்ற இவ் அமைப்பு கடந்த மாதம் கனேடிய தமிழர்களுக்கான முழு நேர மையத்தை கனடாவில் முதல் தடவையாக திறந்து வைத்துள்ளது .இந்நிறுவனம்

அவர்களது சுயநிர்ணய உரிமை மற்றும் சுதந்திரம் மற்றும் சம வாய்ப்புகள் ஆகியவற்றை பெருமைப்படுத்துவதற்கும் கனடாவின் குடிமக்கள் தங்கள் திறமைகளில் சிறந்த பங்களிப்பிற்காக தேவையான பங்களிப்புகளை வழங்குவதன் மூலமும், பிரதான சமுதாயத்தில் அவற்றை ஒருங்கிணைப்பதே ஆகும்.

மாற்றுத் திறனாளிகளுக்குரிய மக்களுக்கு வாராந்திர நாள் முகாம், DAILI (வேறுபட்ட ஆற்றல்மிக்க சுயாதீனமான வாழ்க்கை முன்னெடுப்பு) ஆகிய சேவைகளை வழங்கி இயங்கிக்கொண்டிருக்கிறது . இந்நிறுவனம் Unit 11 - 151 Nashdene Road, Scarborough ON, M1V 4C4 புதிய இல்லத்தில் மங்களகரமான திறப்பு விழா நடைபெற்றது














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REFINANCE TO LOWER RATES & SAVE UP TO 75%

Your Mortgage Expert

**Sathy** Bagee
VP Business Development
Fisco Licence # M 16002389
416 821 4512



**Good Credit ?**
No Income verification - Low Interest Rate.

**Bad Credit ?**
No Income verification - No Credit Check

VIA FINANCIAL
sathy@viafinancial.ca www.viafinancial.ca
***condition may apply under the guideline of the lenders

**அனைத்து விதமான உடல் பிரச்சனைகளுக்கும் பக்க விளைவுகளற்ற முழுமையான தீர்வுக்கும் நமது 5000 வருட பாரம்பரிய மருத்துவ முறையான ஆயுர்வேத மருத்துவமே சிறந்தது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்**




**Treatments Available For**
PSORIASIS, ECZEMA and all types of skin problems, ARTHRITIS, LOW BACK ACHE, SCIATICA, STROKE, GYNAECOLOGIC PROBLEMS, PCOS, MALE AND FEMALE INFERTILITY, KIDNEYSTONE, PILES, ULCER, HEADACHE, DIABETES, HYPERTENSION, OBESITY, HAIR FALL, DANDRUFF, SPECIAL TREATMENT FOR STRESS RELIEF & ALL KINDS OF MALE SEXUAL PROBLEMS.

இவ்விடத்தில் பாரம்பரிய கேரளா முறைப்படி இங்குள்ள தட்ப வெப்ப நிலைக்கேற்ப சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்படுகிறது

கேரளா பாரம்பரிய முறை பஞ்சகர்மா சிகிச்சை, உடலில் உள்ள நச்சுத்தன்மைகளை நீக்கி புத்துணர்வு அளிக்கும் – ஷிரோதாரா சிகிச்சை, நாட்பட்ட தலைவலி, தலைமுடி உதிரல். போன்றவற்றை நீக்கவல்லது.

மற்றும் ஆயுர்வேத தைலங்களால் அனைத்து வித வாத நோய்களுக்கும் மசாஜ் சிகிச்சையளிக்கப்படும்.



VASISHTA AYURVEDIC

**Vasishta Ayurvedic Wellness Inc**
**2199 Midland Avenue, Unit# 1 Scarborough ON, M1P 3E7**
**For Appointments : (647) 532-1255**
**(416) 291-6730**
www.vasishta.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய வெளிச்சம் ... தொடர்ந்தும் பயணிப்போம்

புதிய வெளிச்சம் தனது மிகப் பெரிதான இரண்டாவது பயணத்தை முடித்துவிட்டு திரும்பியிருக்கின்றது. 2009லிருந்து இன்றுவரை 12 தடவை தாயகம் சென்றுவந்துவிட்டோம். ஆரம்பத்தில் தனிப்பட்ட முயற்சியால் ஈழம் சார்ந்து 'புதிய வெளிச்ச' ஆற்றுப்படுத்துகை, மீள் கட்டுமான எழுச்சி செயற்பாடுகளை தொடர்ச்சியாக செய்து வந்த நாம் 2016ம் ஆண்டு வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் முழுவதும் புதிய வெளிச்சம் செய்து திரும்பியிருந்தோம்.

2016 இல் மேற்கொண்ட வடக்கு, கிழக்கு, மலையகம் முழுவதும் மேற்கொணட புதிய வெளிச்ச தகவல்களிலிருந்து பெற்ற பின்னூட்டல்கள் மூலம் 2018க்கான 'புதிய வெளிச்சம் 2018' பயணிக்க ஆரம்பித்தது.

தனி மனித பங்களிப்பாக 2010லிருந்து இதுவரை பல ஆயிரம் பொலர் பணத்தையும், நேரத்தையும், பயண அசௌகரியங்களையும் இழக்கும் போது அடையும் வலி அங்கு மண்ணில் காலடி வைத்தவுடனும், மக்களை சந்திக்கும் போதும் பறந்துபோய்விடும். இக்கால பயணங்களில் எல்லாம் எனது மனைவி ஜெயகௌரி ஜெயச்சந்திரனின் சகிப்புத்தன்மைதான் மிகப்பெரிய சாத்தியமாக இருந்திருக்கின்றது.

ஏன் இந்த புதிய வெளிச்சம்?

எவ்வகையான உந்துசக்தி இதனை உருவாக்கவும் செயற்படுத்தவும் காரணமாக இருந்தது.

அந்த யாழ்ப்பாண மண்ணிலே ஒன்றரை கிலோமீட்டர் நீல அகலம் கொண்ட சிற்றூரில் பிறந்த நான், எனது பள்ளி பருவத்தில் அனுபவித்த அனுபவங்கள் என்னை ஒரு சமூக பொறுப்புள்ள, ஒரு Social responsibility உள்ள மனிதனாக மாற்றியது. அதுதான் என்னை இயக்குகின்றது, அக்கிராமத்தில் பிறந்த எமது வகுப்பு தோழர்கள் 26 பேர் மாவீரராக அம்மண்ணுக்காக மடிந்ததும், அதில் எனது பிறந்தநாளில் பிறந்து, எனது 21வது பிறந்தநாளில் மாவீரனான இளங்கோவனையும் அவரது கனவுகளையும் இன்னும் மறக்கமுடியவில்லை. இவற்றை எல்லாம் மறந்து கனடாவில் எமது சந்ததியை காப்பாற்ற தப்பி பிழைத்து வந்ததை யாரிடம் போய் நாம் மன்னிப்புக்கேட்க?

எப்படி எம்மை சாந்திபடுத்த முடியும்.

புதிய வெளிச்சம், போரிலிருந்து மீண்டு நிமிர்ந்து நிக்கும் மக்களின் தேவைகளை அறிந்து உரிய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற பெரிய எதிர்பார்ப்புடன் அந்த வகையான செயற்பாடுகளுக்கு வாய்க்கால் அமைக்கும் விதமாகவே புதிய வெளிச்சம் இயங்குகினறது.

எமது செயற்பாடுகளில் ஆர்வம் கொண்ட கனடிய பயணத்தில் கிடைத்த நண்பர்கள் தீபன் ராஜ் மற்றும் Remax அதிபர் ரஜிவ் கோணேஸ் அவர்கள் இந்த வருட புதிய வெளிச்ச செயற்பாட்டை நடத்துவதற்கு தாமாகவே முன்வந்து பங்கெடுத்துள்ளார்கள்.

இந்த வருடம் அவர்களாகவே வந்து கரம் கோர்த்தது போன்று, புதிய வெளிச்சத்தோடு அவர்களுடன் பலரும் வந்து அதை ஒரு செயற்பாட்டு இயக்கமாக மாற்றவேண்டிய கால கட்டாயத்தில் உள்ளோம். தனி மனிதனிடமிருந்து பொறுப்புகள் சமூகமாக மாற்றப்படவேண்டிய கால கட்டாயத்தில் புதிய வெளிச்சமும் அதன் செயற்பாட்டு தேவையும் உணர்த்தியுள்ளது, நிறைய ஆலோசனைகளும், தலைமை தாங்குபவர்களையும் தேடி நிக்கின்றது புதிய வெளிச்சம்.

மேலும் புதிய வெளிச்சத்துக்கு வடிவம் கொடுக்கும் தாயாக பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிரிஷ்ணன் வருகையுடன் எம்மோடு பயணித்த 20க்கு மேற்பட்ட உள்ளூர், வெளிநாட்டு வளவாளர்களுக்கும், உள்ளூரில் அனைத்து இடங்களிலும் உதவிகள் பல புரிந்து, பங்குகொண்ட அத்தனை பேருக்கும் எனது அன்பும் நன்றிகளும்.

மேலும் இங்கிருந்து ஏற்பாடுகளுக்கு உதவிகள் புரிந்த யோகா கார்த்திகேசு, அருண் செல்லப்பா, சாந்த பஞ்சலிங்கம், ரமணன் சந்திரசேகரமூர்த்தி, சின்னத்துரை ஜெயக்குமார் ஆகிய நண்பர்களுக்கும் நன்றிகள்.

உண்மையில் அங்கே உள்ள பாதிப்புகளும் தேவைகளும் வகைப்படுத்தப்பட்டு மிகவும் நுணுக்கமாகவும் தொடர்ச்சியாகவும் பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை நேரில் கண்டோம்.

குறிப்பாக சிறு தொழிவாய்ப்புக்கள், விவசாய ஊக்குவிப்புக்கள், உள்ளக வன்முறைகள், போதைப் பொருள் பாவனை, முறையற்ற பாலியல் தொடர்புகள், சிறுவர் துஸ்பிரயோகம், மதமாற்றம், ஆசிரியர் தராதர வீழ்ச்சி, தற்கொலை, கல்வியில் ஆர்வமின்மை, வெளிநாட்டு மோகம், நிவாரணங்களுக்காக அலைதல், ஒழுங்குபடுத்தப்படாத உதவிகள், திட்டமிடப்படாத உதவி முறைகள் போன்ற பல பிரச்சனைகளை இனம் காண நேர்ந்தது.

இப்பயணம் மூலம்பெற்ற அனுபவமும் அறிவும் மிகவும் முக்கியமானவை. வெறுமனே கண்மூடித்தனமாக இருக்காமல் பிரச்சனைகளை சரியாக இனம் கண்டு தேவைகளையும் உதவிகளையும் முறையாக திட்டமிடவேண்டிய காலத்தில் உள்ளோம்.

இது தொடர்பாக எம்மிடையே ஆரோக்கியமான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வெளிப்படையான செயல்திட்டங்கள் நடைமுறைக்கு வரவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த விரும்புகின்றோம்

ஆரம்பப் புள்ளியாக பின்வரும் மூன்று பரிந்துரைகளை முன்வைக்க விரும்புகிறோம்.

1) கல்வி, பொருளாதார, உளவியல் பிரச்சனைகளை இனங்கண்டு வகைப் படுத்தல்.

2) இவற்றை நிறைவு செய்யும் வழிகளை கண்டடைதல்.

3) இவற்றை முறையாகவும் தொடர்ச்சியாகவும் செய்து முடித்தல்.

What Next? இனி என்ன என்ற கேள்விக்கு பதில் தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் உங்கள் முன்னாலேயே விடுகின்றோம்.

தொடர்ந்தும் பயணிப்போம்



**நவஜீவன் அனந்தராஜ்**
புதிய வெளிச்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





CASH INCENTIVES ON SELECT 2015 MODELS. MAXIMUM CASH INCENTIVE ONLY ON 2015 PILOT MODELS.

HONDA

**Formula Honda**

*Where You're Treated like Family.*



Shan Sarvananthan
*les & Leasing Consultant*
Cell 416-720-1184

2240 Markham Road
Scarborough,
ON, M1B 2W4
Telephone:
416-754-4555

formulahonda.com






Rajah Tharmalingam
*Sales & Leasing Consultant*
Cell 647-833-4998


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ekuruvi 2018 Night

# April 06

## 416 - 272 - 8543

*Call For: Sponsors | Participates | Volunteers*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org